
1-15 நவம். '91 ரூ. 2.50

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

பஸ் கட்டண உயர்வு:
ஏழை மக்கள் தலையில்
ஏறி மிதிக்கிறார் ஜெயா



## பாசிச மும்மூர்த்திகள்

படிப்பகம்

www.padippakam.com



# நவம்பர் புரட்சி நாள்:
# மீண்டும் உதிக்கும்!

நவம்பர் 7, 1917

ரசியாவில் பாட்டாளி வர்க்க ஆட்சி மலர்ந்த நாள்!

பூமிப் பரப்பில் 5-ல் ஒரு பங்கில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஒழித்த நாள்! அடிமைப்பட்ட நாட்டு மக்கள் மனதில் விடுதலைக் கனலை ஏற்றிவைத்த நாள்! முதலாளித்துவ சகாப்தம் முடிந்து சோசலிச சகாப்தம் தொடங்கியதை முழங்கிய நாள்! அந்த நவம்பர் புரட்சி நாளுக்கு இன்று 75-வது பிறந்த நாள்!

'சொல்லில் சோசலிசம் செயலில் ஏகாதிபத்தியம்' என சமூக ஏகாதிபத்தியமாய் உலவி வந்த ரசிய புதிய ஜார்கள் சோசலிச முகமூடியைக் கழட்டிவிட்டனர். அப்பட்டமான முதலாளித்துவத்தை அரங்கேற்றி வருகின்றனர். இதையே கம்யூனிசத்தின் தோல்வி - கம்யூனிசம் தோன்றிய நாட்டிலேயே கம்யூனிசம் செத்துவிட்டது - கம்யூனிசத்தை மக்கள் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள் என்று ஏகாதிபத்தியங்களும் அவற்றின் கூலிப் பிரச்சாரகர்களும் குதூகலித்து கூச்சலிடுகின்றனர்.

ஆனால் முதல் உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்திய நாடுகளிலே வேலையின்மை - வறுமை - பசி - பஞ்சம் - பட்டினிச் சாவுகள் தலைவிரித்தாடிய போது அவற்றின் வாடை கூட இன்றி சோசலிச ரசியா சொர்க்க பூமியாக பரிணமித்தது!

கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, போதை என ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரத்தை உலகம் முழுவதும் பரப்பியது ஏகாதிபத்தியம்! இதற்கு மாறாக சமத்துவம், பரஸ்பர உதவி, பொதுமை நலம் என உழைப்பின் உன்னதத்தை ஏகாதிபத்திய சீரழிவுக்கு எதிராக பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை சோசலிசம் உலக மக்களுக்கு வழங்கியது!

ஏடறிந்த மனித வரலாற்றில் இம்முயற்சி புதியது. முன் அனுபவம் ஏதுமில்லாதது. பல ஆயிரம் ஆண்டுகளாக தனியுடமைச் சிந்தனையில் சிக்கிக் கிடந்த மனித சமுதாயத்தை அதிலிருந்து உடைத்து பொதுவுடமைப் பாதையில் மீட்டுச் செல்லும் உன்னத முயற்சி!

இப்பணி கடினமானது! எதிர்பாராத இடர்பாடுகள் நிறைந்தது! இதைச் செய்து முடிக்க கற்பனைக் கடவுளர்களை, அற்புதங்களைக் காட்டி மக்களை மயக்க முடியாது! மாறாக பிற்போக்கு, அறியாமை இருளைப் போக்கி அதே மக்களது உழைப்பின் ஆற்றலைக் கட்டவிழ்த்து விட வேண்டிய கடினமான, இடர்பாடு மிக்க உன்னதப் பணியைச் சாதிக்க வேண்டும்!

இதில் சிறு தவறு நேரினும் சோவியத் போல, செஞ்சீனம் போல பின்னடைவு தவிர்க்க முடியாதது. ஆனால் இது தற்காலிகமானதே! இதுவே கம்யூனிசத்தின் தோல்வி அல்ல!

கம்யூனிசத்தை நோக்கிய பயணத்தின், சோசலிச முயற்சி சுமார் 100 ஆண்டு அனுபவமே கொண்டது! இளமையானது!! சொத்துடமை சமூகமோ பல ஆயிரம் அனுபவம் மிக்கது! முதிர்ந்தது!!

இயற்கை விதிப்படியே இளமையானது வளரும்! வெல்லும்! முதுமையானது எவ்வளவு பெரியதாயினும் அழியும்! மறையும்! இது தவிர்க்க முடியாதது!

உலகில் மீண்டும் நவம்பர்கள் தோன்றும்! ஏகாதிபத்தியம் வீழ்த்தப்படும்! கம்யூனிசம் வெல்லும்!

## இடையூறுகளைக் கடந்து....
## 7-ஆம் ஆண்டில் 'புதிய ஜனநாயகம்'

அன்பார்ந்த வாசகத் தோழர்களே!

புதிய ஜனநாயகம், கடந்த இதழ் 6/21-க்குப் பின் இரண்டு இதழ்கள் இடைவெளி விட்டு தற்போது வெளி வருகிறது. பார்ப்பன ஜெயா கும்பலின் பாசிச அடக்குமுறை தொடர்பாக இருந்த இயக்க வேலைகள் காரணமாகவும், பத்திரிக்கை அச்சடிக்குமிடங்களில் உரிமையாளர்கள் பயந்து ஏற்படுத்திய பிரச்சினைகளாலும் பத்திரிக்கையை தொடர்ந்து கொண்டுவர இயலவில்லை. இதனால் மூன்று இதழ்களைச் சேர்த்து கூடுதலான பக்கங்களுடன் வெளியிட்டுள்ளோம். இடமின்மை காரணமாக கேள்வி - பதில் பகுதி மற்றும் சிவந்த கண்கள் கவனிக்கப்படும் பகுதி இந்த இதழில் இடம்பெறவில்லை.

மேலும் புதிய ஜனநாயகம் இந்த இதழோடு தனது 6-வது ஆண்டை முடித்துக் கொண்டு 7-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. வழக்கம் போல் இந்த ஆண்டும் விழா கொண்டாட முடியாத சூழ்நிலையை தாங்களே உணர்வீர்கள். விழாவின் மூலம் தங்களை நேரில் சந்தித்து தங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் போனாலும் பத்திரிக்கை மூலம் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க காத்திருக்கிறோம். எனவே, உங்கள் கேள்விகள், கருத்துக்களை பத்திரிக்கை முகவரிக்கு அனுப்பித் தாருங்கள். கருத்தாலும், கரத்தாலும் நீங்கள் தரும் தொடர் ஆதரவுடன், இடர்களை தகர்த்தெறிய முடியும் என்ற நம்பிக்கையுடன் 7-ஆம் ஆண்டு பயணத்தை தொடர்கிறோம்.

புரட்சிகர வாழ்த்துக்களுடன்
ஆசிரியர்குழு.

# மருத்துவர்களின் அலட்சியம்
# ஏழைப் பெண்ணின் அவலம்

மருத்துவ அதிகாரிகளின் அலட்சிய போக்கிற்கும், அரசின் அக்கறையற்ற தன்மைக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது. இப்பெண்ணுக்கு நேர்ந்த சம்பவம். மதுரை - போடியில் சுப்புராஜ் நகர் புதுக்காலனியில் வசித்துவரும் து.அன்னமயில் (கணவர் பெயர் வி.துரைச்சாமி) என்பவர் 19.4.85 அன்று போடி அரசு மருத்துவமனையில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டார். மருத்துவர் எஸ்தர் மற்றும் மருத்துவ அதிகாரியின் அலட்சியப் போக்கு காரணமாக அறுவை சிகிச்சைக்குப் பின் பல உடற்கூறு மற்றும் உளவியல் ரீதியான பிரச்சினைகளை சந்தித்தார். அன்னமயில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்குப் பின்னர் 11.5.91 அன்று ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.

கூலி விவசாயியாக இருக்கும் இவரது கணவர் வருமானத்தில் காலம் தள்ள மூன்று குழந்தைகள் வரை போதுமென இருவரும் முடிவெடுத்து அதனடிப்படையில் அன்னமயில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டார். ஆனால், அறுவை சிகிச்சையில் நடந்த தவறால் இன்று நான்காவதாக ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்திருக்கிறார். தற்போதைய சமூகச் சூழலில் பெண் குழந்தையை பாதுகாப்பாக வளர்த்து படிக்க வைத்து திருமணம் செய்து கொடுக்கும் வரையுள்ள பொருளாதார சுமையினை எண்ணி கவலை கொள்கிறார். மீண்டும் 17.5.91 அன்று கிருத்துவ மருத்துவமனை ஒன்றில் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளார்.

தனக்கு இக்கொடுமை நிகழ்த்திய மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், கர்ப்ப காலத்தில் - பிரசவ காலத்தில் செலவான தொகை மற்றும் பிறந்த பெண் குழந்தையின் பராமரிப்ப மற்றும் திருமண செலவுக்குரிய தொகையாக ரூ. 5 லட்சத்தை நஷ்ட ஈடாகத் தரக் கோரியும் அரசுக்கு மனு போட்டுள்ளார் மாவட்ட நுகர்வோர் நீதி மன்றத்திலும் முறையிட்டு காத்திருக்கிறார். இதுவரை எத் தரப்பிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

தகவல்
விவசாயிகள் விடுதலை முன்னணி
போடி



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

22 - 24

1-15 நவம்பர் '91

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராசு
ஆசிரியர், புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# தனியார்துறை மோகம் தீர்வாகாது

"மாஸ்கோவில் மழை பெய்தால் மதுரையில் குடை பிடிப்பார்கள்" என்று போலிக் கம்யூனிஸ்டுகள் பற்றிப் பலரும் கேலி பேசுவதைக் கேட்டிருக்கிறோம். இப்போது இந்த வியாதி நாட்டின் எல்லா பெரிய கட்சிகளுக்கும் பொருளாதார நிபுணர்களுக்கும் தொற்றிக் கொண்டுவிட்டது. நாட்டின் எந்தவொரு பொருளாதார, தொழில், வர்த்தகப் பிரச்சினையானாலும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது, மறுசீரமைப்பது, நவீன மயமாக்குவது, தனியார் துறையிடம் ஒப்படைப்பது ஆகியவையே இப்போது 'சர்வரோக நிவாரணி'யாகக் கருதப்படுகிறது.

மின் உற்பத்தி, இரயில்வே, பெட்ரோலியம் எண்ணெய் துரப்பணவு, தொலைத் தொடர்பு, இராணுவத்துக்கான ஆயுதத் தளவாட உற்பத்தி போன்றவை மட்டுமல்ல, சாலைகளும் கூட தனியார் துறைக்கு விடப்பட்டு வரிசூலிக்கப்படும். பம்பாய் நிலத் திமிங்கலம் சரத்பவரைத் தொடர்ந்து தஞ்சையில் சாலைகளைத் தனியாரிடம் ஒப்படைப்பது என பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் முடிவு செய்துள்ளது. முன்புபெல்லாம் தனியாரிடம் ஒப்படைக்க முடியாது, கூடாது; நாட்டு நலன் கருதியும், தனியார் கொள்ளையைத் தடுக்கவும் அரசுடமையாக்குவது அவசியம் என்று ஒதுக்கப்பட்டவையெல்லாம் இப்போது தனியார் துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது.

காப்பீட்டுக் கழகங்கள், பெரிய ஏகபோக வங்கிகள், நிலக்கரிச் சுரங்கங்கள், பெட்ரோலிய எண்ணெய் வயல்களும் நிறுவனங்களும் அரசுடமையாக்கப்பட்டன. இரும்பு - எஃகு, இரயில்வே - செய்தித் தொடர்பு, ஒலி - ஒளிபரப்பு, மின்சாரம் மற்றும் கனரக மின் இயந்திரங்கள், ஆலை இயந்திரங்கள், விமான போக்குவரத்து போன்ற பல தொழில்கள் அரசு ஏகபோகமாக நடந்தன. சர்க்கரை, சிமெண்டு, நூற்பு - நெசவு ஆலைகள் அரசு மற்றும் கூட்டுறவுத் துறைகளில் ஏராளமாகத் துவக்கப்பட்டன. அன்னியக் கம்பெனிகளின் கொள்ளைக்கு வரம்பிட அன்னியச் செலாவணித் தடுப்புச் சட்டம், தனியார் கொள்ளைக்கு வரம்பிட ஏகபோகத் தொழில் - வர்த்தகத் தடைச் சட்டம் ஆகியவை போடப்பட்டன. தோல், கனிமம், குடியிருப்பு, சுற்றுலா ஆகிய துறைகளில் அரசு நுழைந்து வாரியங்கள் அமைக்கப்பட்டன. போக்குவரத்து, பொது விநியோகம் (நியாயவிலைக் கடைகள்) ஆகியவற்றையும் அரசே ஏற்றது. இப்போது அவை எல்லாம் காலாவதியாகிப்போன பழைய கொள்கைகள் எனக் கிடப்பில் போடப்படுகின்றன.

இப்போது தனியார் துறையின் வளர்ச்சிக்குத் தடையெனக் கூறி உரிமம், ஒதுக்கீடு (லைசென்சு, கோட்டா) முறை போன்ற கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன. அன்னியச் செலாவணி, ஏகபோகத் தடைச் சட்டங்கள் செல்லாதனவாகிவிட்டன. ஏற்கனவே உள்ள அரசுத்துறைத் தொழில்கள் ஏகபோகத் தடைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவதோடு, அவை தனியார் வசம் ஒப்படைக்கப்படுகின்றன. பொது விநியோகம் - 'நியாயவிலைக் கடைகள்', சாலைகள் கூட தனியாரிடம் தரப்படுகின்றன. பொதுத்துறை 'வெள்ளை யானை'யைப் போன்று பெருந்தீனி தின்று நட்டமேற்படுகிறது. உற்பத்தியும் லாபமும் பெருகிட தனியார் முதலீட்டையும், போட்டியையும் ஊக்குவிக்க இதைச் செய்வதாகக் கூறுகிறார்கள். சர்வதேசப் போட்டி, புதிய தொழில் நுட்பம், வெளி முதலீடு காரணமாக வரைமுறையின்றி தேசங் கடந்த, பன்னாட்டுத் தொழில் கழகங்கள் நுழைவது நியாயம்தான் என்கிறார்கள்.

அதேபோலத்தான், நாட்டின் பொருளாதார அடிக்கட்டுமானத்துக்குத் தேவையானதெனக் கூறிக் கனரகத் தொழில்களுக்கு முன்னுரிமையளித்து விவசாயத்தைப் புறக்கணித்தனர். காந்தீயப் பொருளாதாரம் எனக்கூறி ஏராளமான மானியங்கள் வழங்கி கிராமிய - சிறு கைவினைத் தொழில்களை பராமரிப்பது அவசியமென்றனர். இது இப்போது பழைய கதை. நுகர்பொருள் - ஐந்து நட்சத்திரக் கலாச்சாரத் தேவைக்கான, 'வண்ண வானொளி', 'வீடியோ - ஆடியோ' சாதனங்கள், குளிர் பதனச் சாதனங்கள், புட்டி-டப்பா உணவு வ்கைகள், மின் துடைப்பம் - சலவை இயந்திரம் போன்ற சந்தைப் பொருட்களுக்கு முன்னுரிமை அளிப்பதே பொருளாதார முன்னேற்றத்துக்கு அவசியம் என்று இப்போது கூறுகிறார்கள்.

ஆனால் அந்தப் பழைய பொருளாதார, தொழில் கொள்கையை வகுத்து அமுலாக்கிய நேரு - இந்திரா காங்கிரசு பரம்பரையை நவீன இந்தியாவின் சிற்பிகள், முற்போக்கு - சோசலிச மூலவர்கள் எனவும் போற்றுகின்றனர். எப்போதுமே தனியார் மற்றும் ஏகாதிபத்தியக் கொள்ளையை ஆதரித்து வந்த பழைய சுதந்திரா - ஜனசங்கக் கட்சிகள் தவிர அனைத்துக் கட்சிகளும்தான் அதைத் தாங்கிப் பிடித்து வந்தனர். கம்யூனிச சர்வாதிகாரம், முதலாளியக் கொள்ளை இரண்டுமே இல்லாத, ஆரோக்கியமான போட்டிக்காக அரசு மற்றும் தனியார் துறை இணைந்த கலப்புப் பொருளாதாரப் பாதை, இதன் வழியே போனால் சோசலிச சமுதாயம் காணலாம் என்றனர். இப்போதோ நாட்டின் பொருளாதார நெருக்கடிக்களுக்கெல்லாம் அடிப்படை அரசுத் துறைதான் என்கின்றனர். முன்பு, நலிவுற்ற ஆலைகளை அரசு ஏற்பதே சரியானது, தேசவுடமை முற்போக்கானது என்றனர். இப்போது, நலிவுற்ற அரசுத் தொழில்களைத் தனியாரிடம் ஒப்படைப்பதே சரியானது, தனியார்துறைதான் முன்னேற்றகரமானது என்கின்றனர்.

எது உண்மை? எப்படிப் புரட்டிப் போட்டாலும், எதைச் சொன்னாலும் ஆட்டு மந்தைகளாகப் பின்பற்றுபவர்கள் எனக் கருதி மக்களை ஏய்ப்பதுதானே நடக்கிறது! உண்மையில் அந்தப் பழைய பொருளாதார தொழில் கொள்கை, இந்தப் புதிய பொருளாதாரத் தொழில் கொள்கை இரண்டுமே தவறானவை. இரண்டுமே வேறு வேறு அம்சங்களுக்கு முக்கியம் கொடுத்தாலும் அடிப்படையில் தரகு அதிகார முதலாளிகளுக்கும் அவர்களின் எஜமானர்களான ஏகாதிபத்தியங்களுக்கும் அவர்கள் தேவையையொட்டி வகுக்கப்படுபவை. மொத்தத்தில் மக்களுக்கும் நாட்டுக்கும் எதிரானவை என்பதுதான் உண்மை!

படிப்பகம்

www.padippakam.com

## அ.தி.மு.க. - காங்கிரசு - பாரதீய ஜனதா

# பாசிச மும்மூர்த்திகள்

## பிளவுவாத - பிரிவினைவாத தீவிரவாத பீதியூட்டுவதே பார்ப்பன - பாசிச அரசியலாகிவிட்டது.

இப்போது தமிழ்நாட்டில் உள்ள ஆட்சியைப் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலின் ஆட்சி என்று நாம் வரையறுத்திருக்கிறோம். இதைத் தமிழினத்தின் எதிரி என்றும் கணித்திருக்கிறோம்.

இவ்வாறு செய்வது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலே நம்மீது ஏவி விட்டுள்ள போலீசார் குற்றஞ்சாட்டுவதைப் போல வெறுமனே ஜெயலலிதாவை, அவரது ஆட்சியை இழிவுபடுத்துவதற்கானது அல்ல. ஒரு குறிப்பிட்ட சாதி, வகுப்பு, இனத்துக்கு எதிராக வெறுப்பு - பகைமையை வளர்த்து கலவரங்களைத் தூண்டுவதும் இதன் நோக்கமல்ல. அல்லது இதன் மீதான வெறுப்பு, பொறாமை, புரட்சிகர - ஜனநாயக அமைப்புகளைக் குறிவைத்துத் தாக்குகிறதே என்கிற ஆத்திரம் ஆகியவற்றால் சொல்லுவதும் இல்லை.

''பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலின் ஆட்சி'' என்பது, ஓர் அரசியல் வரையறுப்பு. அதற்கென்று தனிச் சிறப்பான சில குணாம்சங்கள் உண்டு; ஒரு சமூக அடிப்படை, ஒரு அரசியல் சித்தாந்தந்த அடிப்படை, ஒரு அமைப்பு அடிப்படை ஆகியவையும் உண்டு. சுருக்கமாகச் சொன்னால், ''திராவிட இயக்கத்தின் தனிச் சிறப்பான குணாம்சங்களாகிய கவர்ச்சிவாதம் -பிழைப்பு- வாதம் - பொறுக்கி அரசியலோடு பாசிசமும் பார்ப்பனீயமும் இணைந்த வீரிய ஒட்டுரகமாக உருவாகி உள்ளது ஜெயலலிதா கும்பலின் ஆட்சி'' (புதிய ஜனநாயகம் ஜூலை '91). இதைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் வகையிலே அமைந்துள்ளதுதான் இந்த வரையறுப்பு.

இந்த வரையறுப்பையே இன்னும் விரிவாகவும், உறுதியாகவும் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையும், அவசியமும் இருக்கிறது. ஏனெனில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கும் அமைப்புகளிலே கூட இந்த வரையறுப்பு ஏற்கக் கூடியதல்ல எனக் கருதுகின்றன. அதன் தாக்குதல் துவங்கியபோது ''பாசிஸ்ட் ஜெயா'' என்று குறிப்பிட்டவர்கள், பிறகு அதைக் கைவிட்டு பார்ப்பனத் தன்மையை மட்டுமே எழுதுகின்றனர்.

இவர்களின் கருத்துப்படி ''தி.மு.க. ஆட்சி உட்பட எல்லாமும்தான் ஜனநாயக விரோத, ஒடுக்குமுறை ஆட்சி. கருணாநிதி கூடத்தான் நெடுமாறன் நடத்திய தஞ்சை தன்னுரிமை மாநாட்டைத் தடை செய்தார்; சிலரைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் சிறையில் தள்ளினார். அப்படி இருக்கும்போது ஜெயலலிதாவை மட்டும் பாசிஸ்டு என்று கூற முடியாது'' என்று வாதிடுகின்றனர்.

இன்னும் சிலர், இதுவரை 'பார்ப்பன ஜெயலலிதா கும்பல்' என்று எழுதியும் பேசியும் வந்தார்கள். இப்போது அவ்வாறு குறிப்பிடுவதைத் தவிர்த்து வருகின்றனர். இது பார்ப்பன சாதியை அல்லது வருணத்தைக் குறிக்கிறது. இப்படிச் சொல்லுவதால் வர்க்கப் போராட்ட அரசியலைப் புறக்கணிப்பது அல்லது கைவிடுவதோடு, அதிலிருந்து திசை திருப்பி சாதி அரசியல் அல்லது ஆரியர் - திராவிடர் என்கிற வருண (இன) அரசியலுக்கு வழிவகுக்கும் என்று கூறுகின்றனர்

மேலும் சிலர், ''தமிழின எதிரி பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல்'' என்கிறபோது, வர்க்கப் போராட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இன விடுதலை - சுய நிர்ணய உரிமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகிவிடும் என்று எண்ணுகின்றனர்.

ஆளும் வர்க்கங்கள், மத்திய அரசு ஆகியவற்றிடம் இருந்து நிர்பந்தம் வரும் பொழுது; தனது ஆட்சிக்கும் கட்சிக்கும் ஆபத்து, நெறுக்குதல் வரும்பொழுது - கருணாநிதியும் தி.மு.க.வும் ஜனநாயக விரோத, பாசிச முறைகளில் மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளை ஏவிவிடுபவர்கள் தாம். ஆனால், அடிப்படையில் கருணாநிதியும் தி.மு.க.வும் காரியவாத, பிழைப்பு வாதத் தன்மையுடையவர்கள். பார்ப்பன -பாசிச ஜெயா கும்பலோ அதன் சமூக, அரசியல் - சித்தாந்த, அமைப்பு அடிப்படையிலேயே பார்ப்பன - பாசிசத் தன்மையுடையது.

பார்ப்பனீய சனாதன - வருணாசிரம தர்மத்தை இன்றைய நிலைமைகளுக்கேற்ப உயிர்ப்பிப்பது; அதை உள்ளடக்கிய இந்து மதக் கோட்பாட்டுவாத அடிப்படையிலான 'அகில இந்தியம்'' பேசி பிரிவினை வாத பீதியூட்டி சிறுபான்மையினரையும், தேசிய இனங்களையும் பாசிச முறையில் அடக்கி ஒடுக்குவது — இந்த அரசியல் - சித்தாந்தத்தையும் ஒரு சிறு கும்பலின் நலனையும் பிரதிநிதித்துவப் படுத்துவதுதான் பார்ப்பன -பாசிச ஜெயா கும்பல். இந்தக் கும்பலுக்கு எதிராக சிறுபான்மையினர் மற்றும் தேசிய இனங்களது உரிமைக்கான போராட்டங்கள் ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக இருக்கிறது; எனவே, அவற்றுக்கு அனைத்து புரட்சிகர, ஜனநாயக சக்தியினரும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஆட்சிக்கு வந்ததும் பார்ப்பன கும்பல் ஆதிக்கத்துக்கு வருவதும், பார்ப்பன சனாதனத்துக்கு புத்துயிர் ஊட்டப்படுவதும் யாருமே எதிர்பார்க்காத ஒன்றல்ல. ஆனால், இவ்வாறு செய்வது இலைமறைவு காய் மறைவாகவும் நிதானமாகவும் படிப்படியாகவும்தான் நடக்கும் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், இப்போது பட்டவர்த்தனமாகவும் வெறியாகவும் விரைவாகவும் இது நடக்கிறது.

காங்கிரசு மீண்டும் தமிழ்நாட்டில் தலையெடுக்காது. ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா இங்கே இப்போதைக்கு வேரூன்ற முடியாது; இக்கட்சிகள் இரண்டில் ஏதாவது ஒன்று ஆட்சியைப் பிடிப்பது சாத்தியமே இல்லை; இவற்றை உறுதியாக அறிந்ததும் எம்.ஜி.ஆரின் நிழலில் ஆதாயம் அடைந்து வந்த பார்ப்பனருக்கு அவரது வாரிசாக ஜெயலலிதா உருவெடுத்தது மிகுந்த நம்பிக்கை அளிப்பதாக அமைந்தது. எம்.ஜி.ஆர். இறந்தபோது சட்டமன்றத்தில் ஜெயலலிதாவுக்குப் பெரும்பான்மை ஆதரவு இல்லை. இருந்தபோதும் அரசுத் தலைவர் ஆர்.வெங்கடராமன், காஞ்சி சங்கராச்சாரி, அரசியல் தரகர் சுப்பிரமணிய சுவாமி உட்பட ஒரு பார்ப்பன கும்பல் பாசிச ராஜீவைத் தூண்டிவிட்டு நம்பிக்கை துரோகம் செய்து ஜானகி - வீரப்பன் ஆட்சியைக் கவிழ்த்தது.

அதன் பிறகு வந்த இடைத்தேர்தலில் ராஜீவ் - ஜெயலலிதா உறவு முறிந்து, அதையே சாதகமாகக் கொண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. அப்பார்ப்பன கும்பலுக்கு ஒரு தற்காலிகப் பின்னடைவாகவே அமைந்தது. ஆனாலும், பின்னர் ராஜீவ் -ஜெயலலிதா கூட்டு ஏற்பட்டு, ஜெயலலிதா ஆட்சியைப் பிடித்து விடும் நம்பிக்கை வந்ததும் இரட்டிப்பு மகிழ்ச்சியோடும் வேகத்தோடும் தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் இறங்கியது. தி.மு.க.வுக்கு எதிராக புலிகள் ஆதரவு - ஆயுதக் கலாச்சாரம் மற்றும் பிரிவினைவாத பீதி கிளப்பி ஆட்சியைக் கவிழ்த்ததோடு அந்தப் பிரச்சாரத்தையே தொடர்ந்து நடத்தி ராஜீவ் - ஜெயா கூட்டணிக்கு ஆதரவு திரட்டியது. ராஜீவ் கொலையை வைத்து அனுதாப அலையைக்



படிப்பகம்

www.padippakam.com

கிளப்பி அக்கூட்டணி பெரும் வெற்றிபெற அடித்தளம் அமைத்தது. ஜெயலலிதா இயல்பிலேயே பார்ப்பன - பாசிச குணங்கொண்டிருந்த போதும் மேற்படி உதவிகளுக்காக பார்ப்பன கும்பலுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார். எனவேதான் இவ்வளவு வெறியோடும் வேகத்தோடும் பார்ப்பன கும்பலின் ஆதிக்கமும், பார்ப்பன - சனாதனத்துக்குப் புத்துயிர் அளிப்பதும் நடக்கிறது.

நெடுஞ்செழியன், வீரப்பன், சோமசுந்தரம், முத்துசாமி, செங்கோட்டையன், சேடபட்டி முத்தையா போன்ற பிழைப்புவாத, பொறுக்கி அரசியல் தலைவர்கள் கட்சியிலும் ஆட்சியிலும் முன்னிறுத்தப்பட்டாலும் உண்மையில் அவர்கள் ஜெயாவின் எடுபிடிகள்தாம். அவர்களுக்குப் பின்னால் இருந்து ஒரு பெரிய பார்ப்பன - பாசிச கும்பல் தான் இந்தக் கட்சியையும் ஆட்சியையும் இயக்குகிறது. நடப்பு அரசியலைக் கூர்ந்து கவனித்துவரும் எல்லோருக்கும் இது தெரிகிறது.

பத்திரிக்கைகள், வானொலி, வானொளி ஆகிய மக்கள் திரள் தொடர்பு சாதனங்களைக் கட்டுப்படுத்தும் ஏகபோக முதலாளிகளாகவும், அதிகாரிகளாகவும் உள்ள பார்ப்பனர்கள். போலீசு - உளவுத் துறை, மற்றும் பிற அரசு எந்திரத்தில் அதிகாரிகளாக உள்ள பார்ப்பனர்கள். எம்.ஜி.ஆருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தவர்கள், காங்கிரசு, ஜனதா, பாரதீய ஜனதா மூலம் இயங்கி வந்தவர்கள் ஆகிய அரசியல் பிரமுகர்களான பார்ப்பனர்கள், தரகு -அதிகார முதலாளிகளாக உள்ள பார்ப்பனர்கள். சங்கராச்சாரி, தமிழ்நாடு பிராமணர் சங்கத் தலைவர்கள் ஆகிய சாதிவெறியர்களான பார்ப்பனர்கள் - இவ்வளவு பேரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கும்பல் ஜெயலலிதாவைச் சுற்றியுள்ளது. இவர்களையும் ஜெயலலிதாவையும், உள்ளடக்கியதுதான் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் என்கிறோம். உண்மையில் இந்தக் கும்பல் தான் தமிழ் நாட்டின் ஆளும் கட்சியையும் ஆட்சியையும் ஆட்டுவிக்கிறது. பாதுகாப்பு என்கிற பெயரில் ஜெயலலிதா ஒளிந்து வாழ்வதும், ''மர்ம'' ஆட்சி நடத்துவதும் இந்தக் கும்பலுக்கு வசதியாக இருக்கிறது.

பார்ப்பன சாதிக்குள்ளாகவே கணிசமான அளவுக்கு தொழிலாளர்களும் சிறு முதலாளிகளும், பெருமளவுக்கு நடுத்தர வர்க்கத்தினரும் இருப்பது உண்மைதான். திராவிட இயக்கத்தினர் சித்தரிப்பதைப் போல இவர்களையும் தமிழின எதிரிகளாகக் கருத முடியாதுதான். ஆனால், இவர்கள் உட்பட ஏறக்குறைய அச்சாதி முழுவதுமே பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் மீதான பிரமையில்தான் உள்ளது. பார்ப்பன சனாதன வருணாசிரமப் பெருமையில் மூழ்கியிருப்பதோடு, அதே மீட்பதுதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகும், அவசியமாகும் என்று இன்னமும் நம்புகின்றது.

பார்ப்பனர்களுக்குத் தகுதியும் அறிவுத் திறமையும் இருந்தும் அநீதி இழைக்கப்பட்டு அச்சாதியினர் அமுக்கப்படுகின்றனர். அதனாலேயே அச்சாதி வீழ்ச்சியடைந்து விட்டது; இதற்குக் காரணம் திராவிட இயக்கங்களும், இட ஒதுக்கீடுகளும்தான் காரணம்; எனவே, இவற்றை ஒழிப்பதன் மூலம் தான் பார்ப்பனர்கள் முன்னேற முடியும்



ஸ்ரீபெரும்புதூர் மண்ணைக் கொண்ட 'புனித கலசத்தை' பிரதமருக்குப் பரிசளிக்கும் ஜெயா: ராஜீவ் பிணத்தைக் காட்டி அனுதாப அலையெழுப்பி ஆதாயமடைந்த பார்ப்பன - பாசிஸ்டுகள் புதிதாக 'புனிதநீர்' 'புனிதமண்' கலசங்களைக் காட்டி அனுதாப அலையோடு தீவிரவாத பீதியூட்டுகின்றனர்.

என்று பார்ப்பனப் பத்திரிக்கைகளும் சாதித் தலைவர்களும் செய்யும் பிரச்சாரத்தைப் பார்ப்பன சாதி முழுவதுமாக நம்புகிறது.

பெண்கள், முதியவர் உட்பட பார்ப்பன சாதியினர் பெருமளவில் தமிழ்நாடு பிராமணா சங்கத்தின் தலைமையில் ஆவேசமாகத் திரண்டது; கடந்த தேர்தலில் பகிரங்கமாகத் தெருவில் இறங்கித் தமது சாதி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டியது; ஜெயா ஆட்சி அமைத்த பிறகு சாதாரண வாசகர்கள் கூட சாதிவெறியோடு பத்திரிக்கைகளுக்கு எழுதியதும், ஜெயா ஆட்சியின் அப்பட்டமான மக்கள் விரோத - ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதும் ஆகிய அனைத்தும் பார்ப்பன சாதியின் முழு ஆதரவையும் பாசிச ஜெயா கும்பல் பெற்றிருப்பதையே காட்டுகின்றன.

பார்ப்பனப் பத்திரிக்கைகள், வானொலி, வானொளி கட்டுப்பாடாக இந்த ஆட்சியின் துதிபாடுவது மட்டுமல்ல. நேற்று வரை பார்ப்பன, சனாதன - வருணாசிரம தர்மத்தை எதிர்ப்பதாகக் காட்டி வந்த ''முற்போக்கு''ப் பார்ப்பனர்கள்; அதிலிருந்து வெளியேறி விட்டதாக வேடமிட்டுத் திரிந்த ''தாராளவாத, ஜனநாயக''ப் பார்ப்பனர்கள் கூட பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் பாதந்தாங்கிகளாகத் தம்மைக் காட்டிக் கொண்டுவிட்டனர். அக்கும்பலின் சார்பாக திராவிட இயக்க எதிர்ப்பு, ஆரியப் பிரச்சாரத்தை இத்தகையவர்கள் துவக்கி விட்டார்கள். கருணாநிதியின் நெருங்கிய நண்பர்களாக இருந்த பார்ப்பனர்கள் கூட கட்சி மாறி விட்டனர். நெடுஞ்செழியன், ராஜாராம் போன்ற திராவிட - பகுத்தறிவு பாரம்பரியங்களே பார்ப்பன சனாதன - வருணாசிரமத்துக்கு வக்காலத்து வாங்கும்போது, பார்ப்பனர்கள் சாதிவெறியில் மூழ்கிப் போவது வியப்புக்குரியதல்ல.

நெடுஞ்செழியன், வீரப்பன், ராஜாராம்கள் செல்லாக் காசாகி ஜெயாவின் காலில் விழக்காத்திருக்கும்போது, கவர்ச்சி மோக மூட்டி ஓட்டுப் பொறுக்கும் ஒரே தலைவியாக ஜெயா வளர்ந்து விட்டபோது, தேர்தல்களிலும் கருணாநிதி கட்சிக்கு மரண அடி விழுந்து ஜெயாவுக்கு மிருகபலம் கிடைத்து விட்ட பிறகு, ''நான் பாப்பாத்திதான்! என்னை யாரும் அசைக்க முடியாது'' என்கிற அகங்காரம் தலைக்கேறுவதற்கும் ''யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இப்போது நடப்பது பிராமணர் ஆட்சிதான்!'' என்று அந்தச் சாதிச் சங்கம் பிரகடனப்படுத்துவதற்கும், பார்ப்பன சனாதனம் புதுப்பிக்கப்படுவதற்கும் ஏது தடை?

காஞ்சி சங்கரமடம், இந்து முன்னணி, பிராணர் சங்கம் ஆகிய பார்ப்பன அமைப்புகள் நீண்டகாலமாகக் கோரி வந்தவைகளை ஏற்று பார்ப்பன சனாதனத்துக்குப் புத்துயிர் அளிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது பாசிச ஜெயாகும்பல். அதன் முதற்கட்டமாக ''தமிழகக் கோயில்கள் கலாச்சாரக் கேந்திரங்கள். ஆகவே பாழடைந்து கிடக்கும் பல கோவில்களைப் புணருத்தாரணம் செய்வதற்காக முதலமைச்சர் தலைமையில் ஆலய நிதி திரட்டப்படும்'' என்று ஜெயலலிதா அறிவித்தார். கட்டாயப்படுத்தி கோடி கோடியாக வசூல் வேட்டையிலும் இறங்கினார். இந்த நிதியும் பராமரிப்பும் அதன் ஒதுக்கீடும் முறைப்படி அரசின் கட்டுப்பாட்டில் வைக்காது தனது கைகளிலேயே வைத்துக் கொண்டார்.

இந்துக் கோவில்களை அற நிலையத் துறை என்கிற அரசு அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து இந்துமதத் தலைவர்களின் தலைமையிலான ஒரு தனி வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்பது பார்ப்பன அமைப்புகளின் நீண்டகாலக்



படிப்பகம்

www.padippakam.com

கோரிக்கை. அதையும் ஏற்றுத் தனி வாரியம் அமைப்பதாக பாசிச ஜெயா அறிவித்தார். அதே சமயம் இசுலாமிய மதச் சொத்துக்களைப் பராமரிக்கும் ''வக்ப்'' வாரியத்தை அம்மதத் தலைவர்களிடம் இருந்து பிடுங்கி அரசு அதிகாரிகளின் கீழ்கொண்டு வருவதாக அறிவித்தார்.

ஏற்கனவே இந்து அறநிலையத்துறை மூன்று வேதாகம பாடசாலைகளை நடத்தி வருகிறது; இவை தவிர சங்கரபீடமும் ஜீயர் மடமும் கூட வேதாகம பாடசாலைகள் நடத்தி வருகின்றன. இவை போதாதென்று ''ஒருகோடி ரூபாய் செலவில் வேதாகம சாஸ்திரக் கல்லூரி அமைக்கப்படும்; சமஸ்கிருத மொழியில் (தேவபாடையில்) உள்ள வேதங்கள், ஆகமங்கள், உபநிஷதங்களைப் பற்றி அக்கல்லூரி ஆராயும்; அதில் தேறியவர்களுக்கு பதவிகள் தரப்படும்; ஏற்கனவே அர்ச்சகர்களாக உள்ளவர்களுக்கு சம்பள உயர்வும், ஓய்வூதியமும் வழங்கப்படும்'' என ஜெயலலிதா அறிவித்தார்.

வேதாகம சாஸ்திரக் கல்லூரி அமைக்கப்படுவதைத் திராவிட பாரம்பரியப் பிழைப்புவாதத் தலைவர்கள் வாய்பொத்தி தலை குனிந்து வரவேற்கையில், பார்ப்பன சனாதன மதத்தலைவர்களும், சாதித் தலைவர்களும், பத்திரிக்கைகளும் குதூகலிக்கின்றன. வேதாகம சாஸ்திரங்கள் சமஸ்கிருதத்திலேயே இருக்கட்டும்; தமிழுக்கு மொழிபெயர்க்க வேண்டாம் என்று யோசனை கூறுகிறது தினமணி.

''வேதங்களும் சாஸ்திரங்களும் இந்தியப் பண்பாட்டிற்கும் பாரம்பரியத்துக்கும் அடிப்படையாக இருக்கின்றன. அதோடல்லாமல் அறிவியல், மொழியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் மனித இனத்துக்குப் பயன்தருமாறு திரட்டக் கூடிய அளவற்ற செல்வங்கள் அவற்றில் புதைந்து கிடக்கின்றன; எனவே, வேதாகம சாஸ்திரக் கல்லூரியின் அவசியம் கேள்விக்கிடமற்றது'' என்று இந்து ஏடு வரவேற்கிறது. அதோடு அதற்கு ''வேத விஞ்ஞான மற்றும் ஆகமப் பயிற்சி மேல்நிலைக் கழகம்'' என்று சிங்காரப் பெயரும் சூட்டுகிறது.

இது அப்பட்டமாகவே பார்ப்பன சனாதனத்தை ஆட்சியில் ஏற்றுவதாகும் என எதிர்ப்புக் கிளம்பவே அக்கல்லூரியில் ஆதிதிராவிடருக்கும் இட ஒதுக்கீடு செய்யப்படும், அதில் பயிலும் அவர்களும் அர்ச்சகராகலாம்; அரசு நிதி உதவி செய்யவில்லை பணக்கார கோவில்கள் உபரிநிதியை ஒதுக்கும் என்று ஜெயலலிதா சப்பைக் கட்டுப் போட்டார். ஆனால், ஆதிதிராவிடர் அர்ச்சகராவதற்கு ஏற்கனவே பார்ப்பனர்கள் வழக்குமன்றத் தடை வாங்கியிருக்கிறார்கள்.

இந்தியை ஆட்சி மொழியாகத் திணித்து வருவது போதாதென்று, தேவபாடையைத் தேசிய மொழியாக்க வேண்டும் என்று அரசு உயர் தலைவர்கள் உட்பட பார்ப்பனக் கடுங்கோட்பாட்டு வாதிகள் (அதாவது சாதிவெறியர்கள்) கோரிவருகின்றனர். இதையும் ஏற்கும் வகையில் அமைவதுதான் வேதாகம சாஸ்திரக் கல்லூரி. இப்படி அறிவிப்பு வந்ததும் பார்ப்பனப் பண்டிதர்கள் பலரும் தமிழை இழிவுபடுத்தும் ஆராய்ச்சிகளில் இறங்கிவிட்டனர்.

தேவபாடையில் இருந்துதான் இலக்கண. இலக்கியங்களை இரவல் வாங்கித் தமிழ் வளர்ந்தது என்று எழுதுகிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக தமிழன் தனது மொழியையும், பண்பாட்டையும் காத்துக் கொள்வதற்காக நடத்திய போராட்டங்களை ஏசுவதோடு, ''தமிழன் தனக்குத்தானே விதித்துக் கொண்டுவிட்ட கலாச்சாரத் தனிமை வீழ்ச்சியாக அமைந்துவிட்டது'' என்றும் எழுதுகின்றனர். பார்ப்பன அரைவேக்காடு துக்ளக் சோ, ''எங்கே பிராமணன்'' என்கிற புராணப் புரட்டுத் தொடர் துவங்கி அதிலே இன்றைய நவீன அறிவியல் கோட்பாடுகள் எல்லாம் அன்றைய பார்ப்பன வேத, உபநிஷதங்கள், புராணங்களிலேயே இருக்கின்றன என்று சரடு திரிக்கிறார்.

இவையெல்லாம் தமிழினத்தையும், தமிழனது மொழி, பண்பாட்டையும் பார்ப்பன சனாதன - வருணாசிரமத்துக்கும் தேவ பாடைக்கும் அடிமைப்படுத்துவதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள்தாம். இந்தி படிக்காததால்தான் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது. தமிழ்நாடு பின்தங்கிவிட்டது என்று ஏற்கனவே பிரச்சாரம் செய்து வரும் பார்ப்பன கும்பல் இப்போது இந்தித் திணிப்பை பகிரங்கமாகக் கொண்டு வராவிட்டாலும் ஊக்கத்தொகை, விருப்பப் பாடம் என்றெல்லாம் ஆசைகாட்டி மீண்டும் திணிக்க முயலும்; இந்தியைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ள ராஜீவின் புதிய கல்விக் கொள்கைப்படியான நவோதயா பள்ளிகள் திறக்கப்படும். இதற்கான அடித்தளம் அமைக்கும் பிரச்சாரத்தில் பார்ப்பன பாசிச ஜெயா கும்பல் இறங்கிவிட்டது.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் பார்ப்பன - பாசிச கும்பலின் ஆதிக்கமும், பார்ப்பன சனாதன மீட்பும் வெறியோடும் வேகத்தோடும் நிலைநாட்டப்பட்டு வருவது விதிவிலக்காகத் தமிழ்நாட்டில் ஜெயலலிதா கும்பல் மட்டுமே மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஏற்படுவதல்ல. பல ஆண்டுகளாகவே மத்தியில் மறைமுகமாகவும் நேரடியாகவும் காங்கிரசு செய்து வருவதுதான்; அந்த நோக்கத்துக்காகவே இயங்கிவரும் ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா கட்சியும் செய்து வருவதுதான். எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேயே திராவிட - பகுத்தறிவு வேடங்களைக் கலைந்துவிட்டு ஏறக்குறைய இன்னொரு காங்கிரசாக அ.தி.மு.க. மாறிவிட்டது. இப்போது அதுவும் பரிணாம வளர்ச்சியடைந்து இன்னொரு ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவாகிவிட்டது.

இந்த மூன்று கட்சிகளுமே பார்ப்பன - பனியாக்களை உள்ளடக்கிய தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகிய ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளாக இருக்கும் அதே சமயம் பார்ப்பன சனாதன - இந்து மதவெறி சித்தாந்தத்தையும் பார்ப்பன - பாசிச கும்பல்களின் தலைமையையும் பெற்றுள்ளன.

''கடந்த கால நினைவுகள் பிராமணர்களின் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பிடித்தாட்டி, பாரதீய ஜனதா, விசுவ இந்து பரிட்சத் போன்ற இந்து மதவெறி அமைப்புகளில் கூட்டம் கூட்டமாகச் சேர வைத்திருக்கின்றன. அந்த இந்து அமைப்புகளுக்குக் கொள்கை வகுத்துக் கொடுப்பவர்கள் சாதியால் பிராமணர்கள் என்பது தற்செயலாக நடைபெற்ற விபத்தல்ல'' என்று ருசிய ஆய்வாளர் டாக்டர் யெவ்ஜெனியா யுர்லோவா சமீபத்தில் எழுதியுள்ளார்.

ஆகவே, ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா - விசுவ இந்து பரிட்சத் போன்ற இந்துமதவெறி அமைப்புகள் எப்படி பார்ப்பன - பாசிச மதவாத சனாதன ஆதிக்கத்தை நிலைநாட்டப் பாடுபடுகின்றனவோ அதையேதான் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் தமிழ்நாட்டில் செய்கிறது. அதை அப்பட்டமாகச் சொல்லி ஓட்டுப்பொறுக்குவது சிரமம் என்பதால் திராவிட இயக்கத்துக்குள் ஊடுருவி பகல்வேடம் போட்டு ஆட்சியைப் பிடித்த பிறகு செய்கிறது. எனவேதான் பாசிச ஜெயா கும்பல் காங்கிரசின் அரசியல் கூட்டாளியாக இருக்கும் அதேசமயம் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவுடன் நெருங்கிய தோழமை உறவு கொண்டுள்ளது. தேர்தல் கூட்டுக்கான பேரங்கள் நடத்துவதோடு சிவசேனாவைப்போல இளைய பங்காளியாக அதைச் சேர்த்துக்கொள்ளவும் தயாராக உள்ளது. ஈழ விடுதலைப் போராளிகள், அதன் ஆதரவாளர்கள், தமிழகத் தன்னுரிமை இயக்கத்தினர் உட்பட எல்லா புரட்சிகர, ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதற்கு முழு ஆதரவளிக்கிறது. பார்ப்பன சனாதன மீட்பை வாழ்த்தி வரவேற்கிறது.

குறிப்பாக பாழடைந்த கோயில்களைப் புதுப்பிக்க அரசே நிதி திரட்டுவது, இந்துக் கோயில்களை நிர்வகிக்க தனிவாரியம் அமைப்பது, வேதாகமக் கல்லூரி துவங்குவதை குதூகலத்துடன் வரவேற்கிறது. ''தமிழக அரசு உருவாக்கியுள்ள வேதாகமக் கல்லூரி திட்டம் வரவேற்கவும் பாராட்டவும் வேண்டியது. அறிவியல் உண்மைகளை உள்ளடங்கிய வேதங்கள் இந்தியருக்குப் பெருமை அளிக்கின்றன. இதை எதிர்ப்பது மிகவும் கண்டிக்கத் தக்கது'' என பாரதீய ஜனதா தலைவர் முரளிமனோகர் ஜோஷி கூறுகிறார். அக்கட்சி உ.பி. முதல்வர் கல்

**இந்தியை ஆட்சி மொழியாகத் திணித்து வருவது போதாதென்று, தேவபாடையான சமஸ்கிருதத்தை தேசிய மொழியாக்க வேண்டுமென்று பார்ப்பன சாதிவெறியர்கள் கோரி வருகின்றனர். இதை ஏற்கும் வகையில் அமைவதுதான் பாசிச ஜெயாவின் வேதாகம சாஸ்திரக் கல்லூரி. இப்படி அறிவிப்பு வந்ததும் பார்ப்பன பண்டிதர்கள் பலரும் தமிழை இழிவுபடுத்தும் ஆராய்ச்சிகளில் இறங்கிவிட்டனர்.**



படிப்பகம்

www.padippakam.com

யாண்சிங் காங்கிரசுத் தலைவர்களைப் போலவே ஜெயலலிதாவுடன் விருந்துண்டு அவரது பார்ப்பன - பாசிச நடவடிக்கைகளைப் பாராட்டுகிறார்.

காங்கிரசும் இதற்கு மாறுபட்டதில்லை. அது பல ஆண்டுகளாகத் தனது பார்ப்பன சனாதன இந்துமதவெறியை மூடிமறைத்துக் கொண்டு மதச்சார்பற்ற. சிறுபான்மையினர் நலன்காப்பது என்று நடித்து ஓட்டுப்பொறுக்கியது. ஆனால், கடந்த பத்தாண்டுகளாகவே தானும் பெரும்பான்மையினரின் இந்து மதப்பிரதிநிதி எனக் காட்டிக்கொண்டு ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவுடன் போட்டி போடுகிறது. ஏற்கனவே சாதி - மதக் கலவரங்களை நடத்தி ஆதாயம் தேடுவதில் உள்ளூர்த் தலைமையை ஊக்குவித்த இந்திரா - ராஜீவ் கும்பல் குறிப்பாக பஞ்சாப், காஷ்மீர், அயோத்தி விவகாரங்களில் தன்னை அடையாளங் காட்டிக்கொண்டது. ஒரு புறம் தாழ்த்தப்பட்டோர் மதச் சிறுபான்மையினரின் காவலனாகவும் மறுபுறம் இந்து மதவாதத் தலைவனாகவும் காங்கிரசு நடத்திய' இரட்டை நாடகம் அம்பலமாகிவிட்டது. இட ஒதுக்கீடு மற்றும் அயோத்தி விவகாரங்களில் அதன் இரட்டை நாடகம் சந்தேகத்துக்கிடமின்றித் தெரிந்துபோனது.

பார்ப்பன - பாசிச கும்பலின் ஆதிக்கமும் பார்ப்பன சனாதன - இந்துமதவெறியும் இம்மூன்று கட்சித் தலைமைகளின் நோக்கமாகவும் அடிப்படையாகவும் இருக்கின்றன. இதை மூடிமறைத்து பெரும்பான்மை மக்களது ஆதரவைத் திரட்டுவதற்காக இப்பார்ப்பனத் தலைமை நீண்ட காலமாகவே சில உத்திகளைக் கடைப்பிடித்திருக்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு - காலனிய விடுதலைப் போராட்டம் உண்மையானதாகவும் சமரசமற்றதாகவும் இருக்க வேண்டுமானால் அது சாதி, மத அடிப்படையில் இருக்கக் கூடாது; தேசிய ஜனநாயக அரசியலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், நமது நாட்டின் விடுதலைப் போராட்டத் தலைமையைக் கைப்பற்றிய பார்ப்பன - பனியா கும்பல் ''அகில இந்திய தேசியம்'' என்பதையே பார்ப்பன சனாதன - இந்துமதவாத அடிப்படையிலானதாக மாற்றியது. மக்களுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய உணர்வூட்டுவதற்கே பார்ப்பன சனாதன - வருணாசிரம இந்துமதவாத அரசியல் சித்தாந்தம் பரவுவதே சரியான வழியெனப் புகுத்தினர். இதன் விளைவாகவே, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பிளவும், மதவாத, இனவாதக் கட்சிகளும் தோன்றின. இதையே பயன்படுத்திக் கொண்டு தோன்றிய இந்துமதவெறி அமைப்பான ஆர்.எஸ்.எஸ் - ஜனசங்கம் - பாரதீய ஜனதா கூட்டம் மொழி, மத, இனச் சிறுபான்மையினருக்கு எதிரான ''அகில இந்திய தேசியம்'' அதாவது ''அகண்ட பாரதம்'' என்கிற முழக்கத்தை முன்வைத்தது. உண்மையில் இது நேரு - இந்திரா - ராஜீவ் காங்கிரசு பரம்பரையும், எம்.ஜி.ஆர் - ஜெயா கும்பலும் கூட ஏற்றுக்கொண்டுள்ள முழக்கம்தான்.

பல்வேறு சாதி, மத, மொழி, இன வேறுபாடுகளைக் கொண்டது இந்தியா. சாதி வேறுபாடுகளையும், சாதிகளையுமே ஒழிப்பது; மதச்சார்பின்மை; மொழிச் சமத்துவம்; இனங்களுக்குச் சுய நிர்ணய உரிமை என்கிற ஜனநாயக பூர்வமான தீர்வு மட்டுமே இந்திய ஒருமைப்பாடு, ஐக்கியத்துக்கு உத்திரவாதமளிக்க முடியும். ஆனால், இந்த வேறுபாடுகள் செயற்கையானவை, உள் நாட்டுப் பிளவுவாத, வெளிநாட்டு உளவு சக்திகளால் தூண்டிவிடப்படுபவை; ஆகவே இந்த வேறுபாடுகளைக் கைவிட்டு ''இந்துத்துவம்'' என்கிற அடிப்படையில் இந்திய ஒருமைப்பாடும் ஐக்கியமும் காக்கப்படவேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ் - பாரதீய ஜனதா நிலைப்பாடு. இதில் பாசிச ஜெயா கும்பலுக்கும் காங்கிரசின் பார்ப்பனத் தலைமைக்கும் மாறுபாடு கிடையாது.




**காஞ்சி சங்கரமடம், இந்து முன்னணி, பிராமணர் சங்கம் ஆகிய பார்ப்பன அமைப்புகள் நீண்ட காலமாகக் கோரி வந்தவைகளை ஏற்று பார்ப்பன சனாதனத்துக்குப் புத்துயிர் அளிக்கும் நடவடிக்கையில் பாசிச ஜெயா கும்பல் இறங்கியுள்ளது.**

இம்மூன்று கட்சிகளின் நிலைப்பாட்டின்படி ''அகில இந்திய தேசியம்'' என்பது சாதி, மத, மொழி, இன வேறுபாடுகளைக் கடந்த ஒற்றுமை - ஐக்கியமாகும். சமஸ்கிருதம் (தேவபாடை)யும் இந்துமத - பார்ப்பன சனாதன வேதங்களும், ஆகமங்களும், உபநிஷதங்களும் புராணங்களும் அடங்கிய இந்தியப் பண்பாடும் பாரம்பரியமும்தான் அந்த ஒற்றுமைக்கும் ஐக்கியத்துக்குமான அடிப்படை என்கிறார்கள். அதுமட்டுமல்ல இவர்களது ''அகில இந்திய தேசியம்'' என்பது இந்தியாவோடு இலங்கை, வங்கதேசம், பர்மா, பூடான், நேபாளம், திபேத், ஆஃப்கான், பாகிஸ்தான் ஆகியவை உள்ளடங்கிய ''அகண்டபாரதம்'' என்கிற ''ஆர்ய வர்த்தம்''தான்!

உண்மையில் இந்த ''அகில இந்திய தேசியம்'' என்பது பல்வேறு சாதி, மத, மொழி, இனப் பிரிவு மக்களையும் பார்ப்பன பாசிச கும்பலின் ஆதிக்கத்தின் கீழ் வைப்பதாகும். அதற்காகத்தான் பார்ப்பன சனாதன - மீட்பும் நடக்கிறது. இதைப் புரிந்து கொண்டு எதிர்க்கத் துணியும் எவரையும் பிளவுவாத, தேசதுரோக, தீவிரவாத முத்திரை குத்தி அரசு - மதவெறி பயங்கரவாதத்தை ஏவி ஒழித்துக்கட்டுவதுதான் இவர்களது அரசியல் கொள்கை.

இந்தப் பார்ப்பன பாசிச கும்பல் தனது ஆதிக்கத்தையும் பார்ப்பன சனாதன மீட்பையும் மூடிமறைத்து தம்மை ''அகில இந்திய தேசிய'' ஒருமைப்பாட்டிற்கும் ஐக்கியத்துக்காகவும் போராடும் வீரதீரமிக்க தேசபக்தர்களாகவும், தியாகிகளாகவும் சித்தரிக்கிறார்கள்.

ஒரு சிறுபான்மை சமூகத்தையும் ஆளும் வர்க்கத்தையும் மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்தும் இந்தப் பார்ப்பன - பாசிச கும்பல் பெரும்பான்மை மக்களை அடக்கி ஒடுக்கிவைக்கவும் இந்த வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார்கள்.

நாடு எப்போதும் பிளவுவாத, பயங்கரவாத, தீவிரவாத, தேசதுரோக ஆபத்தில் இருப்பதாக பீதியூட்டி மக்களை ஏய்க்கிறார்கள். கழிப்பறையிலேயே கிடக்கும் பெண்ணின் கைப்பையிலும், தெருவோரப் பிச்சைகாரனின் கந்தைத் துணியிலும்கூட வெடிகுண்டு இருப்பதாகக் கதை விடுகிறார்கள்; 6 வயதுச் சிறுமியையும் 80 வயதுக் கிழவனையும்கூட பயங்கரவாதிகளாக்கிச் சிறையிலடைக்கிறார்கள். இப்படிச் செய்வதுதான் இனி இவர்களது அரசியல் வாழ்வுக்கான அடிப்படை என்றாக்கிவிட்டார்கள்.

இவர்களது வீராவேசத் தேசபக்தப் பேச்சுக்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் பின்னே பார்ப்பன - பாசிசக் கும்பலின் ஆதிக்க நலனும், பார்ப்பன சனாதன - இந்து மத வெறியும் இருக்கின்றன. இதற்கு விளைவாகத்தான் நாடெங்கிலும் இனவிடுதலைப் போராட்டங்களும் ''பிளவுவாத - பயங்கரவாத - தீவிரவாத'' இயக்கங்களும் தோன்றுகின்றன. இவர்களது பேச்சுக்களாலும் நடவடிக்கைகளாலும் இந்திய ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் காத்திட முடியாது. பஞ்சாப், அசாம், காஷ்மீர் பிரச்சினைகளுக்கு அரசு பயங்கரவாத ஒடுக்குமுறை தவிர, வேறு தீர்வு கிடையாது; அப்பிரச்சினைகள் தீவிரமாகிக் கொண்டே போகின்றன என்ற நிலைக்கு காங்கிரசு - பாரதீய ஜனதாவின் கொள்கை தள்ளிவிட்டது. பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவும் தமிழ்நாட்டில் பிளவுவாத, தீவிரவாத பீதியூட்டி பாசிச ஒடுக்குமுறையை ஏவுவதும், பார்ப்பன சனாதன மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இங்கேயும் அதே நிலையைத்தான் ஏற்படுத்துவதாக முடியும்!

— தொடரும்.



படிப்பகம்

www.padippakam.com



## அயோத்தி விவகாரம்:

# இந்து வெறி பாசிஸ்டுகளின் அக்கிரமம் பாசிச காங்கிரசின் ஒத்துழைப்பு

அயோத்தி விவகாரம், இந்து வெறியர்களின் தேர்தல் ஆதாயத்துக்கான ஒரு துருப்புச் சீட்டு. 1989 மற்றும் '91 ஜூன் தேர்தல்களின் போது அயோத்தி விவகாரத்தை முன்னிறுத்தி, வடமாநிலங்களை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து இந்துவெறி பாசிச கட்சியாக பாரதீய ஜனதா வளர்ந்தது. இப்போது மீண்டும் அயோத்தி விவகாரத்தைக் கிளறி விட்டு நடைபெற உள்ள இடைத்தேர்தலில் ஆதாயமடையத் துடிக்கிறது.

அயோத்தியிலுள்ள 400 ஆண்டுகால பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோயில் கட்டுவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்து உ.பி.யில் "ராம ராஜ்ஜியத்தை" நிறுவியுள்ள இந்து வெறியர்கள் இப்போது "தர்ம யுத்தம்" நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர். அயோத்தியில் விசுவ இந்து பரிஷத் ராமர் கோயிலை கட்டும்; பாரதீய ஜனதா அரசு தடைகளை அகற்றி, சட்டம் - ஒழுங்கை கவனித்துக் கொள்ளும்; பஜ்ராங் தளத்தினர் எதிரிகளை முறியடிப்பார்கள் - என்கிற திட்டத்துடன் இந்து வெறியர்கள் நரவேட்டைக்குப் புறப்பட்டு உள்ளனர்.

இதன்படி, கடந்த அக்டோபர் 17 அன்று பாபர் மசூதியை சுற்றியுள்ள தாவாவுக்குட்பட்ட பகுதியில் 2.7 ஏக்கர் நிலத்தை உ.பி. பாரதீய ஜனதா அரசு ஒரு அவசர உத்திரவு மூலம் கையகப்படுத்தி உள்ளது. சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டிற்காக இந்த நிலத்தைக் கையகப்படுத்தி உள்ளதாக கூறி, அதை விசுவ இந்து பரிஷத்திடம் ஒப்படைத்துள்ளது. அதைத் தொடர்ந்து 18.10.91 அன்று பைசாபாத் தொகுதி (அயோத்தி இத்தொகுதியில் உள்ளது) எம்.பி.யும் பஜ்ராங் தள தலைவருமான வினய் கத்தியார், கடப்பாறை ஏந்திய 200 குண்டர்களுடன் பாபர் மசூதியைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள சிறிய கட்டிடங்களை இடித்து "இரண்டாவது கர சேவை" துவங்கி விட்டதாக அறிவித்தார். இங்கு காவலுக்கு நிறுத்தப்பட்டு உள்ள ராணுவமும், மத்திய ரிசர்வ் போலீசுப் படையும் இந்து வெறியர்களின் அட்டூழியங்களைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்து நின்றன.

மறுபுறம், தீவிரவாத இந்துவெறி அமைப்பான விசுவ இந்து பரிஷத், அக்.18 முதல் தொடர்ந்து 80 நாட்களுக்கு யாகம் நடத்தி இடைப்பட்ட ஏதாவது ஒரு 'நல்ல' நாளில் ராமர் கோயில் கட்டும் பணியைத் துவங்கப் போவதாக அறிவித்துள்ளது. "பரத்பூரிலிருந்து தனிச்சிறப்பான கருங்கல் கொண்டு வரப்பட்டு பூசை நடத்தி கால்கோள் விழா தொடங்கும்; 2000 சிற்பிகளும் கட்டிடக் கலைஞர்களும் கோயில் கட்டும் பணியில் ஈடுபடுவார்கள். பஜ்ராங் தளத்தினரும் "துர்கா வாஹினி" எனும் மகளிர் படையினரும் கரசேவையில் ஈடுபடுவார்கள்; முஸ்லிம்களுக்கு இதுவே கடைசி எச்சரிக்கை!" என்று கொக்கரிக்கிறார் வி.இ.பரிஷத்தின் தலைவர். ஏற்கனவே இப்பகுதியில் 60 ஏக்கர் நிலத்தை வாங்கி கோயில் கட்டுவதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் இந்து வெறியர்கள் ரகசியமாகச் செய்து வருகின்றனர்.

இந்த அட்டூழியங்களைக் கண்டித்து அக்டோபர் 19ந் தேதியன்று தேசிய அளவில் அனைத்து அரசியல் கட்சியினரும் முஸ்லிம் மதத்தலைவர்களும் முதன் முறையாக ஒன்றிணைந்து லக்னோவில் அமைதியான ஊர்வலம் நடத்தினர். ஜனதா தளமும் போலிக் கம்யூனிஸ்டுகளும் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு மசூதியை இடிக்கும் முயற்சியை தடுத்து நிறுத்தக் கோரினர். ஒரு பிரிவு அகாலி தளத்தின் தலைவரான சிம்ரஞ்சித்சிங் மான், இந்து வெறியர்களைக் கண்டித்து ஊர்வலம் நடத்த முயன்று கைதானார்

இத்தனைக்கும் பிறகும் மத்தியிலுள்ள காங்கிரசு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உ.பி.அரசு கையகப்படுத்தியுள்ள நிலம் சர்ச்சைக்குரிய பகுதியில் உள்ளதா என்று விளக்கம் கேட்டது. மாநில அரசின் நடவடிக்கையில் தலையிட மத்திய அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று ஆணவமாகப் பதிலளித்தார், உ.பி.முதல்வர் கல்யாண்சிங். அரண்டு போன மத்திய அரசு, விளக்கம் திருப்தி அளிக்கவில்லை என்றும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும் கெஞ்சியது.

ஆனால் அசாம், பஞ்சாப், காஷ்மீரில் ராணுவத்தை ஏவி அடக்கும் பாசிச காங்கிரசார், உ.பி.க்கு ராணுவத்தை அனுப்பி இந்து வெறியர்களை அடக்க முன்வரவில்லை. தமக்கு உடன்படாத மாநில அரசுகளை தன்னிச்சையாக கவிழ்க்கும் காங்கிரசு பாசிஸ்டுகள், உ.பி. அரசைக் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனம் செய்யவில்லை. புரட்சிப் போராட்டங்கள் முன்னேறும் பிராந்தியங்களை கலவரப் பகுதியாக அறிவித்து அடக்கும் காங்கிரசார், அயோத்தியைச் சுற்றியுள்ள பகுதியை கலவரப் பகுதியாக அறிவித்து இந்து வெறியர்களைக் கைது செய்யவில்லை.

அவ்வாறு ஏதாவது செய்தால் அது இந்து வெறியர்களுக்கு மேலும் ஆதாயமாகிவிடும். இந்து ஓட்டுக்களை காங்கிரசு இழக்க நேரிடும். சிறுபான்மை காங்கிரசு அரசு தொடர்ந்து நீடிக்க முடியாதபடி இந்து வெறியர்கள் கலகம் செய்து கவிழ்த்து விடுவார்கள் என்று அஞ்சுகின்றனர். எனவே இந்து வெறியர்களுக்கு விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தி, நெருக்கடியில் இருந்து தப்பிக்கலாம் என்று கணக்கு போடுகின்றனர்.

இதே உத்தியைத்தான் '89 தேர்தலின் போது பாசிச ராஜீவ் பின்பற்றினார். இந்து வெறியர்கள் பாபர் மசூதியின் அருகே சிலை பூசை நட[த்த] விட்டுக் கொடுத்து இந்து ஓட்டுக்களைக் கைப்பற்றி தேர்தல் ஆதாயம் தேட முயன்றார். ஆனால், இந்து வெறியர்கள் அந்து இடத்தை ஓர் வரலாற்று சின்னமாக்கி அதையே ஆதாரம் காட்டி மொத்த மசூதியையும் கைப்பற்றக் கிளம்பினர். இப்போது மீண்டும் ராஜீவ் பாணியில் தும்பை விட்டு வாலைப் பிடித்துக் கொண்டு பாசிச காங்கிரசு அலைகிறது.

இந்நிலையில், காங்கிரசின் கையாலாகாத்தனத்தையும் இந்து வெறியர்களின் அட்டூழியத்தையம் எதிர்த்து வி.பி.சிங்கும் போலிக் கம்யூனிஸ்டுகளும் 'அறப்போர்' நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர். ஆனால் பிரதமர் பதவிக்காக நேற்று இந்து வெறியர்களுடன் கூட்டு சேர்ந்தவர்தான் வி.பி.சிங். ஆட்சிப் பொறுப்பில் இருந்த வரை, இந்து வெறியர்களுக்கு எதிராக ஒரு சிறு துரும்பைக் கூட எடுத்துப் போடாமல், அத்வானியின் ரதயாத்திரையை தடுத்து நிறுத்தாமல், ஆயிரக் கணக்கான மக்கள் பலியாக காரணமாக இருந்தவர்தான் வி.பி.சிங். அவரோடு சந்தர்ப்பவாத கூட்டு சேர்ந்து தேர்தல் ஆதாயமடைந்தவர்கள்தான் போலிகள். இப்போது மீண்டும் சிறுபான்மை முஸ்லிம்களின் ஓட்டுக்களைக் கைப்பற்றும் நோக்கத்துடன் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே தவிர, சமரசமற்ற சரியான தீர்வு எதுவும் அவர்களிடம் கிடையாது.

எனவே இச்சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்தி, பாசிச காங்கிரசின் விட்டுக் கொடுக்கும் அயோக்கியத் தனத்திற்கு எதி ராகவும், இந்து வெறி பாசிஸ்டுகளுக்கு எதி ராகவும் புரட்சிகர - ஜனநாயக சக்திகள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ்; விசுவ இந்து பரிஷத் மு லான மதவெறி அமைப்புகளைத் தடை செய்! பாபர் மசூதியை முஸ்லிம்களிடம் ஒ படை! மதத்திற்கும் அரசியலுக்குமுள்ள உறவை அறுத்தெறி! - என்கிற சமரசமற் தீர்வும் அதற்கான மக்கள் திரள் போராட்ட களும்தான் இந்து வெறி பாசிஸ்டுகளிட இருந்து நாட்டையும் மக்களையும் காக் முடியும்.

● மண



படிப்பகம்

www.padippakam.com

## பேருந்துக் கட்டண உயர்வு:

# பாசிச ஜெயாவின் ஆணவம் மாணவர்கள் போர்க்கொடி

பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காகப் போராடும் பலம் வாய்ந்த அமைப்பு இல்லாத நிலையில், எதிர்க்கட்சிகள் - பத்திரிகைகளின் வழக்கமான கண்டன ஒப்பாரிகளை ஆட்சியிலுள்ளவர்கள் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை; மக்கள் மீதான சுமையை ஏற்றிக் கொண்டே போவதற்கு எந்தத் தடையும் இருக்காது; - இந்தத் துணிச்சலுடன் சட்டமன்றத்தில் மிருகப் பெரும்பான்மை பெற்றுள்ள பாசிச ஜெயா கும்பல் அநியாயமாக பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியுள்ளது.

நகரப் பேருந்துகளில் குறைந்த பட்ச கட்டணம் 0.70 காசு. குறிப்பிட்ட சில நிறுத்தங்களில் மட்டும் நிற்கும் ''ஜே'', ''ஆர்'' பேருந்துகளில் 80 காசு. இதர வெளியூர் பேருந்துகளுக்கு ஒரு கி.மீ.க்கு 12.5 காசு என அநியாயமாக 40% கட்டண உயர்வு செய்துவிட்டு ஏறத்தாழ ரூ.150 கோடிக்கு புதிய சுமைகளை மக்கள் மீது திணித்துள்ளது.

அன்றாட தேவைக்கான பொருட்களின் விலையேற்றம் போதாதென்று ஏழை - நடுத்தர மக்கள் வெளியே போகவே முடியாத அளவுக்கு, போக்குவரத்து கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பணிக்கும் அன்றாட வேலைக்கும் கூட நகர முடியாதநிலை. இலவச உணவும் ஊதியமும் கொடுத்து ஓட்டுக் கட்சிகள் பேரணிக்கு அழைத்துப் போவார்கள் அல்லவா? அப்போதுதான் மக்கள் தமது உற்றார் - உறவினர்களை, வெளி உலகைக் கண்டு சமாதானம் அடைய முடியும்!

கட்டண உயர்வு பற்றி ஆண்டு வரவு-செலவு கணக்கில் (பட்ஜெட்டில்) அறிவிக்காமலும், சட்டமன்ற ஒப்புதல் பெறாமலும் அரசியல் சட்ட விதியைக் கேலிக் கூத்தாக்கிவிட்டு தன்னிச்சையாக பார்ப்பன - பாசிச கும்பல் இப்பொருளாதார தாக்குதலை ஏவிவிட்டுள்ளது. அண்டை மாநிலங்களில் ஏற்கனவே பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன; புதிய பேருந்துகள் வாங்கவும், புதிய வழித்தடங்களில் இயக்கவும், நட்டத்தைக் குறைக்கவும், நவீனப் படுத்தி விரிவாக்குவதற்காகவே இக்கட்டண உயர்வு என்று சமாதானம் கூறுகிறது. ஆனால், இவற்றுக்காக அற்ப தொகையே ஒதுக்கப்படுகிறது. அன்றாட நிர்வாகச் செலவுகள் மற்றும் ஊதாரித் தனங்களால் அதிகார வர்க்கமும் ஆளும் கட்சியினரும் பெருமளவில் விழுங்கி ஏப்பம் விடுவதும்தான் தொடர்ந்து நடக்கிறது.

உதாரணமாக, சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் 2296 பேருந்துகள் உள்ளன. இவற்றில் 142 பேருந்துகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. தினமும் 35 லட்சம் பயணிகள் பல்லவனையே நம்பி உள்ளனர். அன்றாடம் ரூ.26 லட்சத்துக்கு மேலாக வசூலாகிறது. ஆனாலும் நட்டக் கணக்கு காட்டுகிறது அரசு. உண்மையில் சர்வதேச நிதி நிறுவனத்தின் (ஐ.எம்.எஃப்) நிர்பந்தம் காரணமாகவும், தனியார் பேருந்து முதலாளிகளின் கொள்ளை லாபத்திற்காகவுமே இக்கட்டண உயர்வு கொண்டுவரப்பட்டுள்ளது. சுற்றுலாப் பேருந்துகள் என்ற பெயரில் பயணிகள் பேருந்தை சட்ட விரோதமாக இயக்கி வரும் தனியார் முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்காததோடு, அப்பேருந்துகளுக்கான காலாண்டு வரியை ரூ.2000 விருந்து, ரூ.500 ஆகக் குறைத்து சலுகைகளை வாரியிறைத்துள்ளது ஜெயா அரசு. இதுதவிர கீழத் தஞ்சை மாவட்டத்தில் சாலைகள் போட்டு வரிவசூல் செய்து கொள்ள தனியார் முதலாளிகள் பகற்கொள்ளைக்கு அங்கீகாரமும் அளித்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால் பேருந்துகள் மக்கள் சேவைக்கான துறை என்பது போய் கொள்ளை லாபத்துக்கான துறையாக மாற்றப்பட்டுவிட்டது.

இதையெல்லாம் மூடி மறைத்து, சாராய ஒழிப்பின் மூலம் ஆண்டுக்கு ரூ.300 கோடிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை ஈடுகட்டவே இக்கட்டண உயர்வு என்று நியாயப்படுத்தப்படுகிறது. ஆனால், பேருந்துக் கட்டண உயர்வு, மின்கட்டண உயர்வு, நகராட்சிகளில் வீட்டுவரி அதிகரிப்பு முதலானவற்றின் மூலம் ரூ.1000 கோடிக்கும் மேல் வருவாயைத் தேடிக்கொண்டு அறிந்தே மோசடி செய்கிறது அரசு.

எதிர்க்கட்சிகளின் வழக்கமான கண்டனங்கள்,மறியலுக்குப் பிறகு இந்த விவகாரம் அடங்கிப் போய்விடும் என்று பாசிச ஜெயா கும்பல் பகற்கனவு கண்ட நேரத்தில், அனைத்து பள்ளி - கல்லூரி மாணவர்கள் கட்டண உயர்வுக்கு எதிராக தன்னெழுச்சியாகத் திரண்டெழுந்து போர்க்கோலம் பூண்டுள்ளனர். சென்னையைத் தொடர்ந்து தமிழகத்தின் அனைத்து மாவட்ட, வட்ட பெருநகரங்களிலும் ஊர்வலம், ஆர்ப்பாட்டம், தர்ணா, மறியல் என மாணவர்களின் போராட்டங்கள் தொடர்கின்றன. 'ஆயுத பூசை' விடுமுறைக்குப் பிறகு போராட்டம் பிசுபிசுத்துவிடும் என எதிர்பார்த்ததற்கு மாறாக, மீண்டும் மாணவர்களின் போராட்டம் தொடர்ந்து தீவிரமாகி ஆட்சியாளர்களின் முகத்தில் கரி பூசியுள்ளது. வானொலியும் தொலைக்காட்சியும் ஜெயாவின் விசுவாச நாளேடுகளும் மாணவர்களின் போராட்டத்தை இருட்டடிப்பு செய்ததோடு, போராட்டத்தில் தாககப்பட்ட பேருந்துகளைப் படம் பிடித்துப் போட்டு மாணவர்களை சமூக விரோதிகளாகக் கொச்சைப் படுத்தின. கட்டண உயர்வு பற்றிய மறு பரிசீலனைக்கே இடமில்லை என்று கொக்கரித்த அரசு, ஊர்வலங்களுக்குத் தடைவிதித்தும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்தும் போராட்டத்தை அடக்கிவிடத் துடித்தது. இந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல் தடையை மீறி மீண்டும் மாணவர்கள் போராட்டத்தில் இறங்கியதும், அவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தி பலரது மண்டைகளைப் பிளந்தும் கை - கால்களை முறித்தும் ஈராயிரம் மாணவர்களை கைது செய்து சிறையிலடைத்தும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது ஜெயா அரசு.

பதவியிலிருக்கும் போது பேருந்துக் கட்டணத்தை அநியாயமாக உயர்த்திய தி.மு.க. இப்போது, தானும் கட்டண உயர்வை எதிர்ப்பதாக நாடகமாடுகிறது. பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக மார்தட்டிக் கொள்ளும் தி.மு.க. பேருந்துக் கட்டண உயர்வை எதிர்த்துப் போராட முன்வரவில்லை. மாறாக, 'பாப்பாத்திக்கு வாக்களித்த மக்கள் அனுபவிக்கட்டும்' என்று மக்கள் மீதே பழிபோடுகிறது. பித்தலாட்டப் பேர்வழிகளான போலிக் கம்யூனிஸ்ட்டுகள் தாங்களும் கட்டண உயர்வை எதிர்ப்பதாக பசப்புகின்றனர். ஆனால், கட்சி ரீதியாகப் போராட முன்வராமல், தன்னெழுச்சியாக மாணவர்கள் கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்கியதும் தமது இளைஞர் அமைப்பும் மறியலில் ஈடுபடுவதாக அறிவித்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால், இங்கே பேருந்து கட்டணத்தை எதிர்ப்பதாகக் கூறும் போலிகள், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் பேருந்துக் கட்டணத்தை அநியாயமாக உயர்த்தியதோடு, அதற்கெதிராகப் போராடியவர்களை பாசிச ஜெயா பாணியில் மிருகத்தனமாக அடக்கினார். கடடண உயர்வுக்கு எதிராக பாட்டாளி மக்கள் கட்சியினர் மறியலில் ஈடுபடப் போவதாக அறிவித்து ஆயிரக்கணக்கில் கைதாகியுள்ளனர்.

மக்களின் வெறுப்பு, மாணவர்களின் தொடர்ச்சியான போராட்டம் காரணமாக, தற்போது கட்டணங்களைக் குறைத்துள்ளதாகக் கூறி பாசிச ஜெயாக்கும்பல் இன்னுமொரு மோசடியைச் செய்துள்ளது. நகரப் பேருந்துக் கட்டணங்களில் சில மாற்றங்களைச் செய்துள்ளதே தவிர, கட்டண உயர்வில் எந்த மாற்றமுமில்லை. இதை அம்பலப் படுத்தி, மறியல், தர்ணா முதலான போராட்ட வரம்புகளுக்கு மேல் போக எந்த ஓட்டுக்கட்சியும் தயாராக இல்லை.

எனவே, பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளில் மக்கள் அணிதிரண்டு இத்தகைய பொருளாதாரத் தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்க வேண்டும். கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டங்களை பாசிச எதிர்ப்புப் போராட்டங்களோடு இணைத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

● பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com

# படரும் பாசிச அடக்குமுறை தொடரும் புரட்சிகர இயக்கம்

அரசியல் சீக்கு ஆட்சியைப் பிடித்ததும் தமிழகத்தில் இருள் கவ்வியுள்ளது! அறிவிக்கப்படாத அவசர நிலை பாசிச ஆட்சி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

"ஈழ அகதிகளை வெளியேற்றாதே; ஈழப் போராளிகள் தமிழகத்தில் தஞ்சம் புக - பிரச்சாரம் செய்ய உரிமை உண்டு" என்று குரல் கொடுத்தவர்கள் கைது செய்யப்பட்டனர். கூட்டம் நடத்தியவர்கள், சுவரொட்டி ஒட்டியவர்கள், பிரசுரம் விநியோகித்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டனர். பேச - எழுத பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. ஈழ ஆதரவு இயக்கம் மட்டுமல்ல, ஜனநாயக இயக்கங்கள் - புரட்சிகர இயக்கங்கள் அனைத்துமே ஒடுக்கப்பட்டன. வேலை வேண்டும் என போடப்பட்ட மாநாடும் புலி ஆதரவு மாநாடு என முத்திரை குத்தப்பட்டு தடை செய்யப்பட்டது.

ஈழ ஆதரவு இயக்கத்தில் சம்பந்தப்படாத அப்பாவிகள் கூட சிலர் கைது செய்யப்பட்டனர். பெண்களும், குழந்தைகளும் கூட தேசத்துரோகிகள் என குற்றம் சாட்டப்பட்டனர். அரசுக்கு எதிராக சதி செய்ததாக வழக்கு போடப்பட்டார்கள். பல இடங்களில் தோழர்களின் வீடுகளில் அத்துமீறி நுழைந்து பொருட்களை - புத்தகங்களை அள்ளி சென்றது போலீசு.

தமிழகமெங்கும் மக்கள் கலை இலக்கிய கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்பு தோழர்களும் பாசிச - பார்ப்பன ஜெயா கும்பலின் இத்தகைய தாக்குதலுக்கு உள்ளாகினர். மேற்கண்ட அமைப்பினர் இதுவரை 75 பேர் கைதாகியுள்ளனர்.

திருச்சியில் ம.க.இ.க., பு.மா.இ.மு., ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் மற்றும் சாக்ரடீஸ் நற்பணி இளஞ்சேனை (காந்திபுரம்) ஆகிய அமைப்பினர் 18 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் திருமணமாகி நான்கே நாட்களாகியிருந்த தோழர்கள் ஜான் - நிர்மலாவும் அடங்குவர். இவர்கள் குடியிருந்த வீட்டுக்கார பெண்மணியை போலீசு இழுத்துச் சென்று மிரட்டியது. இவர்கள், புலிகள் ஆதரவு பாடலை டேப் ரிக்கார்டர் மூலம் ஒலிபரப்பிக் கொண்டிருந்த போது கைதுசெய்ததாக போலீசு புளுகியது. இதேபோல் கைது செய்யப்பட்ட பிற தோழர்கள் சுவரொட்டி ஒட்டும்போது கையும் களவுமாக பிடித்ததாக புளுகியது. இதை பார்ப்பன பத்திரிக்கைகள் அப்படியே வாந்தியெடுத்தன. உண்மையில் தோழர்கள் அனைவரும் வீட்டிலும், வேலை செய்யும் இடங்களிலும் உள்ளூர் ஆதிக்க சக்திகள், சாராய ரவுடி கும்பல், போலீசு ஆள்காட்டிகள் காட்டிக் கொடுத்தன் பேரிலேயே போலீசால் கைது செய்யப்பட்டனர்.

எனினும் நகரெங்கும் ஈழ விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தும் ஜெயா கும்பலின் அடக்குமுறைக்கு எதிராகவும் தொடர்ந்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. விழி பிதுங்கிப் போன போலீசு, சுவரொட்டிகளை எல்லாம் தேடித்தேடி சுரண்டிக் கிழித்தது.

**சென்னையில்** ம.க.இ.க. தோழர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டனர். தோழர்கள் மீது பல பொய் வழக்குகள் போட்டு சிறையிலடைத்தது போலீசு. விசாரணையின்றியே நீதிமன்றம் தோழர்களின் காவலை நீட்டித்து வந்ததற்கு எதிராக வழக்கும் தொடுக்கப்பட்டது. இடையில் தோழர்களுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கிய நீதிமன்றம் பின்னர் ஜாமீன் தர மறுத்துள்ளது. அடக்குமுறைக்கு எதிரான சுவரொட்டி இயக்கம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

**கோவையில்** ம.க.இ.க. தோழர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர். பிற தோழர்கள், போலீசின் கண்ணில் மண்ணைத்தூவி சுவரொட்டி இயக்கத்தை தொடர்ந்து மேற்கொண்டனர். பீதியடைந்த போலீசு கும்பல் தோழர்களை தேடும் பணியை முடுக்கிவிட்டது. எவ்வளவு முயன்றும் தோழர்கள் பிடிபடாததால் தானே சுவரொட்டிகளை கிழிக்கும் பணியை மேற்கொண்டது.

தோழர்களைக் கைது செய்ய தேடிய பொழுது தோழர்கள் கிடைக்காத ஆத்திரத்தில் தோழரின் பக்கத்து வீட்டில் இருந்த இரு பெட்டியை தூக்கிபோட்டு உடைத்தது. தோழர் கதிரவனின் தாயாரை இஷ்டத்திற்கு மிரட்டிப் பார்த்தது. தோழர் வீட்டிலிருந்த பிரசுரத்தை அள்ளிச் சென்றது.



கைதான தோழர்களை 27.9 91 அன்று வாய்தாவுக்கு கைவிலங்கு போட்டு அழைத்து வந்தது போலீசு. இதைக்கண்டித்து தோழர்கள் கோஷம் எழுப்பியபடியே வந்தனர். விசாரணையில் நீதிபதியிடம் விசாரணைக் கைதிகளை கைவிலங்கிட்டு அழைத்து வந்ததை கண்டித்து மனு எழுதிக் கொடுத்தனர்.

ஊத்தங்கரை பு.மா.இ.மு.வைச் சேர்ந்த தோழர்கள் சி.என்.சுப்பரமணி, அன்பு ஆகியோர் அரூரில் நடந்த RYL மாநாட்டிற்கு தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர். இதே காரணத்திற்காக நல்லம்பள்ளி பு.மா.இ.மு. தோழர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

திருவண்ணாமலை வட்டார வி.வி.மு. தோழர்கள் மூவர் உள்ளூர் பிரச்சினை தொடர்பாக கைதாகியிருந்து 18.9.91 அன்று ஜாமீனில் வெளி வந்தனர். ஈழ ஆதரவாளர்கள் கைதையொட்டி மீண்டும் இவர்கள் 20-ந் தேதி கைது செய்யப்பட்டு அரசு சொத்துக்களை சேதப்படுத்த சதிசெய்ததாக பொய் வழக்குப் போடப்பட்டனர். மேலும் அரூர் RYL மாநாடு தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை என மங்கலம் தோழர் ஜெகதீசன் ஆர்ப்பாக்கம் தோழர்கள் சம்பத், எல்லப்பன், சேகர் மற்றும் வி.வி.மு.வுடன் தொடர்பில்லாத சுந்தரவேலு ஆகியோரையும் போலீசு கைது செய்து மேற்படி வழக்கிலேயே குற்றம்சாட்டி வேலூர் மத்திய சிறையிலடைத்தது.

வேலூர் சிறையில் வி.வி.மு., ஆர்.ஒய்.எல்., ஆர்.ஒய்.எப்., ஆகிய அமைப்புத் தோழர்கள் அடங்கிய சிறைக்கமிட்டி அமைக்கப்பட்டு அரசியல் நிலைமைகளைப் பற்றியும், சிறைத் தோழர்கள் கட்டுப்பாடாக செயல்படுவதன் அவசியம் பற்றியும் விவாதித்தனர். கூட்டமும், கலைநிகழ்ச்சியும் சிறைக்கைதிகளிடையே நடத்தினர்.

சீர்காழியில் புதிய கலாச்சார வாசகர் வட்ட தோழர் அம்பிகாபதி கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இன்னொரு தோழர் நடராஜனை அவரது வீட்டில் தேடிக் கிடைக்காததால் அவரது மனைவி நிறைமாத கர்ப்பிணியாக படுக்கையில் இருந்தவரை பொருட்படுத்தாமல் ஈவிரக்கமின்றி துன்புறுத்தி - மிரட்டியது, போலீசு. நடராஜனின் தம்பியை போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்று வைத்துக்கொண்டது. பின்னர் இவர் உறவினர் ஒருவரால் விடுவிக்கப்பட்டார்.

மேலும் கல்லக்குறிச்சியில் 6 தோழ களும், ஈரோடு - பள்ளிபாளையத்தில் ! தோழர்களும், உசிலையில் 5 தோழர் ளும், கம்பம் பகுதியில் 2 தோழர்களும்



படிப்பகம்

www.padippakam.com

உத்தமபாளையம் வட்டத்தில் 2 தோழர்களும், திருவண்ணை நல்லூரில் ஒரு தோழரும், வேலூரில் ஒரு தோழரும், நெய்வேலியில் மூன்று தோழர்களும், விருத்தாசலத்தில்ஒரு தோழரும், ஊற்றங்கரையில் மீண்டும் ஒருதோழரும் கடலூரில் 6 தோழர்களும், தஞ்சையில் 4 தோழர்களும் கைது செய்யப்பட்டு பொய் வழக்கு சோடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடைசியாக வந்த செய்தி! நெய்வேலியில் 16.10.91 அன்று வீடு வீடாக பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் மேற்கொண்ட தோழர்கள் ஐந்து பேர் காங்கிரசு குண்டர்களால் தாக்கப்பட்டனர். பிறகு காங். குண்டர்கள் தூண்டுதலின் பேரில் தோழர்கள் செந்தில்குமார், ரமேஷ், பாலு, கிருஷ்ணா, அருள்மணி ஆகியோர் போலீசால் கைது செய்யப்பட்டனர். அன்று இரவே போலீசு, தோழர் செந்தில்குமார் விடுதிக்கு வந்து பிறரை பீதியூட்டியதோடு பத்திரிக்கைகள், புத்தகங்கள், 'தொழிலாளர் பிரச்சாரக் குழு' வின் பேனர்கள் எல்லாவற்றையும் அள்ளிச் சென்றது. தோழர்கள் 5 பேர் மீதும் TADA - பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கை (தடுப்பு) சட்டத்தின் கீழ் பொய்வழக்கு போட்டு சிறையிலடைத்துள்ளது.

திருத்துறைப்பூண்டியில் சுவரொட்டி ஒட்டப்பட்டதும் மறுநாள் போலீசு தேடி தேடி கிழித்துப் போட்டது. வி.வி.மு-வினர் யார் என தேடியலைந்து கிடைக்காததால் சாராயம் விற்றதாக கைது செய்யப்பட்ட வேறு ஒருவரை வி.வி.மு-க்காரர் என வழக்குப்போட எத்தணித்தது. பிறகு தோழர்கள் இருப்பிடம் தெரிந்ததும், வந்து தேடியபொழுது தோழர்கள் வீட்டில் இல்லாததால் வீட்டிலிருந்தவர்களை மிரட்டிச் சென்றது. மீண்டும் அன்று (14.10.91) இரவே வந்து தேடிய போதும் தோழர்கள் இல்லையென்பதால் உறவினர்களை மிரட்டி தாக்கியது. உறவினர்கள் மூவரை, தோழர்கள் கிருஷ்ண மூர்த்தி, குணசேகரன் ஆகியோர் போலீசு நிலையத்திற்கு வந்தால்தான் இவர்களை விடுவோம் எனக்கூறி கைது செய்து கொண்டு போனது. பிறகு தோழர் கிருஷ்ண மூர்த்தி போலீசு நிலையம் சென்றதும் உறவினர்கள் மூவரையும் விடுவித்தது. தோழர் கிருஷ்ணமூர்த்தியை கைது செய்து 153 (ஏ) பிரிவின் கீழ் பொய் வழக்கு பதிவு செய்துள்ளது.

இதைத் தவிர முற்போக்கு இளைஞர் அணி (RYL), மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம், மக்கள் உரிமைக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி (RYF), மார்க்சிய - பெரியாரிய பொதுவுடமைக் கட்சி, தமிழ் தேச பொதுவுடமைக் கட்சி ஆகிய அமைப்பினரும் பரவலாக கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் ஈழ ஆதரவு அமைப்பினர் மீது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை இன்னும் தொடர்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் அனைவர் மீதும் ஜெயா கும்பல் ஜோடித்தவை பொய் வழக்குகள் என்பது அம்பலமாகி வருகிறது. நீதிமன்றங்களில் போலீசு கும்பல் தக்க காரணங்களை - ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியாமல் விழிபிதுங்கி நிற்கின்றன. ஆனாலும் அடாவடித்தனமாக தோழர்களின் ஜாமீன் மறுக்கப்பட்டு



பல இடங்களில் காவல் நீடிக்கப்படுகிறது பெரும்பாலோனோர் நிபந்தனை ஜாமீனிலேயே விடுவிக்கப்பட்டுள்ளனர். ஈழ ஆதரவு இயக்கமும், இப்பாசிச அடக்குமுறைக்கு எதிரான இயக்கமும் தொடருவதால் பீதியடைந்து பார்ப்பன பத்திரிக்கைகள் கூச்சல் போடுகின்றன. அதற்கிணங்க அரசும் மீண்டும் மீண்டும் தோழர்களைக் கைது செய்து பொய் வழக்கு போடுகிறது.

இத்தகைய நடவடிக்கையால் மேலும் மேலும் மக்களிடையே பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் தன்னை அம்பலப்படுத்தி அன்னியப்பட்டு நிற்கிறது. ஜனநாயகக் குரல்களையும், புரட்சிகர நடவடிக்கைகளையும் பாசிஸ்டுகள் முடக்கியதாக வரலாறு இல்லை. ஜனநாயக குரல்கள் ஓங்கும்; புரட்சிகர நடவடிக்கைகள் வளரும். ஜெயா கும்பல் தமிழக ஆட்சியை விட்டு ஓடும் வரை ஒடுக்குமுறைக்கெதிரான இயக்கம் தொடரும்!

# போலீசின் 'மூளை'!

**காட்டுமிராண்டித்தனம், குரூரம், வக்கிரம் இவற்றை வெளிப்படுத்தும் போலீசுத் துறையின் ஒரு பக்கத்தைத்தான் மக்கள் அதிகமாகப் பார்த்து வருகிறார்கள். அதன் சட்டபூர்வ கிரிமினல் புத்தி எத்தகையது என்பது பலருக்குத் தெரியாது. அதைத் தெரிந்துகொள்வதற்காக பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் சமீப உத்தரவை ஏற்று புரட்சிகர - ஜனநாயக சக்திகள் மீது போலீசார் தொடுத்துள்ள பொய் வழக்குகள் சிலவற்றின் முதல் தகவல் அறிக்கைகளை இங்கே பிரசுரிக்கிறோம்.**

**அதில் கண்டுள்ள முழக்கங்களையும் அவற்றுக்கு போலீசார் தரும் வியாக்கியானங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். வெவ்வேறு அறிக்கைகளில் சொல்லப்படும் சம்பவங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். போலீசார் கைது செய்ததாகக் கூறப்படும் முறையை ஒப்பிட்டுப் பாருங்கள். மாநாடானாலும் சரி, தெருமுனைக் கூட்டமானாலும் சரி, சுவரொட்டி ஒட்டினாலும் சரி, பாலத்துக்கடியில் சதி செய்தாலும் சரி - எல்லாம் எப்படி ஒரே மாதிரியாக இருக்கின்றன? அதுதான் போலீசு மூளை!**

## நெய்வேலியில்...

இன்று 6.8.91ந் தேதி மாலை 18.00 மணிக்கு நான் த.கா. 457 PCS. 1183 இவர்கள் சகிதம் டவுன் ரோந்து புறப்பட்டு Bus Stand Store Road இந்த இடங்களில் வாட்சு செய்து 19.00 மணிக்கு மெயின் பஜார் நான் பார்ட்டி சகிதம் சென்ற போது மேற்படி மெயின்பஜார் டவுன் காமராஜர் சிலை அருகில் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்து மார்ஜினில் மூன்று எதிரிகளும் 1வது நபர் ஆர்.செழியன் "ஒண்ட வந்த பிடாரியே ஈழத் தமிழரை விரட்டாதே " என்ற போர்டு கையில் வைத்துக் கொண்டு கோஷம் போட்டும் 2வது நபர் சி.நெடுமாறன் என்பவர் ராஜீவ் படுகொலையை காரணம் காட்டி ஈழ அகதிகளை வெளியேற்றாதே. ஈழப் போராளிகளுக்கு தமிழகத்தில் தஞ்சம் புக உரிமை உண்டு என்ற தட்டியை வைத்துக் கொண்டு கோஷம் போட்டார். 3வது நபர் செந்தில் குமார் என்பவர் சிறப்பு விசாரணை குழுவே, ராஜீவ் கொலையை அரசியல் பழிவாங்கும் முயற்சிகளுக்கு பயன்படுத்தாதே! புதிய ஜனநாயகம் மற்றும் புதிய கலாச்சாரம் ஏடுகளின் குரல்வளையை நெறிக்காதே! என்ற போர்டுகளை வைத்துக் கொண்டும் கோஷம் போட்டும் அப்படி மீறி செய்தால் மத்திய மாநில அரசுடமைகளையும் முக்கிய அலுவலகங்களையும் தகர்த்தெறிவோம் எனவும் சட்டம் ஒழுங்கு சீர் கெடும் அளவிற்கு துண்டுதல் செய்து பிரச்சாரம் செய்தவர்களை நான் மேற்படி அனுமதியில்லாமல் பொதுமக்கள் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் பேசக்கூடாது என எச்சரித்தும் மேற்படி நபர்கள் கேளாமல் இன்னும் மத்திய பஸ்டண்ட், பொது மருத்துவமனை, புதுக்குப்பம் ரவுண்டனா இந்த இடங்களில் பேசுவோம் எனவும் கூறியவர்களை பொது அரசுடமைகளை காக்கவும் சட்டம் ஒழுங்கும் நிலை நாட்டவும் மேற்படி எதிரிகளை மேற்படி மணிக்கு அரஸ்ட் செய்ததும் உண்மையான பெயர் விலாசம் தெரிந்ததும் டி எதிரிகள் கையில் வைத்திருந்த பிரச்சாரப் போர்டுகளை மேற்படி மணிக்கு மகஜர் சாட்சியில் முன் கைப்பற்றியும் நிலையம் 20.35 மணிக்கு கொண்டு வந்து திரேக சோதனை செய்து லாக்கப் செய்து நிலைய குற்றப்பிரிவு 151 cr.pc.r/w 7(1)(9) வழக்கு செய்யப்பட்டது.

## கடலூரில்...

இன்று 20.9.91 தேதி அதிகாலை 4.30 மணி அளவில் ஆய்வாளர் (சட்டம் ஒழுங்கு) அவர்கள் மேற்பார்வையில் நான், த.கா.1075, 1876 மு.நி.கா.1430, கா.876, 1460, 772, 727, 1243 இவர்கள் சகிதம் ஆல்பேட்டை செக்போஸ்ட் அருகில் வாட்சு செய்து இருக்கும்போது மக்கள் கலை இலக்கிய கழகத்தைச் சேர்ந்த, பின்னால் ஊர் பேர் கேட்டு தெரிந்த இதன் கலத்தில் கண்ட எதிரிகள். பாலு வயது 18, சக்கரவர்த்தி வயது 30,



படிப்பகம்

www.padippakam.com

ரவி வயது 19, கலீலுர் ரஹமான் வயது 20, முருகன் வயது 18, சையத் மாலிக் வயது 20. தமிழீழ விடுதலைக்கு ஆதரவாகவும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், தமிழக அரசின் பாசிச போக்கைக் கண்டித்தும் அரசு வாகனங்களை, பாலங்களை இவற்றை தீ வைத்துக் கொளுத்த வேண்டும்; அரசுக்கு சொந்தமான சொத்துக்களை சேதம் விளைவிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டு இருந்தவர்களை நான் பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்தும் அவர்கள் அத்தகைய செயல்களை செய்து பொது அமைதியை கெடுத்து சட்டம் ஒழுங்கு பிரச்சனையே ஏற்படுத்தாமல் இருக்கும் பொருட்டும் முன் எச்சரிக்கையாக மேற்படியாளர்களை 04.30 மணிக்கு கைது செய்தும் 05.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்ததும், எதிரிகளின் பெயரில் குற்ற பிரிவு 151 7(1)(எ) கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் ஆக்ட்படி வழக்கு பதிவு செய்தும் எதிரிகளை திரேக பரிசோதனை செய்து லாக்கப் செய்யப்பட்டது.

## சென்னையில்...

இன்று 15.9.91ம் தேதி நான் வி.1 வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது வில்லிவாக்கம் பேருந்து நிலையம் எதிரே சிலா் இந்திய தேச ஒருமைப்பாட்டிற்கும் தமிழக அரசுக்கும், தமிழக முதல்வருக்கும் எதிராகவும் ஈழ தமிழா்களுக்கு ஆதரவாகவும் கோஷம் எழுப்பி இன உணா்வைத் தூண்டிவிடும் வகையில் 'பாா்ப்பன ஜெயா ஒழிக!' எனவும் குரல் எழுப்பி சுவரொட்டி ஒட்டுவதாக கிடைத்த தகவலின்பேரில் நான் த.கா.5696 கா.7796, 285 ஆகியவர்களுடன் 13.00 மணியளவில் மேற்படி இடத்திற்கு விரைந்து சென்று பார்த்தபோது, சிவன்கோயில் வடக்கு மாடவீதியில் பொது நூலக கட்டிட காம்பவுண்டு சுவர் அருகில் இதன் விளிம்பில் கண்ட எதிரிகள் சீனிவாசன் தன் கையில் சில சுவரொட்டிகளையும் அப்பு என்பவர் ஒரு பேப்பரில் பசையையும் வைத்திருக்க சீனிவாசனிடமிருந்து சுவரொட்டியில் அப்புவிடமிருந்து பசை எடுத்து மணிமாறன் தடவி கொடுத்த சுவரொட்டியை சீராளன் பெற்று சுவரில் ஒட்ட முற்பட்டார். எங்களைக் கண்டதும் சீனிவாசன் கையிலிருந்த சில சுவரொட்டிகளைக் கிழித்தார். நான் குழுவுடன் அவர்களை சூழ்ந்து விசாரணை செய்தபோது தாங்கள் மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தங்கள் பெயர் விலாசங்களை இதன் கண்டபடியும் தெரிவித்தனர். அவர்கள் ஒட்ட முற்பட்ட விளம்பர சுவரொட்டியை படித்துப் பார்த்தபோது அதில் ''ஈழ - இந்திய தமிழர்கள் மீது பார்ப்பன ஜெயா பாசிச தாக்குதல்! எதிர்க்கத் துணியாத கருணாநிதியே! முப்பெரும் விழா தேவையா? - மக்கள் கலை இலக்கிய கழகம் சென்னை என்ற சிவப்பு வண்ண எழுத்துக்கள் காணப்பட்டது. மேற்படி வாசகங்கள் இன உணர்வைத் தூண்டி தேச விரோத செயல்களை ஊக்கப்படுத்தும் விதத்திலும் ஜாதி கலவரத்தை தூண்டி சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை ஏற்படுத்தி விடக்கூடும் என்ற நோக்கில் எதிரிகளை 13.00 மணிக்கு கைது செய்தும் அவர்களிடமி



ருந்து 60 சுவரொட்டிகளை அனைத்திலும் மேற்கண்ட வாசகங்கள் உள்ளதை சாட்சிகள் மேகநாதன் மற்றும் கோபால் அவர்கள் முன்னிலையில் கைப்பற்றியும் எதிரிகளுடன் பிரிவு 121, 121(ஏ) 124(ஏ) 153(ஏ)(பி) ஐபிசி உ/சே 511 ஐ.பி.சி. அண்ட் 7(1)ஏ வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொண்டேன்.

## திருச்சியில்...

நான் இன்று 16.9.91ம் தேதி த.கா.3218 மு.நி.கா 768 பி.சி 2418 இவர்கள் பார்ட்டியுடன் இரவு 19.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும்போது என்னுடைய தகவல் கொடுப்போர் வந்து பொன்மலை ஆர்மரிகேட் முன்பு உள்ள ஆர்.டபிள்யூ.யூ. விளம்பர பலகையில் பொன்மலை ரயில்வே ஓர்க்ஸ்ஷாப்பில் வேலை செய்யும் மக்கள் கலை இலக்கிய கழகத்தை சேர்ந்த முருகானந்தம் என்பவரும் எலெக்ட்ரிகல் பிட்டர் ரவீந்திரன் என்பவரும் தமிழக அரசுக்கு எதிராகவும் ஈழ போராளிகளை ஆதரித்தும் தமிழக முதல்வரை இழிவுபடுத்தியும் போஸ்டர் ஒட்டிக் கொண்டிருப்பதாக கூறினார். நான் உடனே புறப்பட்டு த.கா.3218 மற்றும் காவலர்கள் சகிதம் ஆர்மரிகேட் வந்து பார்க்க ரவீந்திரன் என்பவர் பசை தடவி கொடுக்க முருகானந்தம் என்பவர் அந்த பசை தடவிய கையால் சிவப்பு மையில் எழுதப்பட்ட போஸ்டரை ஆர்.டபிள்யூ.யூ விளம்பர பலகையில் ஒட்டிக் கொண்டிருந்தார். அந்த போஸ்டரில், ''ஈழ விடுதலைக்கு குரல் கொடுப்போம்! ஈழ விடுதலைக்கு குரல் கொடுப்பது தமிழக மக்களின் உரிமை, காங்கிரசு - ஜெயலலிதா பார்ப்பன பாசிச கும்பலே, கருப்புப் சட்டத்தைக் காட்டி மிரட்டாதே. தமிழர் தளபதியே! ஆர்ப்பரிக்கிறது அக்கிரஹாரம், பூப்பறிக்கிறதோ உமது கரம்? படம் எடுத்து ஆடுகிறது பார்ப்பனப் பாம்பு! அடலேறே! உடன் பிறப்பே ஆளெங்கே காணோம்? 17.09.91 செவ்வாய்க் கிழமை ஆர்.டபிள்யூ.யூ.வின் பொதுக் கூட்டம்'' என்று தலைப்பிட்டு வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. அவர்கள் எழுதியிருந்த வாசகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக அரசை அவமதிப்பதாகவும், தமிழக முதல்வரை அவமதிப்பதாகவும் இதனால் தமிழக மக்களிடையே பொது அமைதியை குலைக்கக் கூடிய வகையில் இருந்ததாலும் நான் ஷ எதிரிகள் இருவரையும் இரவு 19.30 மணிக்கு கைது செய்தும் அவர்கள் ஒட்டிய போஸ்டர் காய்ந்து பிரிக்க முடியாத நிலையில் இருந்ததால் போஸ்டரை விளம்பர பலகையுடன் கழற்றி 9.45 மணிக்கு மகசரில் கைப்பற்றியும் நிலையம் கொண்டு வந்து எதிரிகள் பேரில் பொன்மலை கா.நி.யில் செக். 124(ஏ) & 153எ(பி) இ.த.ச.படி 20.15 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## கோவையில்...

''14.9.91 அன்று காலை 7.00 மணி அளவில் கரும்புக்கடை வழியே ஒண்டிப் புதூர் போய்க் கொண்டிருந்தேன். சில நபர்கள் போஸ்டர்கள் ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அப்போஸ்டர்களில் பின் வரும் வாசகங்கள் இருந்தன.

''பொது மக்களே மதவெறி சக்திகளுக்கு இரையாகாதீர்கள்''

''மத்திய - மாநில அரசுகளே! மத வெறி அமைப்புகளைத் தடைசெய்!''

''முஸ்லீம் மக்களே! தற்காப்பு என்ற பெயரால் சமூக விரோத சக்திகளுக்கு இரையாகாதீர்.''

இந்த வகையான போஸ்டர்கள் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை உருவாக்கும். கோவை நகரில் இப்போதுள்ள நிலைமையைப் பார்க்கும்போது வகுப்பு ஒற்றுமையைக் கூட குலைக்கும் என்று நான் கருதுகிறேன். இது சம்பந்தப்பட்ட அமைப்புகள், நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி பி-5 போலீஸ் நிலைய சப்-இன்ஸ்பெக்டரிடம் கேட்டுக் கொண்டேன்.''

இந்தப் புகாரின் அடிப்படையில் தண்டபாணி, நடராஜன் (நசீம்இக்மத்) மணிவண்ணன், வேலுசாமி மற்றும் பொன்னுசாமி ஆகிய ஐந்து பேரைக் கைது செய்து, 505 (1)(பி), 153(பி)(சி), 120(பி) பிரிவுகளின் கீழ் சிறையிலடைக்கப்பட்டனர்.

## மதுரையில்...

இன்று இரவு 21.9.91 காலை 11 மணிக்கு செல்லூர் ஏரியா புது ரயில்வே பாலம் வடக்கிலிருந்து தெற்கே உள்ள 2வது கண்ணில் மறுபோக்கு அணி (Radical Youth League) யினர் சட்ட விரோதமாக ஷ இடத்தில் 10.00 மணிக்கு கூட்டம் நடத்துவதாக கிடைதத தகவலின் பேரில் நான் போலீஸ் பார்ட்டியுடன் சென்று ஷ இடத்தில் மார்சினில் கண்ட எதிரி A1 தலைமையில் மற்றும் 5 பேர் சட்ட விரோதமாக கூடியிருந்து ஷ புகழேந்தி தலைமையில், புகழேந்தியானவர் மற்ற 5 பேரையும் பார்த்து ''தற்கால மாநில, மத்திய அரசாங்கங்கள் இருக்கும் வரை அதிகார வர்க்கத்தின் அடக்குமுறை ஒழியாது. முதலாளி - தொழிலாளி பாகுபாடு குறையாது. ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்டவர்களாகிய நாம ஒடுக்கப்பட்டே, நசுக்கப்பட்டேபோக வேண்டியதுதான். எனவே, நாம நம் நிலைமை மாற அதிகார வர்க்கம் ஒழிய முதலாளி - தொழிலாளி என்ற ஏற்றத் தாழ்வு மாற தற்போதுள்ள மத்திய மாநில அரசுகளை அகற்றப்பட வேண்டும். ஷ அரசுகளை அகற்றுவதற்கு நாட்டில் அதிகப்படியான வன்முறைகளை




படிப்பகம்

www.padippakam.com

தூண்டிவிட வேண்டும். நாமும் வன்முறைகளில் ஈடுபட வேண்டும். வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு பொதுச் சொத்துக்களைத் தாக்கி சேதப்படுத்த வேண்டும். தடுக்க வரும் அதிகாரிகளை ஷெ ஆயுதங்களால் தாக்க வேண்டும். வன்முறை தலைவிரித்தாடச் செய்ய வேண்டும். பொது ஜனங்களுக்கு பீதியுண்டாக்க வேண்டும். நாட்டில் கலகத்தை உண்டு பண்ணி எல்லா இடங்களிலும் வன்முறை தலைவிரித்தாடச் செய்து பதவியில் இருக்கும் அரசாங்கத்தினை கவிழ்க்க வேண்டும். அதற்கு நாம் எல்லோரும் நம் இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் வெடிமருந்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு இப்பவே புறப்பட்டுச் சென்று வன்முறையில் ஈடுபட்டு பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்த வேண்டும். மேலும் இன்று தமிழக Finance Minister திரு. நெடுஞ்செழியன் அவர்கள் மதுரை வருகை தந்துள்ளார். அவரையும் தாக்க வேண்டும். உடனே புறப்பட வேண்டும் என்றார். அதனை மற்ற அனைவரும் ஏற்றுக் கொண்டு ஆமோதித்து கோசங்களை எழுப்பி எல்லோரும் வன்முறையில் ஈடுபட சதித்திட்டம் தீட்டி புறப்பட்டுச் செல்ல இருந்தவர்களை, மார்சினில் கண்ட எதிரிகளை நான் போலீஸ் பார்ட்டியுடன் தடுத்து நிறுத்தி கைது செய்தும், வன்முறையைத் தூண்ட வேண்டும் என்று எழுதி வைத்திருந்த தட்டியை அத்தாட்சியில் கைப்பற்றியும், நிலையம் 12 மணிக்கு வந்து J1 PS Cr.No.1093/91 u/s 143, 144 120(B), 124(A), &7(A)(B) Cr.L.A.Act.-ன் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## மதுரையில்...

நான் செல்லூர் வட்ட காவல்துறை சட்ட ஒழுங்கு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இன்று 15.9.91 9 மணிக்கு செல்லூர் அகிம்சாபுரம் மெயின்ரோடு ரைட்டர் மணி பில்டிங்கில் முற்போக்கு அணியின் முதல் மதுரை மாவட்ட மாநாடு நடத்துவதாக ஏற்கனவே அவர்கள் அறிவித்திருந்ததை ஷெ இடத்தில் கூட்டம் நடத்துவதாக தகவல் தெரிந்து நான் போலீஸ் பார்ட்டியுடன் 10.30 மணிக்கு சென்று ஷெ இடம் தோழர் சீராளன் அரங்கத்தின் உள்ளே சோமசுந்தரம் த/பெ சுந்தராஜன் தலைமையில் மற்றும் 32 பேர்கள் சட்ட விரோதமாக கூடியிருந்து ஷெ சோமசுந்தரம் எல்லோரையும் பார்த்து தற்கால 'மாநில மத்திய அரசாங்கங்கள் இருக்கும் வரை' அதிகார வர்க்கத்தின் அடக்குமுறை ஒழியாது. முதலாளி - தொழிலாளி பாகுபாடு குறையாது. ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்டவர்களாகிய நாம் ஒடுக்கப்பட்டே போக வேண்டியதுதான். எனவே, நாம் நிலைமை மாற அதிகார வர்க்கம் ஒழிய முதலாளி - தொழிலாளி என்ற ஏற்றத்தாழ்வு மாற தற்போதுள்ள மத்திய மாநில அரசுகளை அகற்றப் பாடுபடவேண்டும். ஷெ அரசுகளை அகற்றுவதற்கு நாட்டில் அதிகப்படியான வன்முறைகளை தூண்டி விடவேண்டும். நாமும் வன்முறைகளில் ஈடுபட வேண்டும். வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்த வேண்டும். தடுக்க வரும் அதிகாரிகளை ஷெ ஆயுதங்களால் தாக்க வேண்டும். வன்முறை தலைவிரித்தாடச் செய்ய வேண்டும். பொது ஜனங்களுக்கு பீதியுண்டாக்க வேண்டும். நாட்டில் கலகத்தை உண்டு பண்ணி எல்லா இடங்களிலும் வன்முறை தலைவிரித்தாடச் செய்து பதவியிலிருக்கும் அரசாங்கத்தினை கவிழ்க்க வேண்டும். அதற்கு நாம் எல்லோரும் நம் இயக்கத்தை சேர்ந்த அனைவரும் வெடிமருந்து, ஆயுதங்களை எடுத்துக் கொண்டு இப்படியே புறப்பட்டுச் சென்று வன்முறையில் ஈடுபட்டு பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்த வேண்டும். மேலும் இன்று அண்ணா பிறந்த நாள். தமிழக அமைச்சர்கள் மதுரைக்கு வருகை தந்துள்ளனர். அவர்களைத் தாக்க வேண்டும். உடனே புறப்படுங்கள் என்றார். அதனை மற்ற அனைவரும் ஏற்றுக் கொண்டு ஆமோதித்து கோசங்களை எழுப்பி எல்லோரும் வன்முறையில் ஈடுபட சதித்திட்டம் தீட்டி புறப்பட்டு செல்ல இருந்த ஷெ எதிரிகளை நான் பார்ட்டியுடன் தடுத்து நிறுத்தி கைது செய்தும், வன்முறையை தூண்ட வேண்டும் என்று எழுதி வைத்திருந்த தட்டிகளை அத்தாட்சியில் கைப்பற்றியும் நிலையம் 11.30 மணிக்கு எதிரிகளுடன் வந்து J1 PS Cr.No.1086/91 u/s 143, 144 120(B), 124(A), &7(1)(a) Cr.LA-Act. படி வழக்கு பதிவு செய்து, எதிரிகளை முறைப்படி சர்ச் செய்து பாராவில் ஒப்புவித்தேன்.



## அரூரில்...

இன்று 21.9.91ந் தேதி காலை நான் ஆய்வாளர் திரு.முத்துசாமி காவல்துறைக் கண்காணிப்பாளர் உதவி ஆய்வாளர்கள் வெள்ளைச்சாமி, முரளி, சுப்பிரமணியம், ஏகநாதன் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் ஏ.பி.எஸ்.பி. பெர்னாண்டஸ் அவர்களின் தலைமையில் முற்போக்கு இளைஞர் அணியினர் மாநாடு நடத்துவதாக தீர்மானித்திருந்ததன் பேரில் மாநாடு நடைபெற்றால், அரூர் டவுன் மற்றும், சுற்று வட்டாரத்தில் மாநாட்டிற்கு பலத்த எதிர்ப்பு இருந்ததால், கோஷ்டிப் பூசல்களும், அரசியல் கட்சிகளுக்கிடையே பெரும் கருத்து வேறுபட்டு, வேறுபாடு ஏற்பட்டு, ரத்தக்களரி ஏற்படுவதுடன், அரசு தனியார் சொத்துக்களுக்கும் பொது மக்களின் உயிருக்கும், பாதுகாப்பு அளிக்க வேண்டி தர்மபுரி ஆர்.டி.ஓ. அவர்களால், 20.9.91ந் தேதி முதல், 15 நாட்களுக்கு 144, சி.ஆர்.பி.சி. படி தடை உத்திரவு பிறப்பித்திருந்தபடியால், நான் ஷெ போலீஸ் பார்ட்டியுடன் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, காலை 10 மணிக்கு பெத்தூர் ஆரம்பப் பள்ளியின் முன் சுமார் 250 பேர், முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள் சட்ட விரோதமாகக் கூடி, அரூர் டவுனுக்குச் சென்று, மாநாடு ஊர்வலம் துவக்குவது, யாராவது தடுத்தால், அவர்களைத் தாக்கிக் கொலை செய்வது, நம் லட்சியத்தை நிறைவேற்றுவது என்றும் முடிவு செய்து, பேசிக் கொண்டிருப்பதாக தகவல் கிடைத்ததால், உடனே புறப்பட்டு, போலீஸ் வாகனங்களில் ஷெ பார்ட்டியுடன் பெத்தூர் கிராமத்தில் 10.20க்கு சென்றோம்.

பெத்தூரில் ஆரம்பப் பள்ளியின் முன்னால், எப்.ஐ.ஆரில் கண்ட எதிரிகள் முற்போக்கு இளைஞர் அணியின் தலைவர் ரவி வயது 38. த/பெ. ராதாகிருஷ்ணன், மற்றும் 257 பேர்கள் ''நக்சல்பாரிகள் தேசபக்தர்கள் எம்.எல்.ஏ., எம்.பிக்கள் பணக்காரன் கூஜாக்கள்; பாப்பாத்தி ஜெயலலிதாவுக்கு துணைபோகும் போலீஸ் நாய்கள் ஒழிக! பாராளுமன்றத்தில் குண்டு வைத்து, தூக்குக் கயிற்றை முத்தமிட்ட பகத்சிங் வழியில் நடப்போம்! சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவோம்'' என ஆக்ரோஷமாகவும் கோஷம் போட்டவர்களை சுற்றி வளைத்து, 10.30 மணிக்கு கைது செய்தும், எதிரிகள் வைத்திருந்த தடிகள் 23-க் கைப்பற்றியும், எதிரிகளை போலீஸ் வாகனங்களில் ஏற்றி அரூர் காவல் நிலையத்திற்கு காலை 10.40 மணிக்குக் கொண்டு வந்து, மேற்படி எதிரிகளை வாகனங்களில் இருந்து இறக்குகிற போது, அனைத்து எதிரிகளும், மேலே குறிப்பிட்ட கோஷங்களை ஆக்ரோஷமான முறையில் போட்டு, போலீசாரிடமிருந்து தப்பி ஓட, போலீஸ் பார்ட்டியைத் தள்ளிக்கொண்டு, தாக்க முற்பட்டு, ஓடியவர்களைப் பார்த்தும், உடன் இருந்த தாசில்தார் திரு.வாசு அவர்கள் எதிரிகளின் பலத்தைக் குறித்து, அவர்களைத் தப்ப விடாமல் பிடியுங்கள் என்றும், மீறினால், குறைந்த பட்ச பலத்தை உபயோகித்து, கட்டுப்படுத்துங்கள் என்றும், கொடுத்த உத்தரவின் பேரில், எங்களிடம் இருந்த பிரம்பால், பின்னால் பெயர் தெரிந்த எதிரிகள் உமர், ராஜா, சுந்தரம், சிவக்குமார், திருநாவுக்கரசு, பெருமாள், தமிழ்ச் செல்வன் இவர்களின் மீது, குறைந்த பட்ச பலத்தை உபயோகித்து எதிரிகள் அனைவரையும் கட்டுப்படுத்தி, காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து எதிரிகள் பேரில் 147, 148, 188 224, ஆர்.டபிள்யூ. 511 ஐ.பி.சி. மற்றும் 7(1) (எ) சி.எல்.ஏ.ஆக்ட் படி வழக்குப் பதிவு செய்தும், காயம் பட்ட எதிரிகள் உமர், ராஜா, சுந்தரம், திருநாவுக்கரசு, பெருமாள், தமிழ்ச் செல்வன், இவர்களை அரூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டது. ஆண் கைதிகளை சோதனை செய்தும், பெண் கைதிகளை பெண் போலீசாரால் சோதனைச் செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர்.

ஏறக்குறைய இதே வாசகங்களுடன் அரூரில் 20 பேரும், மொரப்பூரில் 32 பேரும் கைது செய்ததாக தனித்தனியே போலீசு அறிக்கைகள் உள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



"பார்த்தாலே குலை நடுங்குது. இன்றைக்கு எனக்கு தூக்கமே வராதே" என்றார் இப்படத்தைப் பார்த்த ஒருவர்.

"நெசமாலுமே இது மனுசனா? இருக்காது; இது பொம்மையாக இருக்கும்" என்று குழந்தைத் தனமாகக் கேட்டார் இன்னொருவர்.

இப்படுகொலை காட்சியை யாராலும் பார்வையால்கூட கிரகிக்க முடியவில்லை. ஏனெனில் கொலைக் குற்றவாளிக்கு கூட இங்கு இப்படி ஒரு தண்டனை கிடையாதே!?

யார் இவர்? எப்படி நேர்ந்தது? என்னதான் குற்றம் செய்தார்? தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்ததுதான் இவர் செய்த குற்றமாம்!? கர்நாடகா - பீஜப்பூர் அருகே ஹினாஹல்வி கிராமத்தில் ஓட்டல் வைத்து நடத்திவரும் ராவடப்பா யால்வார் என்பவர் இவர்!

செப்டம்பர் 20-ந்தேதி ஊரில் இவரோடு நான்கு பேரும் இப்படி கோரமாக கிடந்தனர்.

தாழ்த்தப்பட்ட இளைஞன் சுரேஷ், சவரனா (மேல்) சாதியைச் சேர்ந்த சுனீதாவை காதலித்தான். ஆத்திரமடைந்த மேல்சாதி வெறியர்கள் சுரேஷ் குடும்பத்தையே ஒழிக்கத் திட்டமிட்டு ஊரின் மின் மற்றும் தொலைபேசி இணைப்புகளைத் துண்டித்தனர். ஆயுதங்களுடன் கும்பலாக ராவடப்பா (சுரேஷின் தந்தை) ஓட்டலை எரிப்பதற்காக மண்ணெண்ணெய் தீப்பந்தத்தோடும் காத்திருந்தனர்.

ராவடப்பா, இவரின் தம்பி, தந்தை, நண்பர் மற்றும் மகன் சுரேஷ் ஆகியோர் ஓட்டலுக்குள் இருந்தனர். கொலைவெறி கும்பலின் தாக்குதல் பொறுக்க முடியாமல் துணிந்து தட்டிக்கேட்க வெளிவந்தார் ராவடப்பா! மறுவினாடிகளில் மேல் சாதிக் கும்பலால் தாக்கப்பட்டார்! கால்கள் துண்டாக வெட்டப்பட்டு கோரமாக சுருண்டு வீழ்ந்தார்!

தொடர்ந்து இப்படியே எஞ்சிய நால்வரின் உறுப்புகளையும் வெட்டிப் போட்டது மேல்சாதி கும்பல்!

மராட்டிய மாநிலம், தேஷ்முக் - பிம்பிரி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த போலீசுக்காரர் அம்பாதாஸ் சவானே, ஒரு இந்து கோயிலில் மழைக்காக ஒதுங்கியபோது மேல்சாதி வெறியர்களால் அடித்தே கொல்லப்பட்டார். நாளாக நாளாக மேலும் பல உண்மைகள் அம்பலமாயின.

சவானே, தலித் அமைப்பின் செயல்பாடுகளில் ஊரில் தீவிரமாக செயல்பட்டவர். ஊரில் அம்பேத்காரின் சிலையை நிறுவுவதற்காக முன்னின்று செயல்பட்டார். அம்பேத்கார் சிலை நிறுவ இருந்த இடத்தில் தங்கள் சாதி தலைவர் ஒருவருக்கு சிலை வைக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கூறி மேல்சாதிக்காரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஊரில் உள்ள சிவசேனா



## ★ உயிரோடு எரிப்பு ★

# நர வேட்டையாட

காரர்கள் மற்றும் ஊர் தலைவர்கள் பலர் கடுமையாக எதிர்த்து தடுத்தனர்.

ஆனால், சவானே எதற்கும் அஞ்சாமல் அம்பேத்கார் சிலை நிறுவுவதற்குரிய பணியைத் தொடர்ந்தார். இதைப் பொறுக்க முடியாத மேல்சாதிக்காரர்கள் குறிப்பாக சிவசேனா காரர்கள் சவானேயை பழிவாங்க தருணம் பார்த்து காத்திருந்தனர்.

ஆகஸ்டு 16-ந் தேதி கிராமத்தில் ரோந்து பணி மேற்கொண்டிருந்த சவானே மழையின் காரணமாக அனுமார் கோயிலருகே ஒதுங்கினார். அச்சமயம் உள்ளே பூஜை செய்து கொண்டிருந்த மேல்சாதிக்காரர்கள் ஆளரவம் இல்லாத அந்நேரத்தில் சவானேயின் தனிமையைப் பயன்படுத்தி பழிதீர்த்துக் கொண்டனர். சவானேயை சிவசேனாவைச் சேர்ந்தவர்களே முன்னின்று தாக்கி - கல்லில் மோதி கொன்றனர்.


சவானே அடித்துக் கொல்லப்பட்ட செய்தியின் ஈரம் உலர்வதற்குள் மராட்டிய மாநிலத்தில் கோர்த்தாலா கிராமத்தில் ஒரு சம்பவம்! தாழ்த்தப்பட்டவர் சாத்வா ரம்பா கேம்பிள் என்பவருக்கும், மேல்சாதியைச் சேர்ந்த கந்துவட்டிக்காரரும், பள்ளி ஆசிரியருமான கணேஷ் காசிநாத் குல்வே என்பவருக்கும் இடையே ஒரு நிலப்பிரச்சினை தொடர்பாக பகை நிலவியது. குல்வே, தாழ்த்தப்பட்ட சாதியிலேயே சில ரௌடிகளை கூலிக்கமர்த்தி செப்டம்பர் 7-ந் தேதி சாத்வாவையும் அவரது மகன்கள் இருவரையும் அடித்தே கொலை செய்தான்.

குஜராத் - மேஹ்சனா மாவட்டத்தில் குண்டரேசன் கிராமத்தில் இருட்டியபின் தாழ்த்தப்பட்டவர்கள் யாரும் தனியாக நடமாட முடியவில்லை; எந்நேரத்திலும் மேல்சாதிக்காரர்களால் தாக்கப்படலாம்! வீட்டை விட்டுவிட்டு வெளி வேலைக்குச் செல்ல முடியவில்லை; எந்நேரத்திலும் மேல்சாதிக்காரர்களால் வீடு கொளுத்தப்படலாம்! தாழ்த்தப்பட்டவர்களின் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை;



படிப்பகம்

www.padippakam.com



### ...ர் ஊர்வலம் ★ அடித்துக் கொலை

# ...ம் தாழ்த்தப்பட்டோர்

'**தீ**ண்டத்தகாதவர்கள்' என சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கி சுரண்டப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள்! நிலப்பிரபுத்;,வ வர்ணாசிரம கொடுமைகளுக்கு உள்ளாகி அவற்றை சமூக நியதியாகவும் ஏற்று அடிமைப்பட்டு கிடந்தவர்கள் நாளடைவில் விழிப்புணர்வு பெற்றார்கள். தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆர்த்தெழுந்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்கான - சமூக நீதிக்கான குரல்கள் பூலே, அம்பேத்கார், பெரியார் காலக்கட்டத்தில் மேலும் வலுப்பெற்றன.

அதேபோல் இதற்கிணங்க தாழ்த்தப்பட்டவர்களின் மீதான வர்ணாசிரம, நிலப்பிரபுத்துவ சாதி - மத தாக்குதல்களும் தீவிரமடைந்தன; மூர்க்கமாகப் பாய்ந்தார்கள், எதிரிகள்!

கூலி உயர்வு - சமூக அந்தஸ்து கேட்டு போராடிய தாழ்த்தப் பட்டவர்கள் கொத்து கொத்தாக வெட்டிக் கொல்லப்பட்டனர்; குடிசையில் உயிரோடு கொளுத்தப்பட்டனர். கோயிலில் நுழைவது, பொதுக்கிணற்று நீரை பயன்படுத்துவது எங்கள் உரிமை என்று குரல்கொடுத்தவர்கள் தாக்கப்பட்டனர்; சித்திரவதை செய்யப்பட்டனர்.

பறையடிக்க - மலம் அள்ள மறுத்தவர்கள் ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்; கொடுக்கல் வாங்கல் எதுவுமின்றி புறக்கணிக்கப்பட்டார்கள். செருப்பு அணிந்து, மேல்சட்டை அணிந்து சலாம்போட மறுத்து எதிர்ப்பு காட்டியவர்கள் எல்லாம் வதைக்கப்பட்டார்கள்; கை - கால்கள் - விரல்கள் - காதுகள் வெட்டப்பட்டு தண்டிக்கப்பட்டனர். தாழ்த்தப்பட்ட கன்னிப் பெண்களை முதலில் பெண்டாளுகிற உரிமை மேல்சாதி - நிலப்பிரபுக்களுக்கே இருந்தது! இணங்க மறுத்த பெண்கள் பலாத்காரப்படுத்தப்பட்டனர்; நிர்வாணமாக்கி ஊர்வலம் விட்டு அவமானப்படுத்தப்பட்டனர்.

உரிமை - சலுகை வேண்டி நடத்தப்பட்ட ஊர்வலத்திலும், திருமணம் மற்றும் இறுதி சடங்கு ஊர்வலத்திலும் எதிரிகள் திட்டமிட்டு கலவரத்தை மூட்டியதால் எண்ணற்ற தாழ்த்தப்பட்டவர்கள் துப்பாக்கிக்கு இரையாகினர்.

கடந்த சில வருடங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான இத்தாக்குதல்கள் மேலும் அதிகரித்துள்ளன. 1990-ல் மட்டும் 538 பேர் கொல்லப்பட்டதாகவும், 785 பேர் கற்பழிக்கப்பட்டதாகவும், 553 பேர் உயிரோடு எரிக்கப்பட்டதாகவும், 1570 பேர் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் அரசே புளுகுகிறது என்றால் உண்மையை நம்மால் யூகிக்க முடியும்! கடந்த இரு மாதங்களிலோ இது மேலும் தீவிரமடைந்துள்ளன. ஆந்திரா - சுண்டூர்

...ல்சாதிக்காரர்களால் ...இிவுபடுத்தப்பட்டு தாக்கப்படுகிறார்கள்!

...டேல் எனும் மேல்சாதி நிலப்பிரபுக்கள் ...கள் பால் பண்ணையில் வேலைசெய்த ...ழ்த்தப்பட்டவர்களை எல்லாம் ...விட்டனர். எப்பொருளும் ஊரில் ...டக்க முடியாத வண்ணம் ...ழ்த்தப்பட்டவர்கள் ...ல்சாதிக்காரர்களால் ...க்கணிக்கப்படுகிறார்கள். ஆடு, மாடு ...த்திருக்கும் தாழ்த்தப்பட்டவர்கள், ...், தயிர் முதலானவற்றை மற்ற ...யினரிடம் விற்க முடியவில்லை. ...த்தப்பட்டவர்கள் தங்கள் குடியிருப்பு ...ும் கோயில் நிலத்தை மேல்சாதி ...ப்பிரபுக்களின், பால்பண்ணைக்கு தர ...த்ததாலேயே இத்தனை ...டுமைக ...ும்!

... பஞ்சாயத்துக் கமிட்டி உறுப்பினரான ...த்தப்பட்டவர் ரமாபாய்! ...த்தப்பட்டவர்களுக்குரிய நிலத்தில் ...யில் கட்ட திட்டமிடப் பட்டிருந்ததால் ...சாதி நிலப்பிரபுக்களுக்கு நிலத்தை தாரை வார்க்க மறுத்தார்! நிலப்பிரபுக்கள் பஞ்சாயத்து கமிட்டியையே விலைபேசிய போதும் ரமாபாய் எதிர்ப்பு தெரிவித்து நிலத்தை தாரை வார்க்கும் முடிவில் கையெழுத்திட மறுத்தார்!

இதனால் ரமாபாய் ஆகஸ்டு 27-ந் தேதி நிலப்பிரபுக்களின் ஆட்களால் தாக்கப்பட்டார். நிலப்பிரபுக்களின் கூலிக்கும்பல் ரமாபாயை மண்ணெண்ணெய் ஊற்றி உயிரோடு கொளுத்தியது; சிலரின் உதவியால் பலத்த தீக்காயங்களுடன் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார் ரமாபாய்!

நான்கு நாட்கள் கழித்து குஜராத்தில் சித்ரோடிபூரா கிராமத்தில் இன்னொரு கொடுமை! தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த டிராக்டர் டிரைவர் மேல்சாதி நிலப்பிரபுக்களால் கொலை செய்யப்பட்டு ரயிலடியில் வீசப்பட்டார். தனக்கு கொடுக்கப்பட வேண்டிய சம்பள பாக்கியை கேட்டார் என்பதாலேயே இவர் கொலை செய்யப்பட்டார்!



படிப்பகம்

www.padippakam.com



மேல் சாதிவெறியர்களால் கொல்லப்பட்ட போலீசுக்காரர் சவானேயின் குடும்பத்தினர்

படுகொலையைத் தொடர்ந்து கர்நாடகா, மஹாராஷ்டிரா, குஜராத், பீகார், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுக்கடுக்காக நடைபெற்ற சம்பவங்களே சான்று பகர்கின்றன.

பீகாரில் நிலப்பிரபுக்கள் ஆயுதம் தரித்த தனிரகசியப் படைகட்டி தாழ்த்தப்பட்டவர்களை வேட்டையாடி வருகின்றனர். அரசுப்படை போதாது என்று கிரிமினல் படைகட்டி தம்மை மேலும் ஆயுதபாணியாக்கிக் கொள்கிறார்கள் எதிரிகள். சாதி - மத அமைப்புகளும் இந்தியாவில் செல்வாக்கு பெற்று வளர்ந்து வருகின்றன. பா.ஜ.க. செல்வாக்கு பெற்று ஆட்சியிலுள்ள உ.பி., ம.பி. யில்தான் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான கொடுமைகள் அதிகம் என்கிறது அரசு புள்ளிவிவரம்!

அம்பேத்கார், பெரியார் போன்றவர்களின் போராட்டங்கள் - செயல்பாடுகள் இந்திய அரசியல் கட்டுமானத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சில உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று தந்தன. ஆனால், இவையெல்லாம் பெயரளவிற்கானதே! 'தீண்டாமை ஒரு குற்றம்', 'தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழைய உரிமைச் சட்டம்', 'ஒடுக்கப்பட்டவர்களுக்கான - சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கான பாதுகாப்பு உரிமைச் சட்டங்கள்', 'சமூக நீதி - உரிமைச் சட்டங்கள்' முதலானவை எல்லாம் ஏட்டளவிலேயே உள்ளன. நடைமுறையிலோ இன்னும் தாழ்த்தப்பட்டவன், மேல்சாதிப் பெண்ணை காதலித்ததற்காக வெட்டிக் கொல்லப்படுகிறான். கோயிலில் மழைக்காக ஒதுங்கிய தாழ்த்தப்பட்டவர் சவானே நாயைப்போல் அடித்து சாகடிக்கப்படுகிறார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கும் துண்டு நிலமும் பறிக்கப்படுகிறது; மறுத்த ரமாபாய் உயிரோடு எரிக்கப்படுகிறார்! தாழ்த்தப்பட்டவர்களை வெட்டிக் கொன்ற அல்லது உயிரோடு கொளுத்திய எந்த மேல்சாதிக்காரனாவது - நிலப்பிரபுவாவது சட்டத்தில் உரிய முறையில் தண்டிக்கப்பட்டதற்கு வரலாறு உண்டா? தாழ்த்தப்பட்டவர்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளில் அரசு தானாகத் தலையிட்டு தடுத்ததுண்டா - பாதுகாத்ததுண்டா? எதுவுமில்லை.

சுருக்கமாகச் சொன்னால் பல ஆயிரம் வருடங்களுக்கு முன் தாழ்த்தப் பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அப்படியே இன்றும் தொடர்கின்றன.

தாழ்த்தப்பட்டவர்கள் நிராயுதபாணிகளாக சிதறிக் கிடக்கிற இந்நிலையில் மறுபுறம் மேல்சாதி - நிலபிரபுத்துவ சக்திகள் தம்மை கிரிமினல் மற்றும் அரசு எந்திரத்தின் மூலம் ஆயுதபாணியாக்கிக் கொள்கின்றன; பார்ப்பன - வர்ணாசிரம - ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்கின்றன நிலப்பிரபுத்துவ சாதி - மதக் கொடுமைகளை விரிவுபடுத்துகின்றன.

தாழ்த்தப்பட்டவர்களின் அவல நிலைக்கு ஓட்டுக்கட்சிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட தலித் - அம்பேத்கார் அமைப்பகளுக்கும் பங்குண்டு. இச்சமூக அமைப்புக்குள்ளேயே தாழ்த்தப்பட்டவர்கள் நிலையை மாற்றிடுவதாக அவர்கள் கனவு கண்டார்கள். அதற்காக அரசின் சலுகைகளையும் - இட ஒதுக்கீடுகளையும் பெற்று சிலர் முன்னேறிய பிறகு அரசு எந்திரத்தில் பலம் பெற்று அதன்பிறகு ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றிவிடுவதாக கூறுகிறார்கள்.

ஆனால், நடந்தது என்ன? 45 வருட காலமாக அரசின் இட ஒதுக்கீடு - சலுகைகளைப் பெற்றதன் மூலம் 8.64 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களே அரசு முதல்நிலை பதவிகளில் அமர முடிந்தது. எஞ்சியவற்றில் பார்ப்பன - மேல்சாதி கும்பல் நிறைந்திருப்பதோடு இன்றுவரை தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்கா எதையும் நடைமுறைப்படுத்த முடியாதவண்ணம் தடையாக செல்வாக்கு செலுத்துகின்றன.

அரசின் சலுகைகள் - சன்மானங்கள் - இட ஒதுக்கீடுகள் தனிப்பட்ட சிலரை முன்னேற்றியதே தவிர ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சமூகத்தை அல்ல. முன்னேறிய அச்சிலரும் அரசு எந்திரத்தி ஒரு அங்கமாகிப் போனதுதான் இதுவை நடந்துள்ளது.

இவையெல்லாம் உணர்த்துவது என்ன? நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் அதன் சாதிய மதக் கொடுமைகள் இச்சமூக அடிப்படையாகவே நீடிக்கின்றன. பார்ப்பன வர்ணாசிரம ஒடுக்குமுறைகளே மேலாதிக்கம் செலுத்துகின்றன. அரசியல் அதிகாரத்தின் மூலம் தம்மை பாதுகாத்துக் கொள்கின்றன; பலப்படுத்தி வருகின்றன. எனவே இட ஒதுக்கீடு - சலுகைகள் மூலமாக அல்ல; சமூக அடிப்படையை மாற்றுவதன் மூலமே தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலையை சாதிக்க முடியும். அதற்காக அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். அரசியல் அதிகாரம் உழைக்கும் மக்களி கையிலிருக்கும் போதே தாழ்த்தப்பட்ட சமூகத்தை முறையாக கவனம் செலுத்தி முன்னேற்ற முடியும். நிலப்பிரபுத்துவ - மேல்சாதிய சக்திகளை அடக்கி ஒடுக்கி தாழ்த்தப்பட்டவர்களின் உயிர் - உடமை மானத்திற்கும் உத்தரவாதமளிக்க முடியுப் எனவே, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற புரட்சியாளர்கள் தலைமையில் தாழ்த்தப்பட்டவர்கள் அணி திரண்டு ஆயுத பாணிகளாக வேண்டும். இதுவே தாழ்த்தப்பட்டவர்கள் முன் எழுந்துள்ள அவசர - அவசியப் பணியாக இன்றைய சாதியக் கொடுமைகள் உணர்த்துவன.

● சுட்



பீகார்: தொடரும் சாதிவெறிப் படுகொலைகள்



படிப்பகம்

www.padippakam.com



# புதிய ஜனநாயகம் மீது பொய்வழக்கு விற்பனையாளர்கள் மீது போலீசின் தாக்குதல்

பார்ப்பன - பாசிச ஜெயா ஆட்சி
ில் பத்திரிக்கைச் சுதந்திரமும் கேள்விக்குள்
ாகியுள்ளது; பத்திரிக்கைகளின் குரல்வ
ளையும் நசுக்கப்படுகிறது. கிசுகிசு ஏடுக
ான 'தராசு' மற்றும் 'நக்கீரன்' ஆகியவை
ாக்கப்பட்டன; மிரட்டப்பட்டன. அதற்கு
ன்னதாக ராஜீவ் கொலையை விசாரிக்கும்
.பி.ஐ., சிறப்புப் புலனாய்வுக் குழு, 'புதிய
னநாயக'த்தின் மீது கொல்லைப்புற வழி
ாக தாக்குதல் தொடுத்தது. இன்று 'ஜெ'
ம்பலின் தூண்டுதல் பேரில் போலீசு, தமிழ
மெங்கும் 'புதிய ஜனநாயக'த்தை சட்ட
ிரோதமாக தாக்கியுள்ளது.

'ஜெ' கும்பல் ஈழ ஆதரவாளர்கள் மீது
ாசிச அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்
தை தக்க தருணத்தில் 'புதிய ஜனநாயகம்'
ம்பலப் படுத்தியது. இது தொடர்பாக கட்
ரை ஒன்று எழுதியதோடு, கண்டித்து சுவ
ாட்டியும் வெளியிட்டது. இவை தமிழக
ங்கும் பரந்த அளவில் வீச்சை ஏற்படுத்தின. பீதியடைந்த ஆளுங் கும்பல் 'புதிய ஜனநாயக'த்தின் மீதும் பாய்ந்தது.

மதுரையில் நகரெங்கும் 'புதிய ஜனநாயகம்' சுவரொட்டிகளை கண்டதும் அடுத்த நாளே மதுரை போலீசு, 'புதிய ஜனநாயகம்' ஆசிரியர் மீதும் அச்சிடுபவர் மீதும் பொய் வழக்குகள் போட்டது. மறுபுறம் கொல்லைப்புறமாகவும் தாக்குதல் தொடர்ந்தது. மதுரை பேருந்து நிலையக் கடைகளில் 'புதிய ஜனநாயகம்' விற்கக் கூடாது என மிரட்டி புத்தகங்களை எல்லாம் அள்ளிச் சென்றது.

கடலூர், நெய்வேலி, விருத்தாச்சலம் மற்றும் பல பகுதிகளில் ஒட்டப்பட்ட 'புதிய ஜனநாயகம்' சுவரொட்டிகளை போலீசு கிழித்தெறிந்தது. நெய்வேலி பேருந்து நிலையக் கடையிலும் மிரட்டி புத்தகத்தைப் பிடுங்கி சென்றுள்ளார்கள். விருத்தாச்சலத்தில் புத்தகம், சுவரொட்டி விநியோகித்ததற்காக முகவர் தோழர் ஜெயகாந்திசிங் கைது செய்யப்பட்டுள்ளார். அருப்புக்கோட்டையிலும் போலீசு இதேவகை தாக்குதல் தொடுத்ததோடு, முகவரை அடையாளங் காட்டும்படி கூறி ஒரு கடைக்காரரை மிரட்டி தாக்கியும் உள்ளது.

'புதிய ஜனநாயகம்' மீது சட்டபூர்வ முறையில் நடவடிக்கை எடுத்தால் பகிரங்கமாக அம்பலமாகிவிடுவோம் என்பதால் இப்படி கொல்லைப்புறமாக தாக்குதல் தொடுக்கிறது, ஆளுங்கும்பல். இதன்மூலம், 'புதிய ஜனநாயகம்' செயல்பாட்டை முடக்கி விடலாம் என கனவு காண்கிறது. ஆனால், 'புதிய ஜனநாயகம்' இதை மேலும் அம்பலப் படுத்தி இன்னும் வீச்சோடு பிரச்சாரத்தை எடுத்துச் செல்லும்!

முகவர்களே! விற்பனையாளர்களே! 'புதிய ஜனநாயகம்' மீது போலீசு நடத்தும் சட்டவிரோத மிரட்டலை - தாக்குதலை உடனே எங்களுக்கு புகார் மனு மூலம் தெரிவியுங்கள். உரிய நடவடிக்கை எடுக்கிறோம். — ஆசிரியர் குழு.

## மதுரை போலீசு புதிய ஜனநாயகம் மீது போட்டுள்ள பொய் வழக்கின் முதல் தகவல் அறிக்கை (FIR)

குற்ற எண் 2471/91 பிரிவு 124 எ 153
() (1) சி டி 505 (2) இ.த.ச.—காவல்
நிலையம் இ1,திடீர் நகர்,வட்டம் திடீர் நகர்;
வட்டம் மதுரை மாநகர்; சம்பவம் நடந்த
ளும் மணியும் 27.9.91. 19.00 மணி. என்
ல் கொடுத்த நாள் - மணி: 27.9.91. 20.00
ி. நடந்த இடம், காவல் நிலையத்திலி
து எவ்வளவு தூரம், எந்தப் பக்கம்: மது
ப் பெரியார் பஸ் நிலையம் சுமார் 1/2
ீ. வடக்கு; தகவல் கொடுப்பவர் - வாதி:
இசக்கி ஆனந்தன், சார்பு ஆய்வாளர்;
டம் ஒழுங்கு இ1,திடீர் நகர்,மதுரை மாந
குற்றவாளியின் விவரம்: புதிய ஜனநாய
வால் போஸ்டர் ஒட்டியவர்கள் மற்றும்
ர்.

சமர்ப்பிக்கிறேன்: - நான் இ1 கா.நி.
பாய்வாளராய் பணிபுரிகிறேன். இன்று
9.91ம் தேதி மாலை 19.00 மணிக்கு காவ
களுடன் பஸ் நிலைய பாதுகாவல் அலு
ில் இருந்த போது மதுரை பெரியார் பஸ்
லயத்திலிருந்து புறப்பட்டு வந்த 7 எ.3 சிட்டி பஸ்களில் புதிய ஜனநாயகம் என்ற பெயரடிக்கப்பட்டு பிரிவினையையும் ஜாதித் துவேசத்தையும் தூண்டக்கூடிய கீழ்க்கண்ட வாசகங்களடங்கிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். மேற்படி போஸ்டர்களில் "ஈழ ஆதரவு தேச துரோகமா? தமிழின எதிரி பார்ப்பன ஜெயாவின் பாசிச ஒடுக்குமுறை" - புதிய ஜனநாயகம் —என்று அச்சடிக்கப்பட்டிருந்தது. மேற்படி வாசகங்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் உணர்ச்சிகளைத் தூண்டி தேசத்திற்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வண்ணம் அமைந்திருந்தது மற்றும் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக வன்முறையை உபயோகப்படுத்து மளவுக்கு தூண்டுதலாய் இருந்தது.

உடனடியாக நானும் காவலர்களும் பஸ் நிலையத்திற்குள் சென்று மேற்படி போஸ்டர்களை ஒட்டிய நபர்களைத் தேடிய போது கண்டு பிடிக்க முடியவில்லை. உடனே 'புதிய ஜனநாயகம்' என்பது பற்றி விசாரித்த போது இது ஒரு சிறுபத்திரிக்கை என்றும் சென்னையிலிருந்து அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறதென்றும் தெரிந்து அருகிலிருந்த ஒரு கடையில் மேற்படி பத்திரிக்கை ஒன்றை வாங்கிப் போஸ்டரில் குறிப்பிட்ட செய்தி கட்டுரையாக இருக்கிறதா என்று பார்த்தபொழுது, தமிழக தெருக்களில் புரட்சிப் போராட்டங்கள் வெடிக்க வேண்டுமென்றும் பார்ப்பன தலைவி ஒழிக்கப்பட வேண்டுமென்ற வன்முறை வாசகங்களும் ஆயுதக் கலாச்சாரம் வாழ்க! ராஜீவைக் கொன்றதில் என்ன தவறு? மற்றும் ஈழத் தமிழர் மீது அரசு பயங்கர வாதத்தை ஏவி விடப்பட்டிருப்பது தடுக்கப்பட வேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது.

மேற்படி கட்டுரையைப் படிக்கும் நபர்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டி நாட்டிற்கு எதிராக வன்முறைச் செயல்களில் ஈடுபடும்படி தூண்டும்படியாகவும் ஜாதிகளிடையே ஒரு கலக்கமான நிலையை வன்முறையினால் ஏற்படுத்தி சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும்படியாகவும் உள்ளது. மேற்படி செய்கையினால் அரசுக்கு எதிராக வன்முறைப் போராட்டங்கள் வெடிப்பதற்கு தூண்டுகோலாய் உள்ளது. எனவே, மேற்படி போஸ்டர்களை ஒட்டிய நபர்கள் மீதும் புதிய ஜனநாயகம் என்ற பத்திரிக்கையை பிரசுரம் செய்தவர்களையும் விநியோகம் செய்தவர்களையும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

# விலைபோன வீரமணியின் இனத் துரோகம்



**ஜெயாவின் பார்ப்பன-பாசிச ஆட்சியை எதிர்ப்பதில் அவசரம் காட்டாதீர்கள் என்று ரூ.5 லட்சத்துக்கு விலைபோன வீரமணி ஆலோசனை கூறுகிறார். அதே நேரத்தில் ஜெயாவின் ஆட்சியை வரிந்து கட்டிக்கொண்டு ஆதரிப்பதில் பார்ப்பனர்களே ஆச்சரியப்படுமளவுக்கு முன்னணியில் நிற்கிறார்.**

எல்லாவற்றுக்கும் ஒரு விலை உண்டு. சுயமரியாதையின் விலை ரூ.5 லட்சம் என்று தனது சரணாகதியின் மூலம் காட்டியிருக்கிறார், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி.

தேர்தலுக்கு முன்பு, காங்கிரசின் கூட்டாளி, பிற்படுத்தப்பட்ட மக்களின் எதிரி, சதி செய்து 'தமிழன்' ஆட்சியைக் கவிழ்த்தவர், கன்னடத்து பார்ப்பனத்தி, சங்கராச்சாரியால் ஆட்டுவிக்கப்படுவர் என்றெல்லாம் ஜெயலலிதாவை கடுமையாக சாடியது திராவிடர் கழகம். ஆனால் தேர்தலில் ஜெயலலிதா பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி முதல்வராகியதும் அத்தனையையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு தி.க.வும் வீரமணியும் வாயை மூடிக் கொண்டனர்.

அத்துடன் மட்டும் இருந்திருந்தால் கோழை என்ற அவப் பெயரோடு நின்றிருக்கும். அதையும் தாண்டி ஜெயலலிதா நடத்திய பெரியார் பிறந்த நாள் அரசு விழாவில் அவருடன் ஒரே மேடையில் தோன்றி அதற்குக் கூலியாக ரூ.5 லட்சமும் பெற்றுக் கொண்டு தமிழினத் துரோகி என்று பறை சாற்றிக் கொண்டுள்ளார். பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்க ஜெயலலிதா வரும்வரை ஒருமணி நேரமாக காத்துக்கிடந்த வீரமணி, விழாவில் பெரியாருக்குப் பதிலாக ஜெயலலிதாவை அனைவரும் துதி பாடிய போது தனது சுயமரியாதையை முடக்கி வைத்துக் கொண்டார்.

''சூரியகாந்தி போன்ற புரட்சிப் படங்களில் நடித்துக் கொண்டே இரு. நாளை அரசியல்வாதிகள் உன் பின்னால் வருவார்கள் என முதல்வர் ஜெயலலிதா அவர்களைப் பாராட்டிய பெரியார் ஒரு தீர்க்கதரிசி'' என்று பிழைப்புவாத அமைச்சர் ராசாராம் பேசிய போது 'தளபதி' வீரமணி தன் இன மான உணர்வை கறுப்புச் சட்டைக்குள் மறைத்துக் கொண்டார். ஆத்திரப்படவில்லை. ''பார்ப்பனர் என்ற வெறுப்பான பேச்சே பாசிசமாகும்'' என்று அமைச்சர் அரங்கநாயகம் பெரியாரின் கொள்கையை பகிரங்கமாக இழிவு படுத்திய போது 'மான மிகு' வீரமணியின் முதுகெலும்பு நிமிரவில்லை.

இவ்வளவு அவமரியாதைக்குப் பிறகும் எந்த முணுமுணுப்புமின்றி ''பெரியார் அறக்கட்டளைக்கு ரூ.5 லட்சம் கொடுத்தது மிகப் பெரிய செயலாகும்'' என்று காலில் விழாத குறையாக நெகிழ்ந்து போய் ஜெயலலிதாவுக்குத் துதிபாடினார் வீரமணி. பெரியார் விழாவுக்கு முன்னரே, ஜெயலலிதா பதவியேற்கும் போது பெரியார் திடலுக்கு மலர் வளையம் வைக்க வந்த போதே, வீரமணி தன் பரிவாரங்களுடன் திடல் வாயிலுக்கே சென்று எதிர்கொண்டழைத்து, பொன்னாடை போர்த்தி பெரியாரின் நூல்களைப் பரிசளித்து தனது சரணாகதியை துவக்கினார்.

அதன் பிறகு ஜெயலலிதாவின் அடுக்கடுக்கான அடக்குமுறையையும் பழிவாங்கல் நடவடிக்கைகளையும் கண்டு கலங்கிப் போன வீரமணி, உடல் நிலையைச் சாக்கிட்டு மேடைகளில் பேசுவதையும், பத்திரிகையில் எழுதுவதையும் முற்றாக நிறுத்திக் கொண்டார். ''விடுதலை''யும், ''உண்மை''யும் ஜெயலலிதாவைப் பற்றி விமர்சிக்கவே அஞ்சின. புலிகளை ஒழித்துக் கட்டுவேன் என்று ஜெயலலிதா கொக்கரித்த போதும், புலிகளின் கூட்டாளிகள் என்று முத்திரை குத்தி ஈழ விடுதலை ஆதரவாளர்களையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் சிறையிலடைத்து ஒடுக்கிய போதும், விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரான வீரமணி காந்தியக் குரங்காக மாறி அமைதி காத்தார். ''நான் பாப்பாத்திதான்! என்னை ஒன்றும் அசைக்க முடியாது'' என்று ஜெயலலிதா ஆணவத்தோடு சவால்விட்ட போதும், இந்து கோயில்களைப் புரைமைக்க சட்ட விரோதமாக நிதி திரட்டிய போதும், ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்து வேதாம கல்லூரி தொடங்கப் போவதாக அறிவித் பார்ப்பன மீட்சிக்கு உரமூட்டிய போதிலு பெரியாரின் உண்மையான வாரிசாக மா தட்டிக் கொள்ளும் வீரமணி அதை விமர்சி க்க் கூட முன்வரவில்லை. மாறாக, வெட் மின்றி அதை நியாயப்படுத்தவும் துணிந் விட்டார்.

> **பார்ப்பன ஜெயாவை மட்டுமல்ல; அவரது மத குருவும் அரசியல் ஆலோசகருமான ஜெயேந்திரர் எனப்படும் சின்ன சங்கராச்சாரியைக் கூட ''உண்மை'' ஏடு விமர்சிக்க அஞ்சுகிறது.**

''பெரியார் அறக்கட்டளைக்கு பண கொடுத்த கூட்டத்தில் பொதுச் செயலா அவர்கள், சமூகப் புரட்சியில் நீங்கள் ஈடு டும்போது உங்கள் பின்னால் கருஞ்சட்டை பட்டாளம் இருக்கும் என்று கூறியத கருத்து என்ன? நாங்கள் குழம்பிக் கொண் ருக்கிறோம்'' - என்று ஒரு வாசகர் கேட் கேள்விக்கு ''இதிலென்ன குழப்பம்? ம டல் கமிஷன் அறிக்கை அமுல்படுத்த அனைத்து சாதியினரும் அர்ச்சகராக் ஆணை, பெரியாரைப் பற்றி ஆரம் வகுப்பு முதல் பாடத் திட்டத்தில் சேர்த் - இவைகளுக்கு வழி செய்தால் அதன உங்களுடைய ஆட்சிக்கு தொந்திரவு வ மேயானால் உங்கள் பின்னால் கருஞ் டைப் பட்டாளம் இருக்கும் என்கிறார்... னால் அவருக்கு (ஜெயாவுக்கு) தொந்தி ஏற்பட்டால் அவருக்குப் பின்னால் ஆ வாக நிற்பதுதானே ஒரு நாணயமான இ கத்தின் கடமை'' என்று 'மானமிகு' ப ளிக்கிறது 'உண்மை' ஏடு.

மேலும் ''பிற்படுத்தப்பட்ட தாழ்த் பட்ட சமுதாயத்துக்கு நன்மை விளை என்று நம்பினால் சங்கராச்சாரியாரு கூட (வீரமணி) ஒரே மேடையில் தோ வார்'' என்கிறது 'உண்மை' ஏடு.

பார்ப்பன ஜெயாவை மட்டும அவரது மதகுருவும் அரசியல் ஆலோ மான ஜெயேந்திரர் என்றழைக்கப்ப சின்ன சங்கராச்சாரியைக்கூட 'உண் ஏடு விமர்சிக்க அஞ்சுகிறது. அரசியல் காரங்களில் நேரடியாக தலையிடாத, காரணமாக முடங்கிவிட்ட சந்திரசேகர றழைக்கப்படும் பெரிய சங்கராச்சாரி அட்டையில் போட்டு விமர்சித்து பாம்பை அடிப்பதில் சூரத்தனம் காட்டு 'உண்மை' ஏடு (அக் 1-15, 1991).

ஒரு வேடிக்கை என்னவென் தமிழ்நாடு பிராமணர் சங்கத் தலை



படிப்பகம்

www.padippakam.com

ஜெயாவின் ஆட்சியை ''இது நம்மவாள் ஆட்சி'' என்று பாராட்டி தனது உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தை வெளியிட்டு ''பார்ப்பன சங்கத்தின் திரைமறைவுத் திட்டங்கள்'' என்று 'உண்மை' ஏட்டில் முழங்கிய வீரமணி, இப்போது பார்ப்பன ஆட்சியை எதிர்ப்பதில் ''அவசரம் காட்டாதீர்கள்'' என்று நெய்வேலியில் நடந்த நிர்வாகக் குழு கூட்டத்தில் உபதேசிக்கிறார். உத்திரப் பிரதேச இந்து வெறி பாரதீய ஜனதா அரசின் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து இந்து கோயில்களுக்கு நிதி திரட்டும் அவரது பார்ப்பன மீட்சிக் கொள்கையைப் பாராட்டிச் செல்லுமளவுக்கு நிலைமை முற்றிய பிறகும் ''ஆத்திரம் காட்டாதீர்கள்'' என்கிறார்.

வீரமணியின் துரோகத்தை பல அமைப்புகளும் பத்திரிகைகளும் அம்பலப்படுத்துவதைக் கண்டு ''பார்ப்பனரை உறுப்பினராகக் கொண்ட அமைப்புகள் குற்றம் சொல்கின்றன; கொச்சைப்படுத்த வரிந்து கட்டிக் கொண்டு துள்ளி எழுகின்றன'' என்று ஆத்திரத்துடன் சாடுகிறார். பார்ப்பன எதிப்பை ஒரு சந்தர்ப்பத்திற்கு மட்டும் எடுத்துக் கொள்வதாக குறை கூறுகிறார். இப்போது தி.மு.க., பா.ம.க. ஆகிய எதிர்க்கட்சிகள் பார்ப்பன ஜெயாவை விமர்சித்து தமது கட்சி ஏடுகளில் எழுதுவதால், ''தொலை நோக்கத்தோடு பார்க்க வேண்டிய ஒரு பொறுப்பான காரியத்தில் அவசரம் காட்டுவதோ ஆத்திரம் காட்டுவதோ பிரச்சினையின் தன்மையை தலைகீழாக புரட்டித் தள்ளுவதற்குத்தான் பயன்படும்'' என்று எச்சரிக்கிறார்.

ஜெயாவின் பார்ப்பன - பாசிச ஆட்சியை எதிர்ப்பதில் அவசரம் காட்டாதீர்கள் என்று ஆலோசனை கூறும் வீரமணி, அதே நேரத்தில் ஜெயாவின் ஆட்சியை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிப்பதில் பார்ப்பனர்களே ஆச்சியமடையும் அளவுக்கு அவசரம் காட்டுவதில் முன்னணியில் நிற்கிறார். தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50% இடஒதுக்கீடு என்று ஜெயா ''ஸ்டண்ட்'' அடித்ததும் ஓடிப்போய் ஆதரித்தார். வேதாகம கல்லூரியில் தாழ்த்தப்பட்டோருக்கு 18% இடஒதுக்கீடு அளித்து அவர்களும் அர்ச்சகராக பாடுபடுவோம் என்று ஜெயா அறிவித்ததும், 'ஆகா! பெரியாரின் கனவை நிறைவேற்றி விட்டீர்கள்!' என்று நன்றி தெரிவிக்கிறார். அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு எதிராக பார்ப்பனர்கள் வழக்கு தொடர்ந்து அது உச்சநீதிமன்றத்தில் ஏற்கப்பட்டுள்ள நிலையில், ஜெயாவின் திட்டம் நிறைவேறுமா என்று கூட பரிசீலிக்காமல் எல்லோரையும் முந்திக் கொண்டு பாராட்டுகிறார் வீரமணி.

இடஒதுக்கீடு விவகாரத்தில், பொருளாதார அடிப்படையை அளவுகோலாக கொள்ளக் கூடாது என்பதை ஒரு விதியாக தனது தீர்மானத்தில் ஜெயா குறிப்பிடவில்லை என்று தி.மு.க. எதிர்ப்பு தெரிவித்தது. விதியாக குறிப்பிடாவிட்டாலும், பொருளாதார அளவுகோல்கள் என்று தீர்மானத்தில் எதுவும் குறிப்பிடவில்லை என்று கூறி ஜெயாவின் அறிவிப்பை வீரமணி ஆதரித்தார். தி.மு.க.வின் ''முரசொலி'' ஏடு அவசரப்பட்டு தன்னை கேடாக விமர்சிப்பதாக குற்றம் சாட்டினார்.




வீரமணியின் இனத் துரோகம்; ''பார்ப்பன'' ஏடான விகடனின் படப்பிடிப்பு

ஆனால் முன்பு தமிழ்நாடு பிராமணர் சங்கத்தினர் தாழ்த்தப்பட்ட - பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு கோரிக்கையை ஏற்பதாக தீர்மானம் நிறைவேற்றிய போது அதை ''பார்ப்பனர்களின் சூழ்ச்சி; அடி - உதைக்கு பயந்து இப்படி தீர்மானம் போட்டுள்ளனர்'' என்று தி.க.வினர் சாடினர். ஆனால் இப்போது பார்ப்பன ஜெயாவின் இடஒதுக்கீடு தீர்மானத்தை எந்த விளக்கமுமின்றி ஆதரிப்பதோடு, தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக யார் பாடுபட்டாலும் அவர்களை ஆதரிப்போம் என்று சந்தர்ப்பவாத சதிராட்டம் போடுகின்றனர்.

பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவிடம் வீரமணி விலை போனதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. முதலாவதாக, பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்துக்கும், மணியம்மை கல்வி அறக்கட்டளைக்கும் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதை ஜெயலலிதா ரத்து செய்தால், வீரமணி தொடர்ந்து அறக்கட்டளையின் நிர்வாகப் பொறுப்பில் நீடிக்க முடியாது. அது மட்டுமல்ல, அறக்கட்டளையின் கட்டாய நன்கொடை — ஊழல் முறைகேடுகளைக் காரணம் காட்டி வீரமணியின் கல்வி வியாபாரத்தை நிறுத்தி விடமுடியும்.

இரண்டாவதாக, சென்னையிலுள்ள பல சிட்பண்டு நிறுவனங்கள் கடந்த ஐந் தாண்டுகளில் வைப்புத் தொகையாக ரூ.50 லட்சத்தைத் தாண்ட முடியாமல் சிரமப்படும் போது, வீரமணியின் திராவிட நலநிதி நிறுவனம் மட்டும் இரண்டு ஆண்டுகளுக்குள் ஒன்றரை கோடி ரூபாயை வைப்பு நிதியாகப் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தில் நேரடியாகவும் பினாமிகள் மூலமும் வைப்பு நிதி போட்டுள்ள பல புள்ளிகளுக்கு எங்கிருந்து இவ்வளவு பணம் கிடைத்தது என்று வருமானவரி அதிகாரிகள் ஆராயத் தொடங்கிவிட்டால், வீரமணியின் பிழைப்பில் மண் விழுந்து விடும்.

மூன்றாவதாக, தஞ்சை வல்லத்தில் உள்ள மணியம்மை அறக்கட்டளை வளாகத்தை ஒட்டி தனக்குச் சொந்தமான நிலத்தில் ராஜப்பா என்பவர் குடியிருந்தார். அந்த மனையை அபகரிக்க நினைத்த வீரமணி, தனது குண்டர்களை ஏவி அந்த வீட்டைத் தகர்த்து குடும்பத்தினரை கடத்திச் சென்று மிரட்டினார். அப்போது ஆட்சியிலிருந்த கருணாநிதியின் தலையீட்டினால் இந்த வழக்கு முடக்கப்பட்டது. இப்போது ஜெயலலிதா அந்த வழக்குக்கு புத்துயிர் அளித்தால் வீரமணியின் கருஞ்சட்டை ரௌடிப் பட்டாளம் கம்பி எண்ண நேரிடும். இதேபோல கும்பகோணத்தில் தி.க.வினர் சங்கர மடத்தைத் தாக்கிய விவகாரமும் வீரமணியை அச்சுறுத்துகிறது.

நான்காவதாக, வீரமணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இருந்த நெருக்கம் யாவரும் அறிந்ததுதான். தமிழகத்தில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் புலிகள் ஆதரவுக் கூட்டங்களை வீரமணி நடத்தியுள்ளார். ராஜீவ் கொலைக்குப் பிறகு யாரை வேண்டுமானாலும் புலிகளின் கூட்டாளிகள் என்று அரசு கைது செய்கிறது. ஜெயலலிதா பழிவாங்கும் நோக்கத்துடன் தி.க. மீது இரும்புக் கரத்தை ஏவிவிடுவாரோ என்ற அச்சமும் வீரமணியைப் பிடித்தாட்டுகிறது.

இவை தவிர, வீரமணியின் சரணாகதிக்கு அரசியல் ரீதியான காரணம் ஒன்று உண்டு. தான் ஜெயலலிதாவை ஆதரிக்காவிட்டால், திருவாரூர் தங்கராசு, கோவை ராமகிருஷ்ணன் போன்ற போட்டி தி.க. கோஷ்டியினர் ஜெயலலிதாவை ஆதரித்து தன்னை பழிவாங்கலாம் என்ற பீதியும் வீரமணியை அச்சுறுகிறது.

எனவேதான் பெரியாரின் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அதற்குக் கூலியாக ரூ.5 லட்சத்தையும் பெற்றுக் கொண்டு பார்ப்பன கும்பலின் காலில் விழுந்து கிடக்கிறார் வீரமணி. இதற்கு மேலும் திராவிடர் கழக செயல் வீரர்கள் வீரமணியை நம்புவார்களேயானால், பெரியாரின் மொழியில் கூறுவதென்றால் ஒன்று, அவர்கள் முட்டாள்களாக இருக்க வேண்டும்; அல்லது காட்டுமிராண்டிகளாக இருக்க வேண்டும்.

● மனோகரன்.



படிப்பகம்

www.padippakam.com

## சங்கர் குகா நியோகி கொலை:

# ஒரு தொழிற்சங்கவாதியின் மரணம்

**ச**ங்கர் குகா நியோகி சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். சட்டிஸ்கார் பிராந்தியத்தின் தொழிலாளர்களும் ஆதிவாசி மக்களும் தமது அன்புக்குரிய தலைவரை இழந்து விட்டனர்.

அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட ஆலைத் தொழிலாளர்களிடம் சந்தா வசூலிக்கும் பிழைப்புவாத சங்கங்கள் அனைத்தும் தாங்கள்தான் நாட்டின் மிகப்பெரிய தொழிற்சங்கங்கள் என்று மார்தட்டிக் கொள்ளும் நிலையில்.

அமைப்பு ரீதியாக இல்லாமல் சிதறிக் கிடக்கும் காண்டிராக்ட் கூலித் தொழிலாளர்கள் மற்றும் ஆதிவாசி மக்களை அணிதிரட்டி அவர்களின் உரிமைக்கும் நல்வாழ்வுக்கும் உறுதியுடன் தொடர்ந்து போராடி, அவர்களின் அன்புக்குரிய தலைவராக உயர்ந்தவர் தான் சங்கர் குகா நியோகி.

மத்திய பிரதேசத்திலுள்ள பிலாய் உருக்காலையின் காண்டிராக்ட் தொழிலாளர்களையும், ராய்ப்பூர், துர்க், பிலாஸ்பூர் மாவட்டங்களிலுள்ள சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் துணைத் தொழில் ஆலைத் தொழிலாளர்களையும் அணி திரட்டி சட்டிஸ்கார் முக்தி மோர்ச்சா (CMM) சங்கத்தின் மூலம் எழுச்சிமிகு போராட்டங்களை நடத்திய தொழிலாளி வர்க்கத் தலைவர்தான் நியோகி.

சட்டிஸ்கார் பிராந்தியத்திலுள்ள ஆதிவாசிகளிடமிருந்து இரும்புத்தாது சுரங்கங்களுக்காக அரசாங்கமும் முதலாளிகளும் நிலங்களைப் பறித்துக் கொண்டு அவர்களை விரட்டியபோது, ஆதிவாசி மக்களின் உரிமைக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் நியோகி உறுதியுடன் போராடினார். காண்டிராக்ட் கூலித் தொழிலாளிகளாக 1971ல் இம்மக்கள் நாளொன்றுக்கு 3 ரூபாய் மட்டுமே கூலியாகப் பெற்று வந்தனர். நியோகியின் உறுதிமிக்க போராட்டத்தின் விளைவாக இன்று அவர்கள் ரூ.30 க்கும் மேலாக கூலியைப் பெறுகின்றனர். கூலி உயர்வுக்கான போராட்டத்துடன் நின்றுவிடாமல், தாதுப் பொருள் ஏற்றுமதிக்கான விலை நிர்ணயம், தொழிலாளருக்கு வேலை வாய்ப்பு, தொழிலாளருக்கும் அவர்தம் குழந்தைகளுக்கும் கல்வி வசதி, நவீன மயம் என்ற பெயரில் தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டுவதைத் தடுப்பது, மருத்துவ சுகாதார வசதிகள் மற்றும் தொழிலாளர் குடியிருப்பு, சட்டிஸ்கார் பிராந்தியத்தின் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது என இப்பகுதிவாழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்காகவும் தொடர்ந்து போராடி அதில் கணிசமான அளவுக்கு வெற்றியும் ஈட்டினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிலாளர்களை சீரழித்து வந்த குடிப் பழக்கத்துக்கு எதிராகவும், சாராய அதிபர்களின் கந்து வட்டி கொடுமைக்கு எதிராகவும் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் நியோகியின் தொழிற்சங்கம் போராடியது.

தொழிலாளர்களின் சந்தாப் பணத்தைச் சூறையாடுவதையே தொழிலாகக் கொண்ட தொழிற்சங்க கல்தான்கள் பெருகிவிட்ட இந்நாளில் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டும் தொழிலாளர்களின் நன்கொடையைக் கொண்டும் ராஜ்கராவில் ''தியாகிகள் மருத்துவமனை''யை சட்டிஸ்கார் சங்கம் நிறுவியுள்ளது.

போலிக் கம்யூனிஸ்டுகள் நியோகியை சி.ஐ.ஏ. ஏஜெண்டு என்று அவதூறு செய்தனர். அரசும் முதலாளித்துவ பத்திரிகைகளும் அவரை தீவிரவாதி, பயங்கரவாதி என்று முத்திரை குத்தின. அவசர நிலை பாசிச ஆட்சியில் அவர் மிசா சட்டத்தின் கீழ் கைதானார். அதன்பிறகு காங்கிரசு, பாரதீய ஜனதா ஆட்சிகளில் தேசிய பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் பலமுறை கைதானார். ஆனாலும், நியோகியின் உறுதியையும், அவரது சங்கத்தின் போர்க்குணத்தையும் இம்மியளவும் சிதைக்க முடியவில்லை. மத்திய பிரதேசத்தை ஆளும் இந்துவெறி பாரதீய ஜனதா அரசு நியோகி மீது கணக்கற்ற பொய் வழக்குகளைப் போட்டும் - பிலாய் மாவட்டத்தை விட்டு வெளியே செல்லக் கூடாது என்று தடை விதித்தும் கூட சட்டிஸ்கார் சங்கத்தின் செல்வாக்கை அழிக்க முடியவில்லை. ராய்ப்பூர், துர்க், பிலாஸ்பூர் என பல்வேறு மாவட்டங்களில் சட்டிஸ்கார் சங்கம் வேர்விட்டுப் பரவியது.

குறிப்பாக, பிலாயிலுள்ள பல்வேறு துணைத்தொழில் நிறுவனங்களில் உள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் சட்டிஸ்கார் சங்கத்தில் திரண்டு கூலி உயர்வுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடினர். இப்போராட்டத்தை ஒடுக்க அரசும் முதலாளிகளும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். தொழிற்சங்க முன்னோடிகளைக் கைதுசெய்வது, தொழிலாளர்கள் மீது குண்டர்களை ஏவித் தாக்குவது என்பதாக முதலாளிகள் அட்டூழியம் தொடர்ந்தது. இந்நிலையில் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனைச் சந்தித்து தொழிலாளர்கள் மீதான முதலாளிகளின் அடக்குமுறையை விளக்கி நடவடிக்கை எடுக்கக் கோரினார் நியோகி. ஆனால், முதலாளிகளைப் பகைத்துக் கொள்ள வெங்கட்ராமன் தயாராக இல்லை. நியோகியின் கோரிக்கை மனு குப்பைக் கூடையில் வீசப்பட்டது.

இதனால் மேலும் மகிழ்ச்சியடைந்த முதலாளிகளும் பாரதீய ஜனதா அரசும் நியோகியைக் கொன்றொழிக்க முடிவு செய்தனர். கேடியா, சிம்ப்ளெக்ஸ், பி.இ.சி, பி.கே. இன்டஸ்ட்ரீஸ், பிலாய்வயர்ஸ் ஆகிய நிறுவனங்களின் முதலாளிகள் கடந்த செப்டம்பர் 25 அன்று ம.பி.முதல்வர் பட்வாவை ரகசியமாச் சந்தித்தனர். அங்கு சதித் திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி முதலாளிகள் ஏவிய குண்டர்கள் செப்டம்பர் 28 அன்று நள்ளிரவில் உறங்கிக் கொண்டிருந்த நியோகியைச் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பியோடிவிட்டனர்.

ஆனாலும், இன்றுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. நியோகி கொல்லப்பட்டதைக் கண்டித்து பிலாய் நகரில் தொழிலாளர்கள் ஒரு நாள் கடையடைப்பு போராட்டம் நடத்தினர். துர்க் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கம் அரசுக்கும் முதலாளிகளுக்கும் மாஃபியா குண்டர்களுக்கு மிடையிலான கள்ளக் கூட்டை அம்பலப்படுத்தி கோர்ட்டுகளை ஒருநாள் புறக்கணித்தது. நியோகியின் மனைவி ஆஷா தேவி, பிலாயின் 5 துணைத் தொழில் முதலாளிகளே நியோகியின் கொலைக்குக் காரணம் என பகிரங்கமாகவே குற்றம் சாட்டிய பின்னரும் இன்னமும் அவர்களைக் கைது செய்ய பாரதீய ஜனதா அரசு மறுக்கிறது. சி.பி.ஐ. விசாரணைக்கு உத்திரவிட்டு தொழிலாளர்களின் வர்க்கக் கோபத்தை தணிக்க முயற்சிக்கிறது.

இருப்பினும் தொழிலாளர்கள் ம.பி. யின் எட்டு மாவட்டங்களில் தொடர்ச்சியாக கடையடைப்பு போராட்டம் நடத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தொழிலாளர்களின் வெஞ்சினத்தைக் கண்ட முதலாளிகள் இப்பகுதியிலிருந்து தப்பியோடி தலைமறைவாகி விட்டனர். பிலாயிலும் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் இன்னமும் கொந்தளிப்பான நிலைமையே உள்ளது.

**நேர்மையும் உறுதியும் கொண்ட மத்தியப் பிரதேச தொழிலாளர் தலைவர் சங்கர்குகா நியோகி சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். தொழிலாளர்களின் உரிமைப் போரில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தியாகியான போதிலும், அவரது போராட்டப் பாதை தொழிலாளி வர்க்க விடுதலைக்கானதாக இல்லை.**

**ச**ங்கர் குகா நியோகி கொல்லப்பட்டு விட்டார். அவரது மறைவு சட்டிஸ்கார்



படிப்பகம்

www.padippakam.com

பிராந்திய தொழிலாளர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்புதான்.

இருப்பினும் போர்க்குணமிக்க பொருளாதாரப் போராட்டங்களை நடத்தும் ஒரு தொழிற்சங்க வாதியாகத்தான் நியோகி இருந்துள்ளார். வர்க்கப் போராட்டத்தின் கேந்திரமான கண்ணியாகிய அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சினையிலோ அரசியல் 'போராட்டங்களிலோ அவர் ஈடுபட்டதில்லை.

சட்டிஸ்கார் பிராந்தியத்திலுள்ள தொழிலாளர்கள் மற்றும் ஆசிவாசி மக்களின் நலன்களுக்காக போர்க்குணத்துடன் இறுதிவரை போராடிய தியாகத் தலைவர் நியோகி என்பது உண்மைதான். நூறாண்டுக்கும் மேலாக தொழிற்சங்க இயக்கத்தை நடத்திவரும் போலிக் கம்யூனிஸ்டுகள் கூட இதுவரை செய்திராத சாதனை என்பதும் உண்மைதான். ஆனாலும், இது தொழிலாளி வர்க்க விடுதலைக்கான பாதை அல்ல.

''ஒவ்வொரு தொழிற்சங்க செயலாளரும் 'முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்த்து பொருளாதாரப் போராட்டத்தை' நடத்துகிறார்; நடத்த உதவுகிறார். இருந்தாலும் இது சமூக ஜனநாயகவாதம் அல்ல; சமூக ஜனநாயக வாதியின் லட்சியம் தொழிற்சங்க செயலாளர் என்றிருக்கவே கூடாது. மக்களின் பிரதிநிதி என்றிருக்க வேண்டும்'' என்கிறார் லெனின். மேலும், ''பொருளாதாரப் போராட்டம் என்பது தொழிற்சங்கவாத அரசியலேயாகும். அதற்கும் சமூக ஜனநாயகவாத அரசியலுக்கும் எவ்வளவோ தூரம் இருக்கிறது'' என்று தெளிவு படுத்துகிறார்.

''நமது வேலை தொழிற்சங்க வாதியைப் போல் பொருளாதாரப் போராட்டங்களை நடத்துவது அல்ல.'' ''சமூக ஜனநாயகவாதப் பிரச்சாரகர்கள் என்கிற வகையில் அரசியல் அம்பலப்படுத்தல்களையும் அரசியல் கிளர்ச்சியையும் ஆழப்படுத்துவதும் விரிவுபடுத்துவதும் தீவிரப்படுத்துவதுமே நமது வேலை'' என்று தோழர் லெனின் உணர்த்துகிறார்.

லெனினது போதனையை மறுதளித்த போலிக் கம்யூனிஸ்டுகள், அரசியல் போராட்டங்களை அறவே புறக்கணித்து தொழிலாளர்களை பொருளாதாரவாத போராட்டம் எனும் புதை சேற்றில் ஆழ்த்தினர். கூலி உயர்வுக்கான போராட்டங்களையே செக்குமாடு போல தொடர்ந்து நடத்தி வந்த போலிகள் ஒரு கட்டத்துக்கு மேல் முன்னேற முடியாமல் பின்வாங்கி தொழிலாளருக்கு துரோகமிழைத்தனர். தொழிலாளர்கள் போலிக் கம்யூனிஸ்டு சங்கங்களின் மீது வெறுப்படைந்திருந்த நிலையில் அந்த வெற்றிடத்தை போர்க்குணமிக்க பொருளாதாரவாதம் எனும் புதிய வகைப்பட்ட தொழிற்சங்கங்கள் கைப்பற்றின. தமிழகத்தின் ' சேலர், பம்பாயின் தத்தா சமந்த் போன்றோர் கூலி உயர்வு - போனசுக்கான போராட்டங்களையே தீவிரமாகவும் போர்க்குணத்துடனும் நடத்த துவங்கியதும் பெரும்பாலான தொழிலாளர்கள் இச்சங்கங்களில் அணி திரளத் தொடங்கினர்.

இப்படி பொருளாதார கோரிக்கைகளுக்கான போராட்டங்களையே வரைமுறை



**பொருளாதாரப் போராட்டங்களை போர்க்குணத்துடன் நடத்திய நியோகி, அரசியல் போராட்டங்களை அறிந்தே ஒதுக்கி வைத்தார். பொருளாதாரவாதப் போராட்டம் எனும் குறுகிய வட்டத்தை விட்டு அவர் வெளிவரவில்லை.**

யின்றி போர்க் குணத்துடன் நடத்தி ஒரு கட்டத்துக்கு மேல் முன்னேற முடியாமல் இச்சங்கங்கள் தோல்வி அடைந்தன. தொழிலாளர்களை பல்லாயிரக் கணக்கில் திரட்டி தீரமிக்க பல போராட்டங்களை நடத்தியபோதிலும், தொழிலாளர்களை புரட்சிகர அரசியலுக்கு இச்சங்கங்கள் வழிநடத்த முடியவில்லை.

சட்டிஸ்கார் பிராந்தியத்தில் சங்கர்குகா நியோகி தலைமையேற்று வழிநடத்திய போர்க்குணமிக்கப் பொருளாதாரப் போராட்டங்களும் இதே பாதையில்தான் சென்றது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அவரது சங்கத்தில் திரண்டு வீரதீரமாகப் போராடிய போதிலும் அவர்கள் புரட்சிகர அரசியலுக்கு அணிதிரளவில்லை. இப்பகுதியில் ஆளும் வர்க்க கட்சிகளான காங்கிரசும் பாரதீய ஜனதாவும் தான் மாறிமாறி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. நாட்டை இன்று இந்துவெறி பாசிசம் அச்சுறுத்திக் கொண்டிருக்கும்போது, பாரதீய ஜனதா ஆளும் மாநிலத்தில் அதற்கெதிராக எந்தவொரு போராட்டத்தையும் நியோகி நடத்தவில்லை. பொருளாதாரப் போராட்டங்களை போர்க்குணத்துடன் நடத்திய நியோகி, அரசியல் போராட்டங்களை அறிந்தே ஒதுக்கி வைத்தார்.

மார்க்சிய - லெனினிய இயக்கத்தின் ஆதரவாளராக இருந்த நியோகி, '70களில் மே.வங்கத்தில் நக்சல்பாரி புரட்சியாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைக்கு அஞ்சி அங்கிருந்து தப்பியோடி பிலாய் நகருக்கு வந்தார். பிலாய் ஆலைத் தொழிலாளர்களுடன் ஐக்கியப்பட்டு புதிய தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்து அவர் போராடிய போதிலும், மீண்டும் மார்க்சிய - லெனினிய இயக்கத்துடனோ அல்லது வேறு எந்த புரட்சிகர அரசியல் இயக்கத்துடனோ அவர் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இதர தொழிற்சங்க வாதிகளைப் போலவே, தொழிலாளர்களின் பொருளாதாரப் பிரச்சினைக்கு அப்பாற்பட்ட அரசியல் விவகாரங்களில் அவர் ஊக்கமாகத் தலையிட ஒருபோதும் முயற்சித்ததில்லை.

பிலாய் ஆலைத் தொழிலாளர்களை அணி திரட்டி போர்க்குணமிக்க பொருளாதாரப் போராட்டங்களை நடத்திய அவர், குசேலர், தத்தா சமந்த் ஆகியோரைப் போலவே ஒரு கட்டத்துக்கு மேல் முன்னேற முடியவில்லை. எனவே, ஆலைத் தொழிலாளர்களை விடுத்து, காண்டிராக்ட் தொழிலாளர்களிடம் கவனம் செலுத்தி அவர்களது கூலி உயர்வுக்கும் உரிமைக்குமான போராட்டங்களை நடத்தத் தொடங்கினார்.

பின்னர் அதுவும் ஒரு கட்டத்துக்கு மேல் முன்னேற முடியாமல் ஸ்தம்பித்தது. அதன் பிறகு சட்டிஸ்கார் பிராந்தியத்திலுள்ள ஆதிவாசி மக்களின் உரிமைக்கும் நல்வாழ்வுக்குமான பொருளாதார போராட்டங்களை அவர் மேற்கொண்டார். சுருக்கமாகச் சொன்னால், இதர தொழிற்சங்க வாதிகளைப் போலவே அவரும் அவரது சங்கமும் பொருளாதாரவாதப் போராட்டம் எனும் குறுகிய வட்டத்தை விட்டு வெளியே வரவில்லை.

இருப்பினும், இதர தொழிற்சங்க புரோக்கர்களைப் போலின்றி நியோகி நேர்மையாகவும் உண்மையாகவும் செயல்பட்டார். தொழிலாளர்களின் சந்தாப் பணத்தைச் சுருட்டிக் கொண்டு காரும் பங்களாவுமாக சுகம் தேடாமல் இறுதிவரை எளிமையாகவே வாழ்ந்தார். பலமுறை கொலை மிரட்டலுக்கு ஆளான போதிலும் உயிருக்கு அஞ்சி அவர் ஒடி ஒளிந்து சரணடையவில்லை. தற்காப்புக்காக பூனைப் படைகளை கட்டியமைத்துக் கொண்டு பகட்டாகத் திரிந்ததில்லை. தொழிற்சங்கத்தில் ஊழல் - மோசடிகளையோ, தனிமனித வழிபாட்டையோ அவர் ஒருபோதும் அனுமதித்ததில்லை. சட்டிஸ்கார் ஆதிவாசி மக்களுடன் ஐக்கியப்பட்டு, ஆதிவாசிப் பெண்ணையே திருமணம் செய்து கொண்டு அப்பகுதி வாழ் மக்களுடனேயே இறுதிவரை எளிமையாக வாழ்ந்தார்.

அவரது மறைவு சட்டிஸ்கார் பிராந்திய தொழிலாளர்களுக்கும் ஆதிவாசி மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்புதான். அதே சமயம் போர்க்குணமிக்க பொருளாதாரவாதம் எனும் தொழிற்சங்க வாதப் புதை சேற்றினுள் சட்டிஸ்கார் தொழிலாளர்கள் இரு தலைமுறைக்கும் மேலாக சிக்கியிருப்பது அதைவிட பேரிழப்பாகும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# பாசிச ~~தேசிய~~ பாதுகாப்புச் சட்டம்

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தஞ்சைச் செயலாளர் தோழர் காளியப்பன், அதன் உறுப்பினர்களான தோழர்கள் அருள், ஆனந்தராஜ், பாலசுப்பிரமணியம் ஆகியோர் கடந்த அக்டோபர் 3ந் தேதியில் இருந்து தேசியப் பாதுகாப்புச் சட்டம் (என்.எஸ்.ஏ.) என்கிற கொடிய தடுப்புக் காவல் கருப்புச் சட்டத்தின் கீழ் சிறைவைக்கப் பட்டுள்ளனர்.

இத்தோழர்கள், சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்க்க முயன்றதாக (124 ஏ)வும், மாநில முதல்வரை இழிவு படுத்தி சாதி, இனக் கலவரத்தை தூண்ட முயன்றதாக (153 அ(ஆ))வும் ஏற்கனவே செப்டம்பர் மத்தியில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்தனர். இவர்களைப் பிணையில் விடக் கோரும் மனு தஞ்சை சார்புப் பிரிவு வழக்கு மன்றத்தில் இருமுறை நிராகரிக்கப்பட்டது. உயர் வழக்கு மன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு முன்பாகவே இவ்வாறு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டனர்.

இத்தோழர்கள் மீது ஏற்கனவே போடப்பட்டுள்ள வழக்குகள் பொய்யானவை, சோடிக்கப்பட்டவை; அவற்றின் கீழ் விசாரணை - வழக்கு நடத்தி, தண்டித்து சிறையில் அடைக்க முடியாது. எனவேதான் விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைப்பதற்காக தே.பா.ச. ஏவப்பட்டுள்ளது.

இப்படி இத்தோழர்கள் மீது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அரசு பாய்வதற்கான காரணங்கள் என்ன? இவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் என்னென்ன? இவை எந்த அளவு உண்மையானவை? வாசகர்களே படித்துத் தீர்மானித்துக் கொள்வதற்காக, தோழர் பாலசுப்பிரமணியத்தைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கான ஆணை பிறப்பித்தபோது தஞ்சை மாவட்ட மாஜிஸ்டிரேட்டும் மாவட்ட ஆட்சியாளருமான தி.சண்முக ராஜேஸ்வரன் கொடுத்த காரணங்களை அப்படியே இங்கு பிரசுரிக்கிறோம். இதே காரணங்கள்தான் மற்ற தோழர்களுக்கும் கூறப்பட்டுள்ளன.

தடுப்பு காவலுக்கான காரணங்கள்

மு.அ.ந.என்.53/91

மாவட்ட நீதிபதி மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
முகாம் அலுவலகம், தஞ்சாவூர்

பொருள் : தேசியப் பாதுகாப்பு சட்டம் 1980 (மத்திய சட்டம் எம்.65/1980) ல் பாலசுப்ரமணியம், 24/91 த/பெ. சின்னதம்பி, அண்ணாநகர், சிவாஜி நகர் (வழி), தஞ்சாவூர் - மேற்படி சட்டத்தின் பிரிவு 3(2)-ன் கீழ் காவலில் வைப்பதற்கான காரணங்கள்.

தேசிய பாதுகாப்பு சட்டம் 1980 (மத்திய சட்டம் 65/80) 3-ம் பிரிவைச் சேர்ந்த 2-வது உட்பிரிவின் கீழ் திரு. பாலசுப்பரமணியம், வயது 24/91 த/பெ. சின்னதம்பி, அண்ணா நகர், சிவாஜி நகர் (வழி), தஞ்சாவூர் நகரம் மற்றும் மாவட்டம் என்பவரை தடுப்புக் காவலில் வைக்க மு.அ.ந.என். 53/91 நாள் 3.10.91-ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. தடுப்புக் காவலில் வைக்க ஆணை பிறப்பிக்கப்படுவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

திரு. மருதையன் என்பவரது தலைமையின் கீழ் உள்ள மக்கள் கலை இலக்கிய கழகம் (ம.க.இ.க.) ஸ்ரீலங்காவில் தமிழர்களுக்காக தனி தமிழ் ஈழம் அமைய போரிட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு ஆதரவளித்து வருகிறது. இந்த ம.க.இ.க.வினர் இந்தியாவில் உள்ள சட்டப்படியான அரசு மீது பற்றின்மையை உண்டாக்கும் வண்ணம் வெறுப்பை ஏற்படுத்திட பொதுமக்கள் மத்தியில் பொய்யான கருத்துக்களை பிரச்சாரம் செய்தும் ஆட்சேபகரமான முழக்கங்களை ஆவேசமாக முழக்கியும் வேண்டுமென்றே செயல்பட்டு வருகின்றனர். மேற்சொன்ன ம.க.இ.க. தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அதன் நடவடிக்கைகளை ஆதரிக்க தமிழக மக்களின் உள்ளங்களை மாற்றி அமைக்கவும் தமிழ்நாட்டு மக்களைத் தூண்டி விடவும் முக்கிய நகரங்களிலெல்லாம் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். தவிரவும் சமீப காலங்களில் பொது அமைதியை குலைக்கும் வகையில் பிராமண ஆதிக்கம் அதிகரித்து வருவதாகக் கூறி பல்வேறு மதத்தினர் மற்றும் இனத்தவர் இடையே உள்ள ஒற்றுமையை குலைக்கும் விதத்தில் இந்த ம.க.இ.க.வினர் வகுப்புகளுக்கிடையே வெறுப்பை வளர்க்க முயற்சித்து வருகின்றனர். இச் செயல்கள் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க கூடியவையாகும்.

3. 15.9.91-ம் தேதி மாலை சுமார் 7.45 மணிக்கு, முன்னிரவில் தஞ்சாவூர் நகரம் மேற்கு காவல் நிலைய சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வாளர் திரு. மாணிக்கவாசகம், தஞ்சாவூர் நகரம் மாமாசாகிப் மூலையில் ரோந்துப் பணியில் இருந்தபோது கொண்டி ராஜபாளையத்திலிருந்து அந்த இடத்தை அப்போது கடந்து சென்றுக் கொண்டிருந்த இரண்டு பொது மக்களின் உரையாடலைக் கேட்டார். அவர்களுடைய உரையாடலிலிருந்து, பெரியார் இல்லம் எதிரே மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மூன்று உறுப்பினர்கள் செய்துக் கொண்டிருக்கும் பிரச்சாரம் அவர்கள் மனதையும் உள்ளத்தையும் உண்மையிலேயே அரசாங்கத்திற்கு எதிராக போகும்படியாக மாற்றி விட்டதாகவும், அவர்களுடைய உணர்வுகளை இலங்கையில் உள்ள த.ஈ.வி.புலிகளுக்கு சாதகமாக ஆதரவளிக்க தூண்டி விட்டு விட்டதாகவும், பேசிய பேச்சுகளை தற்செயலாகக் கேட்டார். இவ்வகையான உரையாடலைக் கேட்ட மாத்திரத்தில் அந்த வாதி பெரியார் இல்லம் எதிரே ஏதோ தவறான செயல்கள் நடந்துக் கொண்டிருப்பதாக அறிந்து உடன் அந்த இடத்திற்கு விரைந்தார். மாலை 8 மணிக்கு அந்த இடத்தை அடைந்த அவர் திரு. பாலசுப்பரமணியம் கீழ் கண்ட அரசுக்கு எதிராக வாசகங்களை தஞ்சை அரண்மனை சுவரில் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

''ஈழ விடுதலைக்கு ஆதரவளிப்பது தமிழக மக்களின் உரிமை'' ''காங்கிரஸ் - ஜெயலலிதா பார்ப்பன பாசிச கும்பலே கருப்புச் சட்டத்தை காட்டி மிரட்டாதே'' ''காவிரி நீரை மறுக்கும் காங்கிரஸ் கூட்டணியுடன் ஆட்டம்; ஈழ விடுதலையை ஆதரிப்போருக்கு தேசத் துரோகி பட்டம்'' ''தமிழர் தளபதியே, ஆர்பரிக்கிறது அக்ரஹாரம், பூப்பறிக்குதோ உமது கரம்'' அதன் மூலம் மக்களுக்கு தங்களின் சொந்த அரசின் மீது பற்றின்மையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அதே நேரத்தில், அதே இடத்தில் (1) அருள் (எ) அருள் ராஜேந்திரன் மற்றும் (2) ஆனந்த்ராஜ் ஆகியோர் மக்களை சோடியம் வேப்பர் தெரு விளக்கின் ஒளியில் திரட்டி இந்தியாவில் சட்டபூர்வமாக அமைந்துள்ள அரசுக்கு எதிராக பற்றின்மையை உருவாக்கும்படியான வெறுப்பை தூண்டும் தேச துரோக கோஷங்களை முழக்கிக் கொண்டும் தவறான மற்றும் திசை திருப்பும்படியான பிரச்சாரங்களை செய்துக் கொண்டிருந்தனர். அவர்கள் மக்கள் மத்தியில் எழுப்பிய அரசுக்கெதிரான கோஷங்களை ''ஈழ விடுதலைக்கு ஆதரவளிப்பது தமி



படிப்பகம்


www.padippakam.com

மூக மக்களின் உரிமை'' ''காங்கிரஸ் ஜெயலலிதா பார்ப்பன பாசிச கும்பலே கருப்புச் சட்டத்தைக் காட்டி மிரட்டாதே'' ''காவிரி நீரை மறுக்கும் காங்கிரசுடன் கூட்டணி ஆட்டம்; ஈழ விடுதலை ஆதரிப்போருக்கு தேசத் துரோகிப் பட்டம்'' ''பால்டிக் நாடுகளின் பிரிவினையை ஆதரிப்பது தேசப் பக்தி; ஈழ விடுதலையை ஆதரிப்பது தேச விரோதமா'' ''பார்ப்பன சாமிக்கு நிவாரண நிதி, இன உரிமை கேட்போரை ஒடுக்க சதி'' ''பீரங்கித் திருடன் பாரத ரத்னா; ஐம்.எம்.எப். அடிமை பாரத பிரதமர்; ஈழ விடுதலை ஆதரவாளர் தேச துரோகி'' ''தமிழர் தளபதியே ஆர்பரிக்குது அக்ரஹாரம், பூப்பறிக்குதோ உமது கரம்? ''படமெடுத்து ஆடுது பார்ப்பன பாம்பு; அடலேறே உடன் பிறப்பே ஆளெங்கே காணோம்'' ''ஈழ விடுதலைக்கு குரல் கொடுப்போம். தமிழின விரோத காங்கிரஸ் ஜெயலலிதா பார்ப்பன கும்பலை முறியடிப்போம்''. ஸ்ரீலங்காவின் தமிழீழ விடுதலை புலிகளுக்கு மக்கள் ஆதரவு நல்கிட வேண்டுமென்றும் அவ்வாறு ஆதரவு நல்குவதை அரசு தடுக்கும் பட்சத்தில் அரசுக்கு எதிராக போர் தொடுக்கவும் தூண்டிக் கொண்டிருந்தனர். சமீப காலங்களில் சொல்லப்படும் பிராமண ஆதிக்கத்தைப் பற்றி பேசி, மதம், இன அடிப்படையிலான பல்வேறு பிரிவுகளுக்கிடையே விரோதத்தை வளர்க்கவும், பல்வேறு மதம் மற்றும் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை குலைத்து பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கவும் பேசிக் கொண்டிருந்தனர்.

4. இதனை கண்ணுற்ற தஞ்சாவூர் மேற்கு நகரக் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கைது செய்வதற்கான காரணங்களை மூவருக்கும் கூறி, இ.த.ச. சட்டப் பிரிவுகள் 124(அ) மற்றும் 153(அ) (ஆ)-ன் கீழ் கைது செய்து சாட்சிகள் (1) ராஜசேகரன் மற்றும் (2) ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் அருள் (எ) அருள் ராஜேந்திரனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து மகஜரில் சான்று ஆவணங்களையும் கைப்பற்றினார். மதம் மற்றும் இன அடிப்படையிலான பல்வேறு பிரிவுகளான மக்களிடையே விரோதத்தை வளர்க்கவும், சட்டபூர்வமாக இந்தியாவில் அமைந்துள்ள அரசின் மீது பற்றின்மையை உருவாக்கும்படியான வெறுப்பை தோற்றுவிக்கவும் சட்டவிரோதமான செயல்களை அற்கு வேண்டிய உபகரணங்களை தந்து ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் திரு. காளியப்பன் (எ) ராமதாஸ் என்பவரே தூண்டினார் எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மாலை 9.30 மணியளவில் சான்றாவணங்களுடன் மூவரையும் காவல்நிலையம் கொண்டு வந்து புகார் மனுதாரர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 124(அ) மற்றும் 153(அ) (ஆ) ஆகியவற்றின் கீழ் தஞ்சை மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் குற்ற எண்: 1477/91 ஆக வழக்குப் பதிவு செய்தார்.

அதே நாளில், இவ்வழக்கில் தஞ்சை மேற்கு வட்ட சட்டம் அண்டு ஒழுங்கு காவல்துறை ஆய்வாளர் திரு. ஆர். ஆண்டியப்பன் புலனாய்வை மேற்கொண்டார். மூன்று சகாக்கள் திரு. அருள் (எ) அருள் ராஜேந்திரன், ஆனந்த்ராஜ் மற்றும் பாலசுப்பரமணியம் ஆகியோர் 16.9.91 அன்று தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எ.1 அவர்களால் நீதித்துறை காவலுக்கு அனுப்பப்பட்டனர். காவல்துறை ஆய்வாளர் 16.9.91 அன்று மாலை 5 மணிக்கு மேற்சொன்ன வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு சகாவான திரு. காளியப்பன் (எ) ராமதாஸ் என்பவரை தஞ்சை கீழ வீதியில் உள்ள நிக்கல்சன் வழங்கிக்கு எதிரில் கைது செய்து அவரது ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் 1.கிருஷ்ணமூர்த்தி 2.கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து மகஜரில் சான்றாவணங்களை கைப்பற்றி, காவல் நிலையத்திற்கு அவரைக் கொண்டுவந்தார். 17.9.91 அன்று தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண்:1 அவர்களால் திரு. காளியப்பன் (எ) ராமதாஸ் நீதித்துறை காவலுக்கு அனுப்பப்பட்டார். காளியப்பன் (எ) ராமதாஸ் மற்றும் அருள் (எ) அருள் ராஜேந்திரன் என்பவர்கட்கான பிணை மனு தஞ்சாவூர் அமர்வு நீதிமன்றத்தில் 25.9.91-ல் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அது தஞ்சாவூர் அமர்வு நீதிபதி அவர்களால் மறுக்கப்பட்டது.

5. புலன் விசாரணையின் போது 8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். சாட்சிகள் திருவாளர்கள் பாலசுப்பரமணியம், பிச்சைமுத்து, காமராஜ், ஆனந்த்குமார், ஆர்.பாண்டியன்,



ரமேஷ், எஸ்.பி.விஜயகுமார், மாரிமுத்து மற்றும் கிரி ஆகியோர் பெரியார் இல்லத்திற்கு அருகில் தஞ்சை அரண்மனை சுவரில் மேலே சொல்லப்பட்ட பாலசுப்பரமணியம் என்பவர் சகாக்களான அருள் (எ) அருள்ராஜேந்திரன் மற்றும் ஆனந்த்ராஜ் ஆகியோருடன் வண்ண தூரிகை கொண்டு அரசுக்கு எதிரான வாசகங்களை எழுதி அதன் மூலம் இந்தியாவில் அமைந்துள்ள சட்டபூர்வ அரசின் மீது பற்றின்மை ஏற்படுத்தும் விதத்தில் வெறுப்பை தூண்டிக் கொண்டிருந்ததாகத் தெரிவித்தனர். மேலும் இந்த வாசகங்களைப் படித்த அங்கு கூடியிருந்த பொதுமக்கள் இந்த வாசகங்களை தங்களுடைய சொந்த அரசின் மீதே பற்றின்மையை உண்டாக்கும் வெறுப்பை ஏற்படுத்தும் சக்தியுள்ளதாகவும், மதம் மற்றும் இன அடிப்படையிலான பல்வேறு மக்களின் பிரிவுகளுக்கிடையில் வெறுப்பை வளர்க்கும் சக்தி கொண்டதாகவும் விளங்குவதாகவும், தங்களுக்குள் பேசிக் கொண்டதாகத் தெரிவித்தனர். மேலும் அருள் (எ) அருள்ராஜேந்திரன் (2) ஆனந்த்ராஜ் ஆகியோர் அங்கு மக்களைத் திரட்டி தங்கள் சொந்த அரசின் மீதே பற்றின்மையை உண்டாக்கும்படியான் வெறுப்பை தூண்டும் நோக்குடன் தவறான கருத்துக்களையும், முழக்கங்களையும் பிரச்சாரம் செய்துக் கொண்டு இருந்ததாகவும், அவர்கள் தெரிவித்தனர். ஸ்ரீலங்காவின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தரவேண்டும் என்றும், அப்படி ஆதரவு தருவதை தடை செய்யுமானால் அரசுக்கு எதிராக போரிட வேண்டும் என்றும் தூண்டிக் கொண்டிருந்தனர். சமீப காலங்களில் உள்ளதாக கூறப்படும் பிராமண ஆதிக்கத்தைப் பற்றி பேசிய இந்த சகாக்கள் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில், மத இன பிரிவுகளுக்கிடையே உள்ள ஒற்றுமையை குலைக்க முயற்சித்தனர் என்றும் சாட்சிகள் மேலும் தெரிவித்தனர்.

தங்களின் சொந்த அரசின் மீதே பற்றின்மையை உண்டாக்கும் வெறுப்பை ஏற்படுத்தும் இந்த தெருமுனைக் கூட்டங்களை நடத்தவும், அரசுக்கெதிராக வாசகங்களை சுவரில் எழுதிடவும் ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் திரு. காளியப்பன் (எ) ராமதாஸ் என்பவரே மூலகாரணம் என்றும் சாட்சிகள் தெரிவித்தனர். இத்தகைய தெருமுனைக் கூட்டங்களை நடத்திடவும், இத்தகைய வாசகங்களை சுவரில் எழுதிடவும் தேவையான உபகரணங்களை திரு. காளியப்பனே வழங்கினார் என்றும் தெரிய வந்தது. இச் சகாக்கள் சுவரில் எழுதியுள்ள வாசகங்களை படித்த, பிரச்சாரங்களை கேட்ட மக்கள் வன்முறையில் ஈடுபடுவார்கள். அவர்களது தூண்டுதலின் பேரில் அரசு நிறுவனங்கள், தொலைத் தொடர்புகள் மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

போக்குவரத்துகளை சேதம் விளைவித்து அவற்றை செயலிழக்கச் செய்வதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக தஞ்சாவூரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் அரசு மற்றும் பொது இயந்திரத்தை முடக்கி வைத்து பொது ஒழுங்கிற்கு குந்தகம் விளைவிப்பார்கள்.

6. மேற்சொல்லப்பட்ட பாலசுப்பரமணியம் தற்போது திருச்சி மத்திய சிறையில் உள்ளார் என்பதையும், அவர் எந்த நேரத்திலும் பிணையில் வெளிவரக்கூடும் என்பதையும் நான் அறிவேன். என் முன்பாக வைக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து திரு. பாலசுப்பரமணியம் அவ்வாறு நீதித்துறை காவலில் இருந்து வெளிவர அனுமதிக்கப்படுவாராயின் தவறான கருத்துக்களை பரப்பி மறைமுகமாக தமிழ்நாட்டு மக்களை தூண்டிவிடும் தெருமுனைக் கூட்டங்களை நடத்தும் நடவடிக்கைகளில் நிச்சயம் ஈடுபடுவார் என்றும், நடைமுறையில் உள்ள சாதாரண குற்றவியல் சட்டங்கள் இத்தகைய பொது ஒழுங்கிற்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபடுவதை உறுதியாக தடுக்க இயலாது என்பதிலும் நான் முழுமையாக திருப்தி அடைகிறேன். எனவே, இவர் எந்த வகையிலும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்க தேசியப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 3(3)-ன்படி அரசு ஆணை எண்:1193 பொது (சட்டம் அண்டு ஒழுங்கு - எஃப்) துறை நாள் 22.8.91-ல் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு தேசியப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 3(2)-ன் கீழ் இவரை தடுப்புக் காவலில் வைக்க அவசியத் தேவையாகிறது எனக் கருதுகிறேன்.

7. திரு. பாலசுப்பரமணியம் என்பவருக்கு தான் ஷ தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆணையினை எதிர்த்து எழுத்துமூலம் முறையீடு செய்துக் கொள்ள அவருக்கு உரிமை உண்டு என்று தெரிவிக்கப்படுகிறது. அவர் அவ்வாறு முறையீடு செய்துக் கொள்ள விரும்பினால் அதனை தாம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சிறைக் கண்காணிப்பாளர் மூலம் இயன்ற விரைவில் தமிழக அரசு தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். அவர் அனுப்பும் முறையீடு எதனையும் அரசு உரியவாறு பரிசீலிக்கும். மேலும் 1980-ம் ஆண்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் 10-வது பிரிவின்படி (மத்திய சட்டம் எண்:65/1980) அவரது வழக்கு ஆலோசனைக் குழுவின் முன்பாக பரிசீலனைக்கு அனுப்பப்படும். தம்மை ஆலோசனைக் குழுவில் நேரில் விசாரிக்கப்பட அவருக்கு உரிமை உண்டு என்றும் தெரிவிக்கப்படுகிறது. அவர் தன்னை ஆலோசனைக் குழு நேரில் விசாரிக்க வேண்டுமா இல்லையா என்பதை இயன்ற வரையில் திட்டவட்டமாக எழுத்தின் மூலமாக தலைமைச் செயலாளருக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. ஆலோசனைக் குழுவினால் நேரில் விசாரிக்கப்படுகையில் தமக்கு நண்பர் ஒருவரின் உதவி தேவை என்று அவர் விரும்பினால் நேரடி விசாரணையின் போது வழக்குரைஞர் அல்லாத நண்பர் ஒருவரை அப்படி வைத்துக் கொள்ள அவர் அனுமதிக்கப்படுகிறார் என்றும் ஆலோசனைக் குழுவினால் விசாரிக்கப்படுகையில் மேற்சொல்லப்பட்ட அவரது நண்பரை அவரே தனது சொந்தப் பொறுப்பில் அழைத்து வர ஏற்பாடுகள் செய்துக் கொள்ள வேண்டுமென்றும் அவருக்கு தெரிவிக்கப்படுகிறது.

9. திரு. பாலசுப்பரமணியம் தான் மத்திய அரசுக்கு முறையீடு செய்ய வேண்டுமென்று விரும்பினால் அதனை தான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இருக்கும் சிறைக் கண்காணிப்பாளர் மூலமாக இந்திய அரசின் செயலாளர், உள்துறை (உள்நாட்டு பாதுகாப்புத்துறை) வடக்கு பிளாக். புதுடெல்லி 110 001, என்ற முகவரிக்கு அனுப்பவேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட மாஜிஸ்ரேட் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

பெறுநர்:

திரு. பாலசுப்ரமணியம், வயது 24/91,
த/பெ சுப்புத்தம்பி,
அண்ணா நகர், [illegible] நகர் (வழி),
தஞ்சாவூர்.

தற்போது: மத்திய சிறைச்சாலை, திருச்சி கண்காணிப்பாளர்,
மத்திய சிறைச்சாலை, திருச்சி மூலமாக.

மக்கள் கலை இலக்கியக் கழகம், அதன் தோழமை அமைப்புகளான விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, புதிய கலாச்சாரம் மற்றும் புதிய ஜனநாயகம் ஆகியவற்றையும் அவற்றின் நடவடிக்கைகளையும் அறிந்தவர்களுக்கு இந்நான்கு தோழர்களையும் தே.பா. சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைப்பதற்காகக் கூறப்பட்டுள்ள காரணங்கள் அப்பட்டமான அவதூறுகளும் பொய்யும் தாம் என்பது நன்கு விளங்கும்.

"ம.க.இ.க. ஸ்ரீலங்காவில் தமிழர்களுக்காகத் தனி தமிழ் ஈழம் அமையப் போரிட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு ஆதரவளித்து வருகிறது." "ம.க.இ.க. தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அதன் நடவடிக்கைகளை ஆதரிக்க தமிழக மக்களின் உள்ளங்களை மாற்றி அமைக்கவும் தமிழ்நாட்டு மக்களைத் தூண்டிவிடவும் முக்கிய நகரங்களில் எல்லாம் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்". இது பார்ப்பன - பாசிச ஜெயா அரசு கூறும் குற்றச் சாட்டுக்களில் ஒன்று.

தனித் தமிழ் ஈழம் அமைவதையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும், அவர்களது நடவடிக்கைகளையும் ஆதரிப்பது தமிழக மக்களின் ஜனநாயக உரிமை என்றே நாம் கருதுகிறோம். இது குற்றமென்றால், இவ்வாறு செய்து ஓட்டுப் பொறுக்கிய எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா கும்பலையும், வேறுபிற ஆதாயங்களை அடைந்த பச்சோந்தி வீரமணியையும், இப்போது அடக்குமுறைக்கு அஞ்சி ஓடி ஒளிந்துகொண்ட கருணாநிதி போன்றவர்களையும் என்ன செய்வது? இப்போதும் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியும் பாட்டாளி மக்கள் கட்சியும் இவ்வாறு தான் பகிரங்கமாகக் கூறுகின்றன.

ஆனால் ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் பத்திரிக்கைகளும் ஆரம்பத்தில் இருந்தே தமிழீழ சுயநிர்ணய உரிமையை ஆதரித்துவரும் போதே, புலிகள் அமைப்பையும் அதன் நடவடிக்கைகளை, குறிப்பாக அதன் பாசிசத் தன்மையையும் பகிரங்கமாகவே எதிர்த்து வந்துள்ளன. இதற்காகவே புலிகள் எம்மை எதிரிகளாகக் கருதுவதோடு, ராஜீவ் கொலையில் எமது பத்திரிக்கையாளர்களைத் தொடர்புபடுத்தி அவதூறான பேட்டியளித்தார் புலிகளின் பிரதிநிதி கிட்டு. இருந்தபோதும் மேற்படி பொய்யான குற்றச்சாட்டுக்களை பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் சுமத்துகிறது என்றால் புரட்சிகர அமைப்புகளைத் தனிமைப்படுத்தி, ஒடுக்கும் சதியே காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தப் புகாரிலேயே கூறப்பட்டுள்ள முழக்கங்களையும் அதிகரித்து வரும் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்தும் நாம் பிரச்சாரம் செய்வதை மறுத்திடவில்லை. ஆனால், அதற்குப் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அரசு தரும் வியாக்கியானங்கள் அதன் விளைவுகள் பற்றிய விபரீதமான கற்பனைகள் எல்லாம் அபாண்டமானவை என்பது சொல்லாமலே விளங்கும். சாதி, மத, வர்ண இன (RACE) வெறியை எதிர்த்துப் போராடுவதில் முன்னிலை வகிக்கும் ம.க.இ.க. வின் மீது சாதி, மத, இன (RACE) அடிப்படையிலான ஒற்றுமையைக் குலைத்து, விரோதத்தை வளர்ப்பதாகவும் குற்றஞ்சாட்டுவது வீண் பழியே என்பதும் அனைவரும் அறிந்ததே.

பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அரசு தொடுத்துள்ள இக்குற்றச்சாட்டின்படி தோழர்கள் அருள், ஆனந்தராஜ் மற்றும் பால சுப்பிரமணியத்தை மேற்படி 'சட்டவிரோதச் செயல்களில்', ஈடுபடுவதற்கு மூலக் காரணம் செப்-15-ந் தேதி காலை 6 மணிக்கு அவர்களைத் தனது வீட்டிற்கு அழைத்து தோழர் காளியப்பன் தூண்டியதுதான் எனக் கூறி109 வது பிரிவின் கீழ் வழக்குப் போடப்பட்டுள்ளது. ஆனால், தோழர் காளியப்பன் அந்த நேரத்தில் நாகபுரியில் இருந்து சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தார்; செப் 13, 14 தேதிகளில் நடந்த அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டுக் கழக செயற்குழு கூட்டத்திற்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் எவ்வாறு பொய் வழக்குகளைச் சோடிக்கின்றது என்பதற்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்?



படிப்பகம்

www.padippakam.com

# போலிக் கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாத சாகசம்

**முன்பு பாசிச எம்.ஜி.ஆருக்கு துதிபாடியதைப்போல இப்போது பாசிச ஜெயலலிதாவுக்கும் காவடிதூக்க 'மார்க்சிஸ்டுகள்' தயாராகி விட்டார்கள். இந்த நோக்கத்தோடு தி.மு.க. கூட்டணியிலிருந்து கழட்டிக்கொள்ள முடிவு செய்துள்ளார்கள்.**

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஓட்டுக் கட்சி பிழைப்புவாதிகள் கட்சி மாறுவதும், கட்சியின் கொள்கையையும் கூட்டணியையும் மாற்றிக் கொள்வதும் ஓட்டுக் கட்சிகளின் வாடிக்கை. அதன்படியே போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளில் ஒன்றான 'மார்க்சிஸ்ட்' கட்சி சந்தர்ப்பவாத 'பல்டி' அடித்து பத்தாண்டுகளாக நீடித்து வரும் தி.மு.க.வுடனான தனது உறவை முறித்துக் கொள்ளப் போவதாக செய்திகள் வந்துள்ளன.

''தி.மு.கழகம் பிரிவினை வாதத்தையும் பிளவு வாதத்தையும் தூண்டி வருகிறது. அண்மைக் காலமாக பொதுமேடைகளில் இனவெறியைத் தூண்டிவிட்டு - பிராமண எதிர்ப்பு அரசியலை வளர்க்கிறது. சாதி துவேஷத்துடன் முதல்வர் ஜெயலலிதாவை ''பாப்பாத்தி'' என்று வசைபாடுகிறது. தி.மு.க.வின் செயல்பாடுகள் தேசிய நலன்களுக்கு எதிராகவே உள்ளது.

மேலும் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் விடுதலை புலிகளுக்கு ஆதரவாக அரசு எந்திரம் செயல்பட்டுள்ளது. ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத் தலைவர் பத்மநாபாவைக் கொலை செய்த ஈழப் போராளிகளை கருணாநிதி அரசு கைது செய்யவில்லை. இதன் மூலம் பிரிவினை வாத பயங்கரவாத சக்திகள் வளரவும் தமிழகத்தில் ஆயுதக் கலாச்சாரம் வேரூன்றவும் அது துணையாக இருந்துள்ளது.

குறிப்பாக, முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலைக்குப் பிறகு தமிழக மக்கள் தி.மு.க.வை வெறுத்து ஒதுக்கத் தொடங்கியுள்ளனர். தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்ததன் காரணமாக 'மார்க்சிஸ்ட்' கட்சியையும் மக்கள் புறக்கணிக்கிறார்கள். தி.மு.க. கூட்டணியால் நமக்கு எந்தவித தேர்தல் ஆதாயமும் கிடைக்கவில்லை. எனவே, தி.மு.க.வுடனான உறவை நாம் துண்டித்துக் கொள்ள வேண்டும்'' என்று 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அகில இந்தியத் தலைவர்கள் அண்மையில் டெல்லியில் கூடிப் பேசியுள்ளனர்.

'மார்க்சிஸ்டுகள்' தாங்கள் எடுக்கும் முடிவுகளை அதிகார பூர்வமாக தைரியமாக அறிவிக்காமல், அம்முடிவுகளை மெதுவாக வெளியே கசிய விடுவது என்பது அவர்களின் பாரம்பரியக் கொள்கை. இம்முறையும் அதேபோல தங்களது முடிவுகளைக் கசிய விட்டதும், அவை சில ஆங்கில பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவந்து பரபரப்பூட்டின. 'மார்க்சிஸ்டு' அணிகளும் தி.மு.க.வும் இதைக்கண்டு குழம்பிய போதிலும் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் இப்பத்திரிகை செய்திகளை மறுக்காமல் மௌனம் சாதித்தனர். அடுத்த சில நாட்களில் இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் செய்திகள் வந்தன. சென்னையில் ஜனவரி 3 முதல் 9ந் தேதி வரை நடைபெற உள்ள 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அகில இந்திய மாநாட்டை ஒட்டி தலைவர்கள் விவாதித்து வருவதாகவும், அதில் பிரிவினை வாதத்தை தூண்டும் தி.மு.க.வுடன் உறவை முறித்துக் கொள்வதைப் பற்றி பகிரங்கமாக அறிவிக்கப் போவதாகவும் உறுதிப்படுத்தப் படாத செய்திகள் வந்தன.




போலிக் கம்யூனிஸ்டுகளின் இச்சந்தர்ப்பவாத 'பல்டி'க்கு காரணம் என்ன? தேர்தல் முடிவுகள்தான்! மே.வங்கம், கேரளாவை அடுத்து அதிக அளவில் எம்.எல்.ஏ., எம்.பி.க்களை தமிழகத்தில் பெற்றிருந்த 'மார்க்சிஸ்டு'கள், கடந்த பத்தாண்டுகளாக தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்த பிறகு பழைய நிலையைத் தக்க வைத்துக்கொள்ள முடியாமல் தொடர்ந்து தேர்தல் தோல்விகளைச் சந்தித்து வருகின்றனர். இப்போது நடந்து முடிந்த தேர்தலில் ஒரேயொரு இடத்தைத்தான் பிடிக்க முடிந்தது. எனவே, முன்பு எம்.ஜி.ஆருடன் கூட்டு சேர்ந்து அதிக இடங்களில் வெற்றி பெற்றதைப் போல, இப்போது ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்வதன் மூலம் அடுத்து வரும் தேர்தல்களில் அதிக இடங்களைக் கைப்பற்றலாம்; அதன் மூலம் கட்சியை வளர்க்கலாம் என்று கணக்குப் போடுகின்றனர்.

முன்பு எம்.ஜி.ஆருடன் கூட்டு சேர்ந்த போது தி.மு.க.வை பிற்போக்கான ஊழல் கட்சி என்றனர். அதன் பிறகு தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்து எம்.ஜி.ஆரை சர்வாதிகாரி என்று சாடினர். இப்போது மீண்டும் தி.மு.க.வை கைகழுவிவிட்டு ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேரத் துடிக்கின்றனர். இதற்காக 'தி.மு.க. பிரிவினையை விதைக்கிறது; பிராமண துவேஷத்தில் இறங்கியுள்ளது' என்கிற அரிய கண்டுபிடிப்புகளை அவிழ்த்துவிட்டு தமது கொள்கைபூர்வ முடிவுக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

தி.மு.க.வைப் பற்றி விமர்சிக்கும் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் அதே நேரத்தில் ஜெயலலிதாவின் ஆட்சியைப் பற்றி வாயே திறக்கவில்லை. ஜெயாவின் கடந்த நூறு நாள் ஆட்சிக்கு எதிராக ஒரு சிறு துரும்பைக் கூட எடுத்துப் போடாத போலிக் கம்யூனிஸ்டுகளின் செயல்பாடுகள் ஜெயாவின் பாசிச ஆட்சிக்கு வெண்சாமரம் வீசுவதாகவே உள்ளது.

ஈழத் தமிழருக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்களை புலிகளின் கூட்டாளிகள் என்று தேசத்துரோகக் குற்றம் சாட்டி சிறையிலிட்ட போதும், இந்து கோயில்களைப் புனரமைப்பது என்ற பெயரில் சட்டவிரோதமாக நிதி திரட்டிய போதும், வேதாமகப் பல்கலைக்கழகம் தொடங்கி பார்ப்பன மீட்சிக்கு வித்திட்ட போதும், ''நான் பாப்பாத்திதான்; என்னை ஒன்றும் செய்ய முடியாது'' என்று பாசிச அதிகார போதையில் கொக்கரித்தபோதும் போலிக் கம்யூனிஸ்டுகள் பார்ப்பன - பாசிச அடக்குமுறையை வாயளவில் எதிர்க்கக் கூட வக்கின்றி ஒடி ஒளிந்து கொண்டனர். அதன் ஒரேயொரு எம்.எல்.ஏ ஜெயா அரசு கொண்டு வந்த அனைத்து மக்கள் விரோத தீர்மானங்களையும், 'ஸ்டண்டு'களையும் சவடால்களையும் சட்டமன்றத்தில் விசுவாசமாக ஆதரித்தார். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கப்பட்டபோதும், சாதிப் பெயரைச் சொல்லி இழிவுபடுத்திய போதிலும், 'மார்க்சிஸ்டு' எம்.எல்.ஏ. மேல் வாயையும் கீழ்வாயையும் பொத்திக்கொண்டுதான் இருந்தார்.

மேலும், சென்னையிலுள்ள பின்னி ஆலையின் தொழிற்சங்கத் தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான உ.ரா.வரதரா



படிப்பகம்

சன், ஜெயலலிதாவை சிரமப்பட்டு சந்தித்து மூடிக்கிடக்கும் பின்னி ஆலை மற்றும் தொழிலாளர் அவலத்தைப் பற்றி பேசினாராம். உடனே வரதராசனின் சங்கம், முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி! நன்றி! என்று சுவரொட்டி ஒட்டுகிறது.

இதே வரதராசன் "நக்கீரன்" ஏட்டிற்குப் பேட்டியளிக்கும்போது, தி.மு.க. - 'மார்க்சிஸ்டு' உறவு முறிந்ததாக வந்துள்ள செய்தியை மறுத்துள்ளாரே தவிர, ஜெயாவின் பாசிச அடக்குமுறையைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. மேலும் லட்சக்கணக்கான தொழிலாளர்களைத் திரட்டி வைத்துள்ளதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு' கட்சியின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு, தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தை நடத்தக்கூட திராணியற்றுக் கிடக்கிறது. ஜெயா அரசுடன் மோதல் கொள்கையைத் தவிர்ப்பது என்ற 'மார்க்சிஸ்டு'களின் முடிவுதான் இதற்குக் காரணம்.

இவையெல்லாம் காட்டுவதென்ன? முன்பு பாசிச எம்.ஜி.ருக்குத் துதிபாடியதைப் போல இப்போது பாசிச ஜெயலலிதாவுக்கும் காவடி தூக்க 'மார்க்சிஸ்டுகள்' தயாராகி விட்டார்கள். தேசிய ஒருமைப்பாடு, பிரிவினை வாத எதிர்ப்பு, இட ஒதுக்கீடு பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டும் - முதலான 'மார்க்சிஸ்டு' கட்சியின் கொள்கைக்கு கருணாநிதியை விட ஜெயலலிதாதான் நெருக்கமாக உள்ளார். மேலும் பெரும்பாலான உழைக்கும் மக்கள் ஜெயலலிதாவை ஆதரிப்பதால், ஜெயாவுடன் கூட்டு சேர்ந்து உழைக்கும் மக்களை கவர்ச்சிவாத மாயையிலிருந்து விடுவிக்கப் போகிறோம் என்று கொள்கை விளக்கம் அளிக்கவும் முடியும். இந்த நோக்கத்துடன் தான் தி.மு.க.வை தனது கூட்டணியிலிருந்து கழட்டிக் கொள்வது என 'மார்க்சிஸ்டு' கட்சி முடிவு செய்துள்ளது.

பாசிஸ்டுகளுக்கு பகிரங்கமாக ஆதரவளிக்கும் 'மார்க்சிஸ்டு'களின் சந்தர்ப்பவாத முடிவைக் கண்டு ஒருபுறம் பாசிச காங்கிரசு கட்சியினர் பாரதீய ஜனதாவை எதிர்க்க தம்முடன் கூட்டுசேருமாறு போலிக் கம்யூனிஸ்டுகளை அறைகூவுகின்றனர். மறுபுறம், காங்கிரசு ஆட்சியின் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கவும், கேரளாவில் கருணாகரன் ஆட்சிக்கு எதிராக இணைந்து போராடவும் 'மார்க்சிஸ்டு'களை இந்துவெறி பாசிஸ்டுகளான பாரதீய ஜனதா கட்சியினர் விரும்பி அழைக்கின்றனர்.

கட்சியைப் பலப்படுத்துவதற்காகவே தாங்கள் கொள்கை மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளதாக 'மார்க்சிஸ்டு'கள் கூறினாலும், அக்கட்சி இன்று மேலும் மேலும் பிளவுபட்டு வருகிறது. ஒரிசாவிலுள்ள 'மார்க்சிஸ்டு' கட்சியிலிருந்து ஒரு கோஷ்டி பிரிந்து இன்று தனிக்கட்சியாகிவிட்டது. வங்கத்தில் இன்னுமொரு கோஷ்டி கலகம் செய்து வருகிறது. 'மார்க்சிஸ்டு'களின் சந்தர்ப்பவாதத்திற்கு பொருத்தமான விளைவுகள்தான் ஏற்பட்டிருக்கிறது. நல்ல முன்னேற்றம்தான்!

● பாலன்

# நல்லம்பள்ளி:

# ரௌடிக்கும்பலின் அட்டூழியம்

தர்மபுரி - நல்லம்பள்ளியிலுள்ள அதியமான் கோட்டை என்ற கிராமத்தில் உழைக்கின்ற ஏழை எளியவர்களை ஏய்த்து கொழுத்து வரும் கந்து வட்டி கும்பலின் ரௌடித்தனங்களுக்கும், சமூக விரோத செயல்களுக்கும் அளவே இல்லாமல் போய்விட்டது. பாய்மில் முதலாளி மாரிமுத்து, கொளந்தை (என்கிற) பையன், நல்லம்பள்ளியைச் சேர்ந்த 'சீட்டு'புகழ் சின்னத் தம்பி, இந்தியன் வங்கியில் வேலை செய்யும் அதியமான், 'சுண்டக்காய்' ரவுடி மாதேஷ் ஆகியோரே இந்த ரௌடி கும்பலின் முக்கிய புள்ளிகள்.

ஊர் மக்களின் ஏழ்மையை சாதகமாக்கிக் கொண்டு கடன் கொடுத்து அநியாய வட்டி வசூலிப்பது, குறிப்பிட்ட தேதியில் கட்டத் தவறினால் தண்டம் (பெனால்டி) போட்டு வசூலிப்பது, பணம் கட்ட இயலாதவர்களை கட்டி வைத்து அடிப்பது, பணம் வாங்கியவரின் மனைவியை "பணத்திற்கு பதில் ஒரு நாள் என்னுடன் படு" என கையைப் பிடித்து இழுத்து வெறியாட்டம் போடுவது போன்றவை இக்கும்பலின் சாதாரண நடவடிக்கை.




இதுவன்றி ஊர் பொது இடங்கள், நடைபாதை முதலியவற்றை அடாவடித்தனமாக ஆக்கிரமித்து சொந்தமாக்கிக் கொள்வது, ஊரிலுள்ள வயசு பெண்களை கேலி - கிண்டல் செய்து ஆபாசமாகப் பேசுவது, தன்னை மதிக்காதவர்களை - அப்பாவிகளை கட்டிவைத்து அடித்து கடன் வாங்கியதாக பலவந்தப்படுத்தி கையெழுத்து வாங்குவது, ஊர்ப்பஞ்சாயத்துக்களில் தலையிட்டு நிரபராதிகளை - அப்பாவிகளை தண்டனை என்ற பெயரில் சித்திரவதை செய்வது, வேலைவாங்கித் தருவதாக ஏமாற்றி அப்பாவி இளைஞர்களிடம் பணம் சுருட்டி பின் அவர்களையே போலீசிடம் சிக்க வைப்பது... என எல்லையின்றி தொடரும் இக்கும்பலின் சமூக விரோத செயல்கள் அதியமான் கோட்டை என்றில்லாமல் இண்டூர், மாதேமங்கலம், நல்லம்பள்ளி என பல ஊர்களுக்கும் பரவி வருகிறது. இக்கும்பலுக்கு உள்ளூர் போலீசு காவலனாகவும், சேவகனாகவும் இருந்து வருகிறது.

— இவற்றை அம்பலப்படுத்தி இப்பகுதியில் செயல்பட்டு வரும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, 8.9.91 அன்று பிரசுரம் அச்சிட்டு விநியோகித்தனர். மக்கள் மத்தியிலே இச்செயல் சிறந்த வரவேற்பை பெற்றது. ஆத்திரமடைந்த ரௌடிக்கும்பல் பு.மா.இ.மு. தோழர்களை தாக்கத் தொடங்கியது.



8.9.91 அன்று நல்லம்பள்ளியிலுள்ள தொழிலாளி சீனு என்பவரை அடித்து மிகத் தரக்குறைவாகப் பேசியது, இக்கும்பல். மறுநாள் தோழர்கள் செல்வராஜ், கதிரவன், கண்மணி, இராஜா, கலைச்செல்வம், வீரமணி ஆகியோரை தரக்குறைவாக திட்டி தாக்கியது. 11.9.91 அன்று காலையில் ரௌடி சின்னத்தம்பி தன் தம்பி பெரியண்ண செட்டியை அனுப்பி தோழர் கண்மணியை ஆபாசமாகத் திட்டியும், ஜாக்கெட்டை கிழித்தும் வக்கிரமாக செருப்பால் தாக்கியும் வெறியாட்டம் போடச் செய்தான். இவையனைத்தும் ஆளரவம் இருந்தபோதே பட்டப்பகலில் அப்பட்டமாக அரங்கேறியது.

ரௌடிக் கும்பலின் அக்கிரமங்களைக் கண்டு பகுதி மக்கள் கொதிப்படைந்துள்ளார்கள். அக்கும்பல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலர் கேட்டனர். "இக்கும்பலை ஒழித்தால்தான் நம்ம ஊர் நல்லா இருக்கும்" என்று பலர் தமது உணர்வை வெளிப்படுத்தினர். பு.மா.இ.மு. ஊர் பெரியவர்களை கலந்து ஆலோசித்து ஊர்ப் பஞ்சாயத்துக் கூட்டி அதில் அக்கும்பலை நிறுத்தி விசாரித்து தண்டனை வழங்குவதென முடிவெடுத்தது. பஞ்சாயத்து கூடும் தேதியை அறிவித்து ரௌடிக்கும்பலை மேலும் அம்பலப்படுத்தி பிரசுரம் வெளியிட்டுள்ளது. பகுதி மக்களின் ஆதரவுடன் பு.மா.இ.மு., ரௌடிக்கும்பலின் கொட்டத்தை அடக்கி அதைக் கிள்ளியெறிய உறுதி பூண்டுள்ளது. அதற்கான இயக்கத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# தொழிலாளி எரித்துக் கொலை

## டி.வி.எஸ். பார்ப்பன கும்பலின் அடக்குமுறை

டி.வி.எஸ்.குரூப் நிறுவனத்தின் பார்ப்பன - தரகு முதலாளிக் கும்பல், தொழிலாளர்கள்மீது நடத்தும் அடக்குமுறை சந்திசிரித்த ஒன்றுதான். விசுவாச ஏவல் நாயான காங்கிரசு தொழிற்சங்கம் ஐ.என்.டி.யு.சி.யைத் தவிர எத்தொழிற்சங்கத்தையும் டி.வி.எஸ். நிறுவனம் அங்கீகரிக்கவில்லை. புதிய தொழிற்சங்கமோ, மாற்று தொழிற்சங்கமோ உருவாகாதபடி தொழிலாளர்களை நரித்தனமாக பழிவாங்குவது - பிரித்தாளுவது, குண்டர்படை வைத்துத் தாக்குவது டி.வி.எஸ். நிர்வாகத்தின் வாடிக்கை. தொழிற்சங்க முன்னோடிகளையும், தொழிலாளர்களிடையே தீவிர செயல்வீரர்களையும் இனங்கண்டு வேலை நீக்கம், மாற்றல் என பழிவாங்கி வந்த நிர்வாகம் அண்மையில் ஒருவரை அலுவலகத்திலேயே பெட்ரோல் ஊற்றி கொளுத்தியுள்ளது. டி.வி.எஸ். நிறுவனத்தின் பார்ப்பன கும்பலுக்கும் ஜெ ஆட்சியில் புதுத் தெம்பு வந்து திமிர் ஏறியுள்ளதைத் தான் இச்சம்பவம் காட்டுகிறது.

மதுரை - மேலூர் நரசிங்கம்பட்டியில் உள்ள ஆட்டோ ரப்பர் டூல்ஸ் பிரிவு டி.வி.எஸ். குரூப் நிறுவனத்தைச் சேர்ந்தது. இக்கம்பெனியில் புதிய தொழிற்சங்கம் தொடங்கி தீவிரமாக செயல்பட்டு வந்தார் மதுரை வில்லாபுரத்தைச் சேர்ந்த முருகானந்தம். 30.9.91 அன்று மேனேஜர் ராமச்சந்திரன், முருகானந்தத்தை தன் அறைக்கு அழைத்து தொழிற்சங்க விஷயமாக பேசினான். பேசிக் கொண்டிருக்கும்போதே சூபர்வைசர்கள் சங்கரன் மற்றும் சங்கரநாராயணன் உதவியோடு முருகானந்தத்தின்மீது பெட்ரோலை ஊற்றி கொளுத்தினான் ராமச்சந்திரன். ''காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்'' என்று அலறியபடியே சங்கரனை கட்டிப் பிடித்தார், முருகானந்தம். (சங்கரனுக்கு தீக்காயங்கள் ஏற்பட்டு ரகசிய சிகிச்சையளிக்கப்படுகிறது) பிறகு மூவரும் முருகானந்தத்தை வெளியே தள்ள அலறியபடியே வந்து விழுந்தவரை மற்ற தொழிலாளர்கள் ஓடிவந்து தீயை அணைத்துக் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்தனர். 5 நாளாக உயிருக்குப் போராடி, பின் அகால மரணமடைந்தார் முருகானந்தம்.

டி.வி.எஸ். நிர்வாகம் விட்டெறிந்த காசுக்கு வாலாட்டியது போலீசு. தொழிலாளர்கள் கொடுத்த புகார் மனுவை கிடப்பில் போட்டுவிட்டு நிர்வாகம் கொடுத்த 'தற்கொலை' புகாரை மட்டும் பதிவு செய்தது. முருகானந்தம் உயிருக்காகப் போராடிய நேரத்தில் 'தற்கொலை' என வாக்குமூலம் வாங்க போலீசு தலைகீழாக நின்றும் முடியவில்லை. முருகானந்தத்தின் தந்தையிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவதற்காக வந்த போலீசை வில்லாபுரத்து மக்களே துரத்தியடித்தனர். ஆனாலும் முருகானந்தத்தின் தந்தை வேலைசெய்யும் பஸ் கம்பெனி முதலாளி உதவியுடன் அவரை மிரட்டி - ஆசைக்காட்டி போலீசு கையெழுத்து வாங்கியது. இது தொழிலாளர்களுக்குத் தெரியவரவே ஒன்றுதிரண்டு போராடி 'தற்கொலை' என கையெழுத்து வாங்கியதை கிழித்துப் போட வைத்தனர். 'தற்கொலை' என ஜோடிக்க முடியாததால் விழிபிதுங்கி நிற்கும் போலீசு, நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் மௌனமாகி முடங்கி விட்டது.

முருகானந்தத்தின் உடலை போலீசே எடுத்துச் சென்று புதைக்க முயன்றதையும் தொழிலாளர்கள் போராடி தடுத்தனர். மேலும் பிரேதத்தோடு 5.10.91 அன்று கோரிப்பாளையம் தேவர்சிலை அருகில் நீதிவேண்டி பஸ்மறியல் செய்தனர். உடன் துணை கமிஷனர் சிவனாண்டி தலைமையில் போலீசு பட்டாளம் குவிந்தது. பலவாறு மிரட்டியும் தொழிலாளர்கள் கலையாமல் உறுதியுடன் போரிட்டதால் 64 பேரை கைது செய்து கொண்டுபோனது.

கைது செய்த தொழிலாளர்கள் மீது வழக்கு போட்டால் மேலும் நிலைமை மோசமாகும் என்பதால் வழக்கின்றி அன்றே விடுவித்தது போலீசு. ஆனால், நிர்வாகம், எவ்வித காரணமும் அறிவிக்காமல் நிறுவனத்தை சட்டவிரோதமாக இழுத்து மூடியுள்ளது. டி.வி.எஸ். நிறுவனத்தில் இருக்கும் அனைத்து தொழிற்சங்கங்களும் எதையும் பொருட்படுத்தாமல் செயல்பாடற்று கிடக்கின்றன. முருகானந்தம் செயல்பட்ட SIEU, SREU தொழிற்சங்கங்கள், சட்டபூர்வ தீர்வு கிடைக்குமென நம்பி காத்திருக்கின்றன. முருகானந்தத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு எதிராக டி.வி.எஸ். குரூப் நிறுவனத்தின் மற்ற பிரிவுகளில் உள்ள எந்த சங்கமும் தொழிலாளர்களைத் திரட்டிப் போராட முன்வரவில்லை.

டி.வி.எஸ். பார்ப்பன - தரகு முதலாளிக் கும்பலின் நரித்தனமான சதிகளையும், காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களையும் புதிய யுக்தியோடும் வீச்சோடும் புரட்சிகர தொழிற்சங்கங்களால் மட்டுமே எதிர்கொண்டு முடியடிக்க முடியும். எனவே, தொழிலாளர் தோழர்களே! துரோகத் தலைமைகளை தூக்கியெறிந்து வாருங்கள்; புரட்சிகர தொழிற்சங்கத்தை கட்டியமைப்போம்!

## மராட்டிய போலீசின் இனவெறி

பம்பாயில் பொய்சர் பகுதியில் 15.9.91 அன்று தமிழர்கள் மீது மராட்டிய போலீசு கடும் தாக்குதல் நடத்தியுள்ளது. தமிழ் பெண் ஒருவரை அங்குள்ள குண்டர்படை கைக்கூலி ஒருவன் கையைப் பிடித்து இழுத்து மானபங்கப் படுத்த முயன்றதை தடுத்தார், ஜோசப் எனும் தமிழ் இளைஞர். இதனால் ஜோசப்பை முகம்கூட தெரியாதபடி சிதையுமளவிற்கு தாக்கி கொன்று போட்டது அக்குண்டர்படை. இக்கொடுமைக்கு எதிராக பகுதியிலுள்ள தமிழர்கள் கொதித்தெழுந்தனர். குண்டர்படையின் கைக்கூலியாக செயல்படும் உள்ளூர் போலீசு, தமிழர்களை ஓடஓட அடித்து விரட்டியதுடன் நில்லாமல் 50-க்கும் மேற்பட்டவர்களை கைது செய்தது. தாராவி, மாதுங்கா, ஓர்லம், கோலிவாடா போன்ற தமிழர் வாழும் பகுதிகளிலும், வேட்டி, லுங்கியுடன் செல்லும் வாலிபர்களை 'சந்தேக கேஸ்' என பிடித்துச் சென்று மராட்டிய போலீசு இரவு முழுவதும் அடித்து சித்திரவதை செய்கிறது. தமிழ் இளைஞர்கள் வேலைக்கு கூட செல் முடியாத வண்ணம் வேட்டையாடப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர். இந்நிலையைப் பயன்படுத்தி சில மதவாத சக்திகள் தமிழர்களை போலீசிடம் காட்டிக் கொடுத்து ஆதாயமடைகின்றன.

பம்பாயில் இவ்விதம் தமிழர்களுக்கு எதிராக தொடுக்கப்படும் தாக்குதலுக்கு எதிராக தமிழர்களை ஒன்று திரளும்படி அறைகூவி மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த தமிழர் தேசிய இயக்கம் பிரசுரம் விநியோகித்துள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா.சண்முகராசு, 21, [illegible]சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் தெரு, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா



“நாங்களும் உங்களைப் போல் அழகாகத்தான் இருந்தோம். அதோ அந்த கொலைகாரப் பாவிதான் எங்களை இப்படி விகாரமாக்கியது” - என்கிறார் இவர்! போபாலில் சென்று யாரைக் கேட்டாலும் அமெரிக்க நிறுவனம் ‘யூனியன் கார்பைடை’ சுட்டிக்காட்டி இதைத்தான் கூறுவார்கள்.

1984 - போபால் விஷவாயுக் கசிவு ஆயிரக்கணக்கான மக்களை பலிகொண்டது. லட்சக்கணக்கானோரை ஊனமாக்கியது. விகாரமாக்கப்பட்ட குழந்தைகளும், முதியவர்களும், பெண்களும் இன்றுவரை போதிய மருத்துவ வசதியின்றி அல்லாடுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சையளிக்க பல ஆயிரம் கோடி நிவாரணம் தேவை. இந்தியச் சட்டப்படி அல்லாமல் அமெரிக்கச் சட்டப்படி அந்நிறுவனத்திடம் நட்டஈடு பெற்றால் பல ஆயிரம் கோடி பெற முடியும். ஆனால் அற்பத் தொகை/ரூ.710 கோடியை இந்தியச் சட்டப்படி நட்டஈடாக பெறுவது என ஒப்பந்தம் போட்டார் பாசிச ராஜீவ்.

இன்று - அக்டோபர் 3-ந் தேதி - இத்துரோக ஒப்பந்தத்தை அமுல்படுத்த அனுமதியளித்து தீர்ப்பளித்துள்ளது உச்சநீதிமன்றம். இதற்கு எதிராகப் போடப்பட்ட வழக்குகளை எல்லாம் அடாவடித்தனமாக தள்ளுபடியும் செய்துள்ளது.

இதோ இந்தியாவை கொள்ளையடிப்பதற்காக சில நிபந்தனைகளை விதித்து வந்த அமெரிக்க பிரதிநிதி கார்லா ஹில்ஸ்-டம் வர்த்தக ஒப்பந்தம் போட பேச்சுவார்த்தை நடத்துகிறார் அமைச்சர் ப.சிதம்பரம்.

புதிய தொழில் நுட்பத்திற்காகவும், கச்சாப் பொருள்களுக்காகவும் அந்நியரை சார்ந்து இருப்பதால் ஏற்கனவே இந்தியப் பொருளாதாரம் பெருமளவிற்கு கடத்தப்பட்டுள்ளது. இந்திய பட்ஜெட் பற்றாக்குறையை சரிகட்ட அமெரிக்காவிடம் கடன் வாங்கும் போதெல்லாம் அமெரிக்கா போடும் நிபந்தனைகளுக்கு தலையாட்டி செயல்படுகிறார்கள், இந்திய ஆட்சியாளர்கள். புதிதாக ஆட்சியைப் பிடித்த நரசிம்மராவ் - காங்கிரசு கும்பலும் அந்நிய மூலதனத்திற்கு இந்தியாவிலிருந்த கட்டுப்பாடுகளையெல்லாம் தளர்த்தி, ஏகாதிபத்திய கொள்ளைக்கு வழியமைத்து கொடுத்துள்ளது. இவையெல்லாம் போதாது என்று மேலும் கொள்ளையடிக்க ஏதுவாக இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களுக்கும், கண்டுபிடிக்கப்படும் ஆராய்ச்சிகளுக்கும் உள்ள இந்திய காப்புரிமைச் சட்டத்தை ரத்து செய்யும்படியும், பதிலாக அமெரிக்கக் காப்புரிமைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படியும் நிர்பந்திக்கிறது அமெரிக்கா.

அமெரிக்க கம்பெனியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கச் சட்டப்படி நிவாரணம் கிடையாது; இந்தியர்கள் உற்பத்தி செய்யும், கண்டுபிடிக்கும் பொருள்களுக்கு இந்திய சட்டப்படி உரிமை தரக் கூடாது என ஆட்டம்போடும் அமெரிக்காவிற்கு தாளம்போடும் இந்திய ஆட்சியாளர்களை இன்னும் விட்டு வைக்கவேண்டும்!

படிப்பகம்